MADRAS GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS SERIES. No. 51.

அந்தாதிக் கொத்து

ANTĀDI-K-KOTTU

Edited by

T. CHANDRASEKHARAN, M. A., L. T.,
Curator, Government Oriental Manuscripts Library, Madras,

AND THE STAFF OF THE LIBRARY.

(Prepared under the orders of the Government of Madras.)

1956

Price, Rs. 2-10-0.

Dorson Press, 2/47, Royapettah High Road, Mylapore, Madras-4.

பொருளட்டவணை

		பக்கம்
i.	முன்னுரை (ஆங்கிலம்)	iii
ii.	முன்னுரை (தமிழ்)	xi
1.	கணபதி யந்தாதி	1
2.	திருவரங்கப் பதிற்றுப்பத் தந்தாதி ...	7
3.	சேடமலைப் பதிற்றுப்பத் தந்தாதி ...	27
4.	திருவாவினன்குடி பதிற்றுப்பத் தந்தாதி ...	49
5.	திருமங்கை கரும்பேசர் பதிற்றுப்பத் தந்தாதி	69
6.	திருவெவ்வுளூ ரந்தாதி	87
7.	மதுரை யமக வந்தாதி	105
8.	சடக்கர வந்தாதி	119
9.	சுப்பிரமணிய ரந்தாதி	135
10.	சௌந்தரி யந்தாதி	149
11.	சித்த ரந்தாதி (உரையுடன்) ...	177
12.	சிஷ்ட ரந்தாதி	187
13.	செய்யுள் முதற்குறிப் பகராதி ...	189
14.	பிழையுந் திருத்தமும்	200

INTRODUCTION

The Tamil poetry is replete with several etymological characteristics and remains a grand grammatical structure supported by numerous sub-structures, which may be grouped as forming ninety-six Prabandhas.

"Antadi" is one of the ninetysix divisions which the Tamil language proudly possesses. Each of the division is known as "Prabandham" and Antadi is one amongst them. The word "Antadi" is a derivation of Sanskrit and contains two words "Antam" and "Adi" which signify "End" and "Beginning". The poetical beauty of this series of Prabandham is that the end of a piece of verse forms the beginning of the next piece. Hence it is called Antadi.

The suffix–it may be the last word, letter or even sound-finish–of a stanza will form the prefix of the subsequent stanza. The whole piece will have this peculiarity. There are two kinds of "Antadi" in particular. One contains ten sets, each having ten verses of particular form of poetry. The other contains at a stretch one hundred verses of the same form of poetry—such as Venba and Kattalai-k-kalitturai.

"Antadi" has been recognized as containing the foregoing characteristics and the ancient grammarians have borne out this conclusion amply well. However, the most ancient grammarian "Tolkappiyar" does not seem to have mentioned this particular Prabandham in his work "Tolkappiyam". He has of course spoken about such new ideas that may adorn Tamil Poetry at a later, date and has classified it to be a "Feast". Later, a commentator of Tolkappiyam (Perasiriyar), in connection with "Ceyyuliyal", has particularly mentioned that Antadi is to be classified under this head "Feast" (Virundu).

Nammalvar-the great muse and a very great Vaishnava Saint and Scholar—extolled as the biggest

of the twelve Alvars—has sung extempore about one thousand and odd verses about God. It is most characteristic to note that all of them come under "Antadi".

Most of the Antadi Prabandhams are in praise of God. It is not anything to be wondered at, especially when we bear in mind that all great scholars of yore lived for God in the true sense of the term and no wonder they versified about the one nearest to their hearts—that of God.

Antadi especially has all the merits of a high standard in literature. It maintains a truly high tradition in the form, presentation and meaning.

The Antadi-k-kottu series now being published contain 12 such Antadi pieces, preserved among the manuscripts of this Library.

1. GANAPATI ANTADI

This Antadi is in praise of Lord Ganesa who is always prayed first in order that all impediments (for the work launched) may be removed by His infinite grace. He is called "Vighnesvara" after this age-old custom.

In this piece there are thirty-two stanzas in His praise. Although it is customary that Antadi contains one hundred or more stanzas, this Antadi seems to be an exception to the generality and it is presumed such form also has been in vogue.

The author of this work is not known. This is based on a single palm-leaf manuscript described under No. D. 242.

2. TIRUVARANGA-P-PATIRRU-P-PATTANTADI

Sri Rangam and the presiding Deity in the great temple there-Lord Ranganatha—are the recipients of deep reverence, homage and Bhakti from the earliest days. Almost all Alvars have sung in praise of Sri Ranganatha and many more scholars and Bhaktas have lost themselves in adoration of this Deity. "Pillai-p-Perumal Aiyangar is one such erudite scholar and a

great exponent of the Bhakti Bhava He has sung several Prabandhas in praise of Lord Ranganatha, whose grace has been inimitably and forcefully brought out in his several Prabandhas, such as Tiruvaranga-t-tantadi etc.

This piece is called "Tiruvaranga-p-Patirru-p-pat tantadi" because it contains ten different sets of ten verses each, all in praise of the Lord at Tiruvarangam.

All these songs are highly devotional and the author has artistically handled much of the twelve great Alvars—the formost Vaishnava saints.

The name of the author seems to be "Venkata-caladasa" as it appears in the last stanza. This Antadi has been published from a palm-leaf manuscript described under No. D. 2302. There is also a restrored copy ot this manuscript under No. R. 1515.

3. SEDAMALAI-p-PATIRRU-p-PATTANTADI

Tirupati and Sri Venkatesvara are perhaps the most widely known Kshetram and Deity respectively. From the common man, deeply caught in world liness, to the highest spiritual aspirant, all have bowed before this Great "Personal-God"-Lord Srinivasa. It is about Him and Tirupati that the Sedamalai Patirruppat-tantadi seems to have been sung. The style is full of peculiarity and at the same time brings about emotion and devotion.

The author, who is evidently a very great Tamil Scholar, seems to be a disciple of Vallur Devaraja Vallal. It is probably this Devaraja Vallal who is the author of Kucela Upakhyanam. The name of the author of this Antadi, however, remains unknnown. This Antadi is quite different from "Sedamalai Antadi" whose author is "Pallikondan Pillai".

This is based on a single palm-leaf manuscript described under No. D. 253. A restored copy of the same is available under the No. R. 135 (b).

4. TIRUVAVINANKUDI PATIRRU-P-PATTANTADI

This Antadi piece of 100 songs is in praise of Lord Siva at Tiruvavinankudi. This place is situated on the North bank of Palar in Tondaimandalam.

The author sings the praises of Lord Siva and His Heavenly Consort Amirtavalli. All these songs touch the heart of the reader and he is imbued with loving devotion to Lord Siva.

From the post-script to this poetical piece, it is understood that the author is "Subrahmanya Munivar", son or a disciple of the much renowned Ambalavana Desikar who had been at one time head of the Tiruvavaduturai Adinam.

This is based on a palm-leaf mannscript described under No. D. 257. There is also a restored copy available under No. R. 135 (d).

5. TIRUMANGAI KARUMBESAR PATIRRU-P-PATTANTADI.

This Antadi is sung in praise of Lord Siva known as "Karumbesar", the presiding Deity at Tirumangai. The style is simple and lucid and it is no wonder one loses himself completely in the devotion evoked by this piece.

Only 86 verses are available in this Antadi and no light is thrown about the other missing songs. The author too is not known.

This is based on a palm-leaf manuscript under No. R. 5019. A restored copy of this manuscript is also available here under No. R. 5341. The manuscript was purchased in 1954-55 from Sri Singaravelu Kavirayar of Mitilai-p-patti.

6. TIRUVEVVULUR ANTADI

This Antadi is in praise of Sri Vira Raghava-Perumal who is the presiding Deity in the temple at Tiruvevvulur now known as Trivellore in Chingleput district. This Antadi consists 100 songs and special

mention should be made about the various "Citrakavis" such as Tribhangi etc. A detailed note has been given for every such Citrakavi, wherever it appears in the text. The author seems to be one "Narayanadasan".

The present work is based on a palm-leaf manuscript described under No. D. 258. There is a restored copy of the same under No. R. 1704.

7. MADURAI YAMAKA ANTADI

This Antadi is in praise of Lord Cokkanatha svami in Madurai The main characteristic of this piece is that it is based on "Yamakam" details of which are given in the foot-note.

The author of this work is Palapattadai Cokkanatha Kavirayar, son of Kanakku Chokkalingam Pillai of Madurai. The author is a contemporary of Vijaya Ragunatha Sethupathi of Ramnad. Dr. U. V. Swaminatha Iyer, the great Tamil scholar, has published three works "Tevaiyula" "Alakar Killai-vidu-dutu" and "Madurai Mummani-k-Kovai" of the same author.

As there were only 14 verses in the original manuscript of this library under No. D. 262, the remaining verses were copied from a palm-leaf manuscript of the Antadi preserved in the Mahamahopadhyaya Dr. U. V. Swaminatha Iyer Library, Adyar.

8. SHADAKSHARA ANTADI

This Antadi about Lord Subrahmanya seems to have been sung by Agastya. Cariyai, Kiriyâi, Yogam and Jnanam are the four different classifications in this piece containing 102 songs. Details may be found in the Tamil Introduction. This edition is based on a palm-leaf manuscript described under No. D. 250 and compared with the manuscripts bearing Nos. R. 1228 and 1890.

9. SUBRAHMANYAR ANTADI

This Antadi, in praise of Lord Subrahmanya, at Uttaramerur in Chingleput district, is noteworthy, since the author has composed the whole piece in "Venba" metre. The name of the author, however, is not known.

This work is based on a palm-leaf manuscript purchased in 1916-17 from Sri. C. V. Jambulingam Pillai of Mylapore, bearing No. R. 351. There is a restored copy of the same work under No R. 3771.

10. SAUNDARI ANTADI

This Antadi is in praise of Goddess Ambigai and contains 100 songs. It is to be noted that each song is of different type and such a feat in composing Antadi is rarely encountered. As such, this is of great value to ardent lovers of Tamil literature. The name of the author is not known.

This work is based on a palm-leaf manuscript described under No. D. 254. There is a restored copy of the same work bearing No. R. 1703.

11. SIDDHAR ANTADI

This Antadi also is in praise of Goddess Ambigai. There are only 22 verses in this Antadi and a commentary also is available. This is also published along with the Antadi. The names of the authors of both the Antadi and the commentary are not known. This work is based upon a palm-leaf manuscript described under No. D. 252. There is also a restored copy available in this library under No. R. 135 (a).

12. SISHTAR ANTADI

This Antadi too is in praise of Goddess Ambigai. Only five verses are available in the original manuscript.

The name of the author is not known. This work is based on a single palm-leaf manuscript described under No. D. 251.

I have to express my thanks to Srimathi Rukmini Devi, the Adhyaksha of the Mahamahopadhyaya Dr. U. V. Swaminatha Iyer Library, Adyar, Madras, for permitting me to copy the eighty-seven verses of Madurai Yamaka Antadi which were not available in the manuscript of this library and to compare the Shadakshara Antadi with the manuscript available in their Library.

I must also thank Vidvan V. S. Krishnan, Pulavar M. Pasupathi and Vidvan E. B. Venugopal, Tamil Pandits of this Library for preparing the press copy and correcting the proofs.

The Dorson Press have also to be thanked for the neat execution of the printing of the work within a short period.

Madras,
15th February 1956.

T. CHANDRASEKHARAN,
Curator,
Govt. Oriental Manuscripts Library.

ஸ்ரீ :

முன்னுரை

தமிழ்மொழியிலுள்ள தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களில் அந்தாதி என்பதும் ஒன்று. அந்தாதி என்ற தொடர் முதல் பாடலின் அந்தத்தை அடுத்த பாடலில் ஆதியாக வுடையது எனப் பொருள்படும். வடமொழித் தொடர்; தீர்க்க சந்தி. அந்த—ஆதி எனப் பிரிக்கலாம். அந்தாதியாவது, முன்னின்ற செய்யுளின் இறுதியிலுள்ள எழுத்தாயினும், அசையாயினும், சீராயினும், அடியாயினும் அடுத்து வருஞ் செய்யுளின் முதலாக அமையும்படி பாடுவது. இவ்வந்தாதி நூற்றந்தாதி, பதிற்றந்தாதி எனப் பலவகையாகப் பாடப் பெறும். வகைக்குப் பத்துப் பாடல்களாகப் பலவகைப் பாக்களில் நூறு பாடல்கள் அந்தாதித் தொடையாற் பாடுவது பதிற்றந்தாதி அல்லது பதிற்றுப்பத் தந்தாதி எனப்படும். நூறு வெண்பாவினாலேனும், நூறு கட்டளைக் கலித்துறைகளினாலேனும் அந்தாதித் தொடை வரப் பாடப்படுவது நூற்றந்தாதியாம். "நூறு வெண்பா நூறு கலித்துறை, கூறுதல் நூற்றந் தாதிக் கோளே." என்பது இலக்கண விளக்கப் பாட்டியல். எனவே, அந்தாதி என்னும் பிரபந்தம் சொற்கள் தொடர்ந்து கோவையாக வருதலையே முதல் நோக்கமாகக் கொண்டது என்பது நன்கு புலப்படும். "செய்யுளந் தாதி சொற்றொடர் நிலையே" என்ற தண்டியலங்கார நூற்பாவும் இக்கருத்தினை வலியுறுத்தல் காண்க.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனார் செய்யுளியலில், "விருந்தே தானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" என்று கூறியுள்ள நூற்பாவுக்கு "புதுவது கிளந்த யாப்பின் மேற்றென்ற தென்னையெனின் புதிதாகத் தாம் வேண்டிய வாற்றாற் பல செய்யுளுந் தொடர்ந்துவரச் செய்வது; அது, முத்தொள்ளாயிரமும், பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதிச் செய்யுளுமென உணர்க" என்று பேராசிரியர் உரை கூறினமையின் அந்தாதி யென்னும் பிரபந்தம் "விருந்து" என்ற வகையின்பாற் படும் என உணரலாம். பிற்கால இலக்கியங்களில் இவ் வந்தாதியைச் சிறு காப்பியத்துள் அடக்குவர்.

வைணவ ஆழ்வார்களில் தலைசிறந்தவராய நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழி என்னும் பிரபந்தத்திலுள்ள ஆயிரஞ் செய்யுளும் அந்தாதித் தொடையால் அமைந்திருப்பது நோக்கத்தக்கது.

இவ் வந்தாதிப் பிரபந்தங்களெல்லாம் பெரும்பாலும் கடவுளர் தோத்திரங்களாகவே அமைந்துள்ளன எனலாம். சிறுபான்மை ஞானசாரியர், அரசர் முதலியோரைப் புகழ்ந்தும் பாடப்படுவதுண்டு. "அவனருளாலே அவன்றாள் வணங்கி" "அவனன்றி யோரணுவு மசையாது" என்ற தத்துவத்தினை யுணர்ந்த பெரியோர்களால் பாடப்பெறும் இத்தகைய பிரபந்தங்கள் இறைவனைக் குறித்த தோத்திரங்களாகவே யன்றி மற்றென்றாயிருத்தல் கூடுமோ ?

இங்ஙனம் பாடப்பெற்றுள்ள அந்தாதிகள் பலவும் சொல்லழகு பொருளழகுகளிற் சிறந்து, தெய்வ மணங் கமழ விளங்குகின்றன. திருவரங்கத் தந்தாதி, அழகரந்தாதி, திருக்கருவைக் கலித்துறை யந்தாதி, திருக்கருவை வெண்பா வந்தாதி முதலாயின இவ்வகையில் அமைந்தனவாம்.

வெளியிடப்பெறும் இந்தத் தொகுதியினுள் பன்னிரண்டு அந்தாதிகள் அடங்கியுள்ளன. இவற்றுள் பதிற்றுப்பத் தந்தாதி நான்கு. வெண்பா வந்தாதி ஒன்று. பல்வகை விருத்தங்களாலாகிய அந்தாதி ஒன்று. ஏனைய கலித்துறையான் அமைந்தன.

நூல்

1. கணபதி யந்தாதி

இது, விக்கினங்களை நீக்க வல்ல விநாயகப் பெருமானைப் பற்றிப் பாடப்பெற்ற தோத்திரச் செய்யுட்களைக் கொண்டது. இதனுள் முப்பத்திரண்டு கட்டளைக் கலித்துறைகள் உள்ளன.

"கணபதியந் தாதி கலித்துறையா யெண்ணான்
கணபதிமேல் சொல்லமுற்றுங் காப்பு."

என்னுங் கடவுள் வாழ்த்துச் செய்யுளடிகளும்,

"இதுநாலெண் கலித்துறையா யெண்ணான்கு ணமமல
ரிணைக்குந் தாரை"

என்று நூலின் இறுதியில் கூறப்பெற்றுள்ள விருத்தமும் இதனை உணர்த்துகின்றன. இந்நூலில் விநாயகப் பெருமானின் திருவுருவச் சிறப்பும், மக்களாகப் பிறந்தோர் அனைவரும் அப்பெருமானை வணங்கவேண்டும் என்றும், அவனை வணங்கினால் எல்லாப் பயனையும் இம்மையிலும் மறுமையிலும் பெறலாம் என்றும் நன்கு உணர்த்தப் பெற்றுள்ளன. தலையால் கணபதிப் பெருமானை வணங்கியும், நாவினால் அவ் விறைவனைப் போற்றியும், காதுகளில் அவன் புகழினைக் கேட்டும், கைகளினால் அக் கடவுள் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலைத் தூய்மை செய்தும், கண்படைத்த பயனைப் பெறத் தும்பிக்கைப்பிரானைத்

தரிசனம் செய்தும் வந்தால், அப்பெருமானது திருப்பாதங்கள் நம்மை ஆட்கொள்ளும் என்று இந்நூலில் விளக்கப்பட்டிருக்கிறது. பின்வரும் பாடல் இதனைத் தெரிவிக்கும் :—

"பூண்டிடுஞ் சென்னி புகழ்ந்திடும் நாக்குபாக் களையன்பாய்
வேண்டிடுங் காது விளக்கிடும் பாணி விரைந்துநித்தந்
தீண்டிடு நெஞ்சந் தரிசிக்குங் கண்வாய் செய்திடுங்கா
லாண்டிடு நீட்ட புழைக்கைக் கடவு ளடியிணையே".
[பா : 17.]

அடியவர்கள் விநாயகப் பெருமானுக்கு உணவாகப் படைக்கும் பொருள்கள் இவையென்று கீழ்க்காணும் பாடலில் அழகுற எடுத்துக் கூறப்பெற்றிருக்கின்றன :

"வகையா மமுது பருப்புநெய் பாறயிர் வர்க்கவகைத்
தொகைமோ தகமே யெள்கட லைப்பொரி தோசைவடை
தகைதீர் குரும்பை விடலை யவல்பழம் சர்க்கரைதேன்
கு[றை]கவாய் வயிற்றற் குணவாய்ப் படைத்திடு
[வார்பத்தரே".
[பா : 8.]

இங்ஙனம் விநாயகப் பெருமானை வழிபட்டு அப்பிரானது கருணையினால் இவ்வுலகத்தவர் அடையும் பயன்கள் இவையெனப் பின்காணும் செய்யுளில் நன்கு உணர்த்தப்பட்டிருக்கின்றன :

"புத்தியும் வித்தையும் போதமும் ஞானமும் புண்ணியமும்
சத்தியுந் தானமுந் தர்மமும் நேமமுஞ் சத்தியமும்
பத்தியும் பண்பும் குணமும் புகழுநற் பாக்கியமும்
முத்தியு மற்றெப் பொருளுந் தருங்கை முகனருளே".
[பா : 12]

இவ்வாறு எளியநடையில் பக்திச் சுவை ததும்பப் பாடப்பெற்ற இவ் வந்தாதி முப்பத்திரண்டு பாடல்களோடு முடிகின்றது. நூறு பாடல்கள் எல்லையெனினும் சிறுபான்மை குறைந்தும் வரும் என்பதற்கு உதாரணமாக இவ் வந்தாதியைக் கொள்ளலாம். இவ்வரிய நூலை இயற்றி நமக்கு அளித்த ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

மூலப் பிரதியில் பல இடங்கள் சிதைந்து உள்ளமையின் சில பாடல்களின் முழு உருவமுங் கிடைக்கவில்லை. ஒன்றிரண்டு இடங்களில் இவ்வாறிருக்கலாம் எனக் கருதி [ ] இக் குறிகளுக்கு இடையில் சில எழுத்துக்கள் சேர்க்கப்பெற்

றுள்ளன. பாட்டிலுள்ள எழுத்துக்களில் தவருக உள்ளவை என்று தோன்றியன, ( ) இந்தக் குறியீடுகளுக்கு இடையே அமைக்கப்பெற்றுள்ளன. எழுத்துக்கள் விடுபட்டுப் போன இடங்கள்....... இங்ஙனம் குறிக்கப் பெற்றிருக்கின்றன. இவ் வடையாளங்க ளனைத்தையும் பின்வரும் அந்தாதிகளிலும் ஆங்காங்குக் காணலாம். இவ் வந்தாதி, நூல்நிலைய காட்லாக்கு D. 242-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டுள்ள பனையோலைப் பிரதியை ஆதாரமாகக் கொண்டு வெளியிடப் பெறுகின்றது. சீர் முதலியன சில பாடல்களில் ஒழுங்காகப் பிரிக்க இயலவில்லை. எழுத்துப் பிழை முதலியவற்றை அறிஞர்கள் பொறுப்பார்களாக.

2. திருவரங்கப் பதிற்றுப்பத் தந்தாதி

இது, "கோயில் திருமலை பெருமாள் கோயில்" என்று வைணவர்களால் போற்றப்பெறும் தலங்களில் முதற்கண் உளதாய கோயில் என்னும் திருவரங்கத்தில் ஆதிசேடன் மீது கண்வளர்ந்தருளும் அரங்கநாதப் பெருமானைப் பற்றிப் பாடப் பெற்றுள்ள பதிற்றுப்பத் தந்தாதி யாகும். அரங்கமென்பது ஆற்றிடைக்குறை. காவிரியாற்றின் இடையிலே ஏழு மதில் சூழ்ந்த திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள அரங்கநாதனை ஆழ்வார்கள் அனைவரும் தம் பாமாலைகளால் போற்றியுள்ளனர். **பிள்ளைப்பெருமாளையங்கார்** என்னும் திவ்வியகவி இத்தலத்து இறைவனைக் குறித்துப் பல பிரபந்தங்கள் இயற்றியுள்ளார்.

இவ் வந்தாதி சிறந்த தோத்திர நூலாகும். எம்பெருமானின் கல்யாண குணங்களில் ஈடுபட்ட இந்நூலாசிரியர் மிக உருக்கமாகப் பாடியுள்ளார். ஆழ்வார்கள் பிரபந்தங்களில் மிக்க ஈடுபாடுடையவர் இந்நூலாசிரியர் என்பது இந்நூற் பாடல்களால் நன்கு விளங்குகின்றது. திருவரங்கத்து இறைவனை வணங்கி வினைகளைப் போக்குவோம்; அவனைத் தவிர துணை யாருமில்லை; அப்பிரானே எல்லாப் பொருள்கட்கும் தலைவன்; எவ்வித இடர் ஒருவருக்கு வரினும் அப்பெருமான் கருணையினுல் நெருப்பில்பட்ட பஞ்சுபோல் அது அழியும் என்று பல பாடல்களில் அழகுபட எடுத்தியம்புகின்ருர். கொடிய பாவம் செய்தவர், மிகுந்த தீச்செயல்களை உடையவர், தினந்தோறும் கெட்ட நடத்தையிலேயே உழல்பவர் யாவராயினும் முற்பிறப்பில் செய்த நல்வினையின் பயனுல் அவர்கள் வாயினுல் திருவரங்கம் என்று ஒருமுறை விளம்புவரேல், தேவர்கள் எல்லோரும் மதிக்கும்படி பேரின்பப் பதவியையடைவர் என்று கூறுகின்ருர். கீழ்க் காணும் பாடல் இதனை விளக்குகின்றது :

"சூழ்ந்திட்டார் கொடும்பவமே சொன்னுர் தீமை
தொகுத்திட்டார் வெவ்வினையே துணிவி னுளும்
வீழ்ந்திட்டார் வேட்கைவெள்ளத் தன்னு ரேனும்
விதிவசத்தா லரங்கமென்றே விளம்பி னுரே

வாழ்ந்திட்டார் பேரின்ப வமுத வாரி
யமைவுற்று ரடியரொடு மமல வீட்டுள்
வாழ்ந்திட்டார் வானொரு மலரு ளோனும்
வானவரு மேனையரு மதிக்கத் தாமே".

[பா : 4.]

இப்பாடல்,

"பாதியா யழுகிய கால்கைய ரேனும்
பழிதொழிலு மிழிகுலமும் படைத்தா ரேனு
மாதியா யரவணையா யென்ப ராகில்
அவரன்றோ யாம்வணங்கு மடிக ளாவார்
சாதியா யொழுக்கத்தால் மிக்கோ ரேனுஞ்
சதுமறையால் வேள்வியால் தக்கோ ரேனும்
போதினுன் முகன்பணியப் பள்ளி கொள்வான்
பொன்னரங்கம் போற்றுதார் புலையர் தாமே."

என்னும் திருவரங்கக் கலம்பகப் பாடலை நினைவுறுத்துகின்றது. திருவரங்கப் பெருமை, ஆழ்வார்கள் சிறப்பு முதலான பல செய்திகள் இந்நூலில் கூறப்பெற்றுள்ளன. கடவுள் வாழ்த்துப் பாடல்கள் நீங்கலாக நூறு பாடல்கள் இந்நூலில் உள்ளன. நூலாசிரியர் பெயரைத் தெரிவிக்கும் பாடலொன்று இறுதியில் உள்ளது. 23, 24-ஆம் பாடல்கள் மூலப் பிரதியில் காணப்பெற வில்லை. இந்நூலாசிரியர் சிறந்த தமிழ்ப் பயிற்சியும் வைணவ நூல்களில் ஆழ்ந்த அறிவும் உள்ளவர் என்பது இவர் பாடல் களால் விளங்குகின்றது. பாடல்கள் சிறந்த நடையுடையன. இது, பத்துப் பத்துப் பாடல்கள் ஒவ்வொரு வகைப் பாவினுல் பாடப் பெற்றுள்ள பதிற்றுப்பத் தந்தாதி யாகும். பின்வரும் பாடலால்,

"பிறங்குலக மிசையோங்கு பெருவீடாந் திருவரங்கம்
பெரிய கோயி
லறங்குலவ வருள்புரியு மழகியநம் பெருமாள்பொன்
னடிமே லன்பின்
நிறங்குலவ பதிற்றுப்பத் தந்தாதித் தமிழ்மாலை
நிலவ மேன்மைத்
திறங்குலவு குணநேசன் வேங்கடா சலதாசன்
செய்தான் மாதோ."

[திருவரங்கப் : இறுதிப் பாடல்.]

வேங்கடாசலதாசன் என்பது இந் நூலாசிரியரது பெயரென்று தெரிகிறது. இவரைப் பற்றிய வேறு செய்தியொன்றும் அறியக் கூடவில்லை. இது, இந் நூல்நிலைய காடலாக் D. 2302-ஆம்

எண்ணின்கீழ் வருணிக்கப் பெற்றுள்ள பனையோலைப் பிரதியி னின்றும் பெயர்த்தெழுதப்பட்டு இங்கு வெளியிடப் பெறுகின்றது. மூவருடக் காட்லாக்கு 1515-ஆம் எண்ணில், இதனைப் பெயர்த்தெழுதிய பிரதியொன்றும் உள்ளது.

3. சேடமலைப் பதிற்றுப்பத் தந்தாதி

சேடமலை என்பது திருவேங்கடத்தைக் குறிப்பதாக விருக்கலாம் என்று தோன்றுகின்றது.

"என்று சூழ்சிக ரத்திரு வேங்கடம்
விரவி மீதி லினிதுறை கொண்டலே"

என்ற இவ் வந்தாதியின் 18-ஆம் பாடல் இதனை விளக்குகின்றது. இது, கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் தவிர, நூறு செய்யுட்களையும், இறுதியில் வாழ்த்துச் செய்யுளொன்றனையும் கொண்டுள்ளது. சேடமலையில் எழுந்தருளியுள்ள பிரானைப் பற்றிப் பாடப்பெற்ற பதிற்றுப்பத் தந்தாதியாகும் இது. மிடுக்கான நடையுடையது. படிக்குந்தோறும் மனநெகிழ்ச்சியைத் தர வல்லது. திருவேங்கடச் சிறப்பும், இறைவன் பெருமையும், எம்பெருமானின் அவதார விசேடங்களும் இந்நூலில் விளங்க எடுத்துக் கூறப்பெற்றுள்ளன. இந்நூலாசிரியர் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் வைணவ சாத்திரங்களிலும் சிறந்த பயிற்சி பெற்றவர் என்று திண்ணமாகக் கூறலாம்.

"சீராரு மதிவதனத் தெரிவையர்கள் மாடமிசைச்
சென்றுங் கெய்து
மேராறு மரம்பையரோ டிரணியகந் துகமாடு
மெழில்வல் லூரன்
பேராருந் தமிழியலெற் கோதியருள் புரிகிறவன்
பிறங்கு கஞ்சத்
தாராரும் புயனெவரும் புகழ்தேவ ராசவள்ளல்
தனைத்து திப்பாம்."

[பா: 3.]

என்ற பாடலால், இந்நூலாசிரியருக்குத் தமிழறிவுறுத்திய ஆசிரியர் வல்லூர் தேவராச வள்ளல் என்பவர் எனத் தெரிகின்றது. நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர் பெருமானாகிய திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் மாணாக்கர்களில் வல்லூர் தேவராசப்பிள்ளை என்பவர் ஒருவர். "குசேலோபாக்கியானம்" என்னுந் தமிழ் நூலை இயற்றியவர் இவரே.

இவ் வந்தாதியில் குறிப்பிடப்பெற்றுள்ள "வல்லூர் தேவ ராச வள்ளல்" என்பவர் மேற்குறிக்கப் பெற்றவராக இருக்க லாம் என்று தோன்றுகின்றது. இவர் சிறந்த செல்வந்தராக விளங்கியவர் என்பது; "இரணியகந் துகமாடும்" என்ற தொடரால் விளங்குகின்றது. இரணியம்-பொன்; கந்துகம்-பந்து. வீட்டு மெத்தையில் மாதர்கள் தேவ மகளிருடன் பொற்பந்து ஆடுவார்களாம்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பெங்களூரில் தங்கி யிருந்தபொழுது தேவராசப் பிள்ளையவர்கள் முதன்மையாக விருந்து கவனித்து வந்ததாக மகாமகோபாத்யாய ஐயரவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இங்ஙனம் சிறந்து விளங்கிய தேவராசப் பிள்ளையவர் களிடம் இவ் வந்தாதி ஆசிரியர் தமிழ்ப் பயிற்சி பெற்றவர் எனக் கொள்ளலாம். எனவே, அவர் காலமாகிய 19-ஆம் நூற்றாண் டில் வாழ்ந்தவர் இந்நூலாசிரியர் என்பது பொருந்தும்.

"இந்நூல்" **பள்ளிகொண்டான் பிள்ளை** என்பார் இயற்றிய '**சேடமலை யந்தாதி**'யினின்றும் வேறுபட்டது. இவ் வந்தாதி இந் நூல்நிலைய காட்டலாக்கு D. 253-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப்பட்டுள்ள பனையோலைப் பிரதியை ஆதாரமாகக் கொண்டு வெளியிடப்படுகின்றது. மூவருடக் காட்டலாக்கு 135 (b) எண்கொண்ட மற்றொரு காகிதப் பிரதியுமுள்ளது. இது முன்னைய பனையோலைப் பிரதியைப் பெயர்த்து எழுதி வைக்கப்பெற்றதாகும்.

4. திருவாவினன்குடி பதிற்றுப்பத் தந்தாதி

இது, திருவாவினன்குடி என்னுந் தலத்தே கோயில் கொண்டுள்ள சிவபெருமானைப் பற்றிப் பாடப்பெற்றுள்ள பதிற்றுப்பத் தந்தாதியாகும். இந்நூலில் குறிக்கப்பட்டுள்ள திருவாவினன்குடி என்பது தொண்டை நாட்டில் பாலாற்றுக்கு வடகரையில் உள்ளதொரு சிவதலமாகும். அங்கு அமிர்தவல்லி யம்மையுடன் ஆதிகைலாசநாதராகிய இறைவன் எழுந்தருளி யிருக்கின்றார். இதனை :—

"பாலிவட கரைத்திருவா வினன்குடிநா மப்பதிற்றுப்
 பத்தந் தாதி
மாலிகையைப் பெண்ணமிர்த வல்லிமண வாளரடி
 வனைய நல்கும்"

[பாலி : பாலாறு.]

என்னுங் கடவுள் வாழ்த்துச் செய்யுளடிகள் நன்கு விளக்கும். சிறந்த தோத்திரப் பாடல்கள் கொண்டதாக இந்நூல் விளங்கு கின்றது. உதாரணமாக ஒரு பாடல் காண்போம் :

"பெருமான் ருணு வீசானன்
　　பெம்மான் பித்தன் பிறைசூடி
கருமா மிடற்றன் காபாலி
　　கால கால னுருத்திரனென்
றருள்கூர் திருவா வினன்குடிவாழ்
　　மும்மா ஞதி கயிலாசன்
திருநா மங்கள் பலவோதிச்
　　சிறியேன் வழுத்தப் பெற்றேனே".

[பா : 27.]

இப்பாடல் மனத்தை உருக்கும் வண்ணம் அமைந்துள்ளது. வாய் நிறைந்து பாடும் பாடலாகிய இது, கேட்பவர்கட்கெல்லாம் பக்தியுணர்ச்சி உண்டாக்க வல்லது என்பதில் தடையேது? இது போன்ற பாடல்கள் பல உள்ளன. இதனுள், காப்புச் செய்யுள் தவிர, நூறு பாடல்கள் இருக்கின்றன. இந்நூலின் இறுதியில் பின்வருமாறு ஒரு குறிப்புக் காணப் பெறுகின்றது :

"கீலகஹு தைமீ 21வ சுக்கிரவாரத்தில் உத்தராட நக்ஷத்திரத்தில் பாடி நிறைவேறி யெழுதி அரங்கேற்றினது ; இந்த அந்தாதி, திருவாவடுதுறை நமச்சிவாயகுரு பரம்பரையில் அம்பலவாண தேசிகருக்குப் புத்திரனுன சுப்பிரமணிய முனிவன் பாடியது. "ஆதிகைலாச நாதர்துணை, அமிர்தவல்லியம்மை பாதாம்புயந்துணை"

இதனுல் இவ்வந்தாதியை இயற்றியவர் பெயர் **சுப்பிரமணிய முனிவர்** என்பதும், திருவாவடுதுறை ஆதீனத் தலைவராக விளங்கிய அம்பலவாண தேசிகரின் மாணவர் என்பதும் தெரிகின்றது. புத்திரன் என்பது மாணக்கர் என்னும் பொருளில் வழங்கப் பெற்றதாகக் கருதலாம்.

இது, இந் நூல்நிலைய காடலாக்கு D. 257-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பெற்றுள்ள பனையோலைப் பிரதியினின்றும் பெயர்த்தெழுதி வெளியிடப்படுகின்றது. இந்தப் பிரதியினின்றும் பிரதி செய்யப்பட்ட வேறொரு பிரதியுமுள்ளது. அதன் எண் R. 135(d).

5. திருமங்கை கரும்பேசர் பதிற்றுப்பத் தந்தாதி

திருமங்கை கரும்பேசரைப் பற்றிய பதிற்றுப்பத் தந்தாதி என்பது இத்தொடரின் பொருள்.

"துதிக்குந் **திருமங்கை வாழ்கரும் பேசர்** துணைமலர்த்தாள்
　பதிக்கும் **பதிற்றுப்பத் தந்தாதி** சொல்ல."

என்ற இந்நூலின் கடவுள் வாழ்த்துச் செய்யுளால் இதனை யுணரலாம். கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் இரண்டினைத் தவிர, 86 செய்யுட்களே மூலப் பிரதியிலுள்ளன. மற்ற செய் யுட்கள் காணப்பெறவில்லை. அந்தாதி குறையாகவே உளது. ஒரு பிரதியே இருந்தமையால் உள்ளவரை பிரதிசெய்யப் பெற்று வெளியிடப்படுகின்றது. இந்நூல் எளிய இனிய நடை யுடையது. இறைவனிடம் பக்தியை வளரச் செய்வது.

"கண்ணாடி தனில்யானை காண்பார் போலென்
கருத்திலுனைக் காண்பதெந்தக் காலம்........"

[பா : 48.]

என்று இவ்வாசிரியர் பாடியுள்ளமை எவர் மனத்தையும் இளக்குந் தன்மைவாய்ந்தது. இவ் வரிய நூலை இயற்றினார் இன்னார் என்று தெரியவில்லை. இவ் வெளியீடு மூவருடைக் காடலாக்கு 5019-ஆம் எண் கொண்ட பனையோலைப் பிரதியினை ஆதாரமாகக் கொண்டது. இந்தப் பிரதி, மிதிலைப் பட்டி, திரு. சிங்காரவேலு கவிராயர் என்பாரிடமிருந்து 1954-55-ஆம் ஆண்டில் விலைக்கு வாங்கப்பெற்றது. இதனிலிருந்து பிரதி செய்யப்பெற்ற வேறொரு பிரதியுமுளது. அதன் எண் R 5341. மூலப் பிரதியிலேயே சில பாடல்களுக்குப் பாட பேதங்களும் குறிக்கப் பெற்றிருந்தன. அவையும் அடிக் குறிப்பாக ஆங்காங்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

6. திருவெவ்வுளூரந்தாதி

இது, இக்காலத்தில் திருவள்ளூர் என வழங்கும் திருஎவ் வுள் என்னும் தலத்தில் கோயில்கொண்டிருக்கும் வீரராகவப் பெருமானைப் பற்றிய அந்தாதியாகும். கடவுள் வாழ்த்துச் செய் யுட்கள் நீங்கலாக நூறு கட்டளைக் கலித்துறைகள் கொண்டது. இனியதும் சிறந்ததுமான நடையுடையது. சொல்லழகு பொரு ளழகுகளிற் றலைசிறந்து மிளிர்வது. இதனுள், மடக்கு முதலான சொல்லணிகளும், நிரோட்டம், திரிபங்கி, பிறிதுபடு பாட்டு, கரந்துறைச் செய்யுள், காதைகரப்பு முதலான சித்திர கவிகளும் அமைந்துள்ளன. பக்திச் சுவை ததும்புவது. இதனை இயற் றியவர் **நாராயணதாசரென்**னும் பெயரையுடையவர் என்பது.

"படப்படி யோர்களுன் பேரென் னெனவிப் பவமெனும்வெவ்
விடப்பட்ட நீக்குநின் பேருரை யாவெனை மெல்லவென்பே
ரிடப்பட்ட தாகுநா ராயண தாசனென் னச்செய்தநின்
றிடப்பட்ட தாமுத்தி நன்றுநன் றெவ்வுட் டிருவூரனே".

என்னும் இவ்வந்தாதியின் இறுதிச் செய்யுளான் தெரிகின்றது. வேறு ஒன்றும் இவரைப் பற்றி அறியக்கூடவில்லை. திரிபங்கி

முதலான சித்திர கவிகளிலிருந்து பிரித்து எடுக்கக்கூடிய பாடல்கள் ஆங்காங்கு அடிக்குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. ஆருரைச் சக்கர பந்தப் பாடல் சக்கர பந்தத்துள் அமைத்துக் காட்டப்பெற்றுள்ளது. இவ்வந்தாதியில் வந்துள்ள சித்திர கவிகளுக்குத் தண்டியலங்காரம் சொல்லணியியலிலிருந்து விளக்கமும் அவ்வவ்விடங்களில் குறிக்கப்பெற்றிருக்கின்றது. இது, இந் நூல்நிலைய காடலாக்கு D. 258-ஆம் எண் கொண்ட பனையோலைப் பிரதியினின்றும் பெயர்த்தெழுதப்பட்டு அச்சியற்றி ஈண்டு வெளியிடப் பெறுகின்றது. இதனைப் பெயர்த்தெழுதிய காகிதக் கையெழுத்துப் பிரதியொன்றும் இங்குள்ளது. அதன் எண் R. 1704.

7. மதுரை யமக வந்தாதி

இது, மதுரையில் கோயில்கொண்டுள்ள சோமசுந்தரப் பெருமானைக் குறித்துப் பாடப்பெற்றதொரு யமக வந்தாதியாகும். யமகம் என்பது செய்யுளின் ஒவ்வொரு அடியிலும் வந்த சொல்லே மீண்டும் வந்து பொருள் வேறுபடுவது. இது மடக்கு எனவும் படும். இந் நூலில் வந்துள்ளது அடிமுதல் மடக்கெனப்படும். இவ் வந்தாதியில் உள்ள பாடல்களனைத்தும் இங்ஙனம் யமகமாகவே அமைந்துள்ளன. இந்நூற் சுவடியின் இறுதியில்,

“ மதுரையிலிருந்த பலபட்டடைக் கணக்கு சொக்கலிங்கம் பிள்ளை குமாரன் பலபட்டடை சொக்கநாத கவிராயர் அவர்கள் செய்த மதுரை யமக வந்தாதி க. இராமேசுர உலா க. கிளிவிடு தூது க. வளமடல் க.

சார்வரி வருஷம் ஆனி மாதம் எஉ ஆரம்பம். தை மாதம் கஉஉ முகிந்தது ” என்று எழுதப்பட்டுள்ளது.

இதனால், இந்நூலாசிரியர் பெயர் **பலபட்டடைச் சொக்கநாதக் கவிராயர்** என்பதும், மதுரையில் கணக்கர் வேலை பார்த்த சொக்கலிங்கம் பிள்ளை என்பார் இவரது தந்தையென்றும் தெரிகின்றது. இவ்வாசிரியர் இயற்றியனவாக இதனுள் கூறப்பெற்ற இராமேசுர உலா, கிளிவிடு தூது, வளமடல் தவிர, மதுரை மும்மணிக் கோவை, பத்மகிரிநாதர் தென்றல்விடு தூது என்னும் நூல்களும் இவரால் இயற்றப்பட்டனவென்று தெரிகின்றது. இவற்றுள், இராமேசுர உலா (தேவையுலா), கிளிவிடு தூது (அழகர் கிள்ளைவிடு தூது), பத்மகிரிநாதர் தென்றல்விடு தூது, மதுரை மும்மணிக் கோவை ஆகிய நான்கும் மகாமகோபாத்யாய, டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களால் வெளியிடப்பெற்றுள்ளன.

இந்நூலாசிரியர் இராமநாதபுரம் விசய ரகுநாத சேதுபதி காலத்தவர் எனத் தெரிகின்றது. இவ் வந்தாதி கடவுள் வாழ்த்துச் செய்யுள் தவிர 101 பாடல்கள் கொண்டது. இது, இந்

நூல்நிலையத்துள்ள D. 262-ஆம் எண் கொண்ட பனையோலைப் பிரதியினை ஆதாரமாகக் கொண்டு வெளியிடப் பெறுகின்றது. அதனுள் பதினன்கு பாடல்களே இருந்தன. அடையாறு, மகா மகோபாத்யாய, டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையத்தில் இவ் வந்தாதியின் பனையோலைப் பிரதியொன்று இருந்தது. அப் பிரதியிலிருந்து மற்றப் பாடல்கள் பிரதி செய்யப்பட்டு இப்பதிப்பு வெளிவருகின்றது.

8. சடக்கர வந்தாதி

இஃது, ஆறெழுத்தந்தாதி எனவும் படும். முருகப் பெருமானின் பெருமைகளை நன்கு விளக்குவது. தோத்திர வடிவில் அமைந்த பிரபந்தமாகும். நூற்றிரண்டு கட்டளைக் கலித்துறைகளைக் கொண்டு விளங்குவது. "**சரவணபவ**" என்னும் ஆறெழுத்துக்களின் சிறப்பைப் பல்வகைகளில் இந்நூல் புலப்படுத்துகின்றது. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நிலைகள் நன்கு விளக்கப்பட்டுள்ளன. இதனுள், 1-42 பாடல்கள் சரியை மார்க்கத்தையும், 43-76 பாடல்கள் கிரியையினையும், 77-87 முடியவுள்ள பாடல்கள் யோக நெறியினையும், 88-102 பாடல்கள் ஞானத்தையும் பற்றிக் கூறுகின்றன. இந்நூலில் உள்ள பல பாடல்களுக்குப் பொருள் நன்கு விளங்கவில்லை. மந்திரங்கள் பல கூறப்பட்டுள்ளன. இயன்றவரை மூலப்பிரதியிலுள்ளவாறே ஒழுங்குபடுத்தி வெளியிடப்படுகின்றது. இந் நூலின் மூலப்பிரதியிலுள்ள முதலேட்டில் இதனை இயற்றியவர் அகத்திய முனிவர் எனக் குறிக்கப் பெற்றுள்ளது. இது, இந் நூல்நிலைய காடலாக் D. 250-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப் பெற்றுள்ள பனையோலைப் பிரதியை ஆதாரமாகக்கொண்டு வெளிவருகின்றது. இன்னும் இரண்டு பிரதிகளுமுள்ளன. அவற்றின் எண்கள் முறையே: R. 1228, 1890 என்பன. அடையாறு, மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே சாமிநாதையர் நூல்நிலையத்திலுள்ள இவ் வந்தாதியின் பனையோலைப் பிரதியுடனும் சிற்சில பாடல்கள் ஒப்பு நோக்கப்பட்டுத் திருத்தஞ் செய்யப் பெற்றன. மற்றப் பிரதிகளில் காணப்பெற்ற பாட பேதங்களைத் தொகுத்து ஆங்காங்கு அடிக்குறிப்பாகக் கொடுத்துள்ளோம். இப் பதிப்பில் காணப் பெறும் "கிரக கோரம் பணைத்தென்ன" என்ற கடவுள் வாழ்த்துச் செய்யுள் மற்றப் பிரதிகளில் காணப்பெற வில்லை.

9. சுப்பிரமணிய ரந்தாதி

இது, செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் என இக்காலத்தில் வழங்கப்பெறும் வட மேரூரில் கோயில் கொண்டுள்ள முருகப்பிரானைப் பற்றிய அந்தாதியாகும். அருணகிரிநாதர் தம் திருப்புகழில் இவ்வூர் முருகனைப் பிரானைப் போற்றியுள்ளார். வெண்பாக்களால் அமைந்தது. கடவுள் வாழ்த்துச் செய்யுள் தவிர, 102 செய்யுட்களை யுடையது. நடை

சாதாரணமானது. நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. இது, நூல்நிலைய மூவருடக் காடலாக்கு 351-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப் பெற்றுள்ள பனையோலைப் பிரதியை ஆதாரமாகக் கொண்டு வெளி வருகின்றது. இப்பிரதி 1916-17-ஆம் ஆண்டில் மைலாப்பூர் ஸ்ரீ சி. வி. ஜம்புலிங்கம் பிள்ளை அவர்களிடமிருந்து விலைக்கு வாங்கப் பெற்றதாகும். இதனைப் பெயர்த்தெழுதிய வேறோர் பிரதியும் நூல்நிலையத்துள்ளது. அதன் எண் R. 3771 என்பது.

10. சௌந்தரி யந்தாதி

இது, அம்பிகை பற்றிய தோத்திரமாக அமைந்ததொரு அந்தாதியாகும். பலவகையான விருத்தங்களாலாயது. கடவுள் வாழ்த்துச் செய்யுள் நீங்கலாக நூறு பாடல்களைக் கொண்டது. நடை சாதாரணமானது. வெண்பா, கலித்துறை என்ற இரு வகைப் பாக்களில் ஒன்றுண்மாத்திர மன்றி, இவ் வந்தாதியி லுள்ள பாடல்கள் பல்வேறு விருத்தங்களான் பாடப் பெற்றுள்ளன. நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. இது, இந்நூல் நிலைய காடலாக்கு D. 254-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப்பட்ட பனையோலைப் பிரதியினின்றும் பெயர்த்தெழுதப்பட்டு, இங்கு வெளியிடப் பெறுகின்றது. இப் பிரதியினைப் பெயர்த்தெழுதப் பட்ட மற்றோர் பிரதியுமுள்ளது. அதன் எண் R. 1703.

11. சித்தரந்தாதி (உரையுடன்)

இதுவும் அம்பிகையைப் பற்றிய தோத்திரப் பிரபந்தமே. காப்புச் செய்யுள் தவிர இருபத்திரண்டு கட்டளைக் கலித்துறைகளை யுடையது. "**சித்தரந் தாதி யிருபத் திரண்டையுஞ்** செப்புவனே" என்ற கடவுள் வாழ்த்துச் செய்யுளடியால் இவ் வந்தாதியின் பெயரை யறியலாம். இதற்கு உரை யொன்றும் உள்ளது. நூலாசிரியர், உரையாசிரியர் ஆகியோர் பெயர்கள் தெரியவில்லை. இது, இந் நூல்நிலைய டிஸ்கிரிப்டிவ் காடலாக்கு 252-ஆம் எண் கொண்ட பனையோலைப் பிரதியை ஆதாரமாகக் கொண்டு வெளியிடப்படுகின்றது. இதனைப் பார்த்துப் பிரதி செய்யப்பட்ட வேறோர் பிரதியுமுள்ளது. அதன் எண் R. 135(a).

12. சிஷ்ட ரந்தாதி

இந்நூலும் அம்பிகையைப் பற்றிய தோத்திரமே. ஐந்து பாடல்களே மூலப் பிரதியிலுள்ளன. நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. டிஸ்கிரிப்டிங் காடலாக்கு 251-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப்பட்டுள்ள பனையோலைப் பிரதியினை ஆதாரமாகக் கொண்டு இப்பதிப்பு வெளிவருகின்றது.

மேற்கூறப்பெற்ற அந்தாதிகளில் பெரும்பாலான ஒரே பிரதியை ஆதாரமாகக் கொண்டு வெளிவருபவை. அதனால் சீர்பிரித்து அமைத்தலில் பிழைகள் நேர்ந்திருக்கலாம். இயன்ற வரை திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அச்சுப் பிழைகள் பல இருத்தல்கூடும். பெரும் பிழைகளாகத் தெரிந்தவற்றைத் தொகுத்துப் பிழையுந் திருத்தமும் என்ற தலைப்பில் தனியே கொடுத்துள்ளோம். அவற்றில் காணாத பிழைகளை அறிஞர்கள் திருத்திப் படிக்க வேண்டுகின்றேன்.

மதுரை யமக வந்தாதியில் 15-ஆம் செய்யுள் முதல் முடிவு வரையுள்ள செய்யுட்களைப் பிரதி செய்து கொள்ளவும், ஆறெழுத் தந்தாதியை அவர்கள் நூல்நிலையச் சுவடியுடன் ஒப்பிட்டு நோக்கவும் அன்புடன் அநுமதியளித்த அடையாறு, மகாமகோபாத்யாய, டாக்டர். உ. வே. சாமிநாதையர் நூல்நிலையத்தார்க்கு எனது நன்றியைச் செலுத்திக் கொள்ளுகிறேன்.

இந்த அந்தாதிகளை, மூலப்பிரதிகளிலிருந்து பெயர்த்து எழுதி, அச்சிடுவதற் குரியவகையில் அமைத்துக் கொடுத்த இந் நூல்நிலையத் தமிழ்ப்பண்டிதர்கள்: வித்வான் ஸ்ரீ. வி. எஸ். கிருஷ்ணன், புலவர் ஸ்ரீ. மு. பசுபதி, வித்வான் ஸ்ரீ. இ. பா. வேணுகோபால் ஆகியோர்க்கு என் நன்றி உரியது.

இந்நூலை நன்கு அச்சியற்றித்தந்த தொர்சன் அச்சகத்தாருக்கும் எனது நன்றியைச் செலுத்துகிறேன்.

சென்னை-5,
15—2—1956.

தி. சந்திரசேகரன்.

ஸ்ரீ

அந்தாதிக் கோத்து

1 கணபதி யந்தாதி

கடவுள் வாழ்த்து

தானுநதந தானுமழித தானுமிளை யானுமுனவந
தானுமறறை யானுமுநதி தனகைபெறறத— தானுங
கணபதியந தாதி கலிததுறையா யெணணுன
கணபதி (வி) [மே]ல சொலலமுறறுங காபபு

நூல

மணிமகு டசசெனனி மாமுக முககணவந தூடுசெவி
யணிநுத லோாகொமபு . கழமபுக ளைஙகைமுநநூற
பணிதவழ மாாபு சுழியுநதி நறகுட பணடிபொறகிண
கிணியரை யூடு மலாததா ளவையுங கணபதிககே 1

திககெடடு மணணுமவிண ணுஙகாலுந தீயுஞ சலமுநிறைந
திக(கெ)கட டிலலாம லசசது ழககொண டிருமையெலலா
பைககெடடுப போலவைதது முததொழில செயவிககும
[பஞசகிருததியண
ணைககெடடில பிறபபுறு மாததைச சதுாததியனே 2

சதுவேத மாகம சாததிர புராணந தலைமயஙகா
இதுவே நிசமென றெழுமப வளாத றறுனி
பொதுவே யிருநது மெளனததடுத தாளவதிப போதிதுவோ
விதுவேறும வேணிப பிரானுா குமார விநாயகனே 3

நாயக மேதெயவ நாயகமே யிநத நாயகமே
தாயகம போலவந தாயக மேதனித தாயகமே
தாயக மாலயன மாலயன போறறுந தெயவநமசி
வாயகா மாதிப மாதஙகை வலலபை வைததவனே 4

வைததான கிருபையை வையானன பினபதை வாழததில
கைததானென புனமொழி கையா தருளையுள(க) கால
[விலஙகாய
தைததான பவததை தைய யானினி யொருதாளவு
விததான மூனறறு விததானம பெயபிளளை யாரயயனே 5

ஆரார் துணைநமக் காரா ருரிமைபெற் றோர்பிறந்தா
ரூரா ரிருந்தென். ஞ[னிரா]தென்ன வுண்மைசொல்ல
வாரார் நமன்பகை மாற்றார் துயருற்று வாடுமுகம்
பாரா ரொருவரன் பாய்ப்பிள்ளை யாரைக்கைப் பற்றுநெஞ்சே. 6

நெஞ்சுபுண் ணாக நினைப்பதை நீக்க நிலைதவறா
வஞ்சு புலனிலென் வாய்செவி யேசெல் லடியிணையே
பஞ்சுறு தாளுமை பாலன் கணபதிப் பண்பாலக் ?
கெஞ்சுபு காட்டு துதியாடு பாடுசொல் கேள்வகையே. 7

வகையா மமுது பருப்புநெய் பாறயிர் வர்க்கவகைத்
தொகைமோ தகமே யெள்கட லைப்பொரி தோசைவடை
தகைதீர் குரும்பை விடலை யவல்பழம் சர்க்கரைதேன்
கு[ை]கவாய் வயிற்றற் குணவாய்ப் படைத்திடு வார்பத்தரே. 8

பத்தரை யெண்ணரை யாறரை நாலரை பன்னீரரை
யத்தமும் வாயும் விழிமுக முஞ்சர ணங்குழையு
முத்தமு றுதந்தம்......முகஞ்சிர முங்கருத்தில்
நித்தமும் வைத்தவர் நீங்கார் சொர்க்கத்தை நிலவரமே. 9

நிலத்தில் புரண்டுகை கூப்பி வலஞ்செய்து நின்றுநெற்றி
தலைக்கிரு செவிமடித் துக்குட்டிக் காது தனைப்பிடித்தே
டலத்தோ டிருந்து மெழுந்து நிருத்தம் பெறுமவர்க்காம்
பலத்தைக் கொடுப்ப னிசமாகு வாகனன் பார்த்திருந்தே. 10

திருந்தி வளர்பெண்ணும் பூமியுங் கோடி திரவியமு
மிருந்துமில் லாமலுந் துன்பமல் லாதிலை யீதொழிக்கு
மருந்து நிசம்விக்கி னேசுர மூர்த்தி மருமலர்த்தாள்
பொருந்து மனலயர்க் கேயின்ப வாழ்விந்தப் புத்திநன்றே. 11

புத்தியும் வித்தையும் போதமும் ஞானமும் புண்ணியமும்
சத்தியுந் தானமுந் தர்மமும் நேமமுஞ் சத்தியமும்
பத்தியும் பண்பும் குணமும் புகழுநற் பாக்கியமும்
முத்தியு மற்றெப் பொருளுந் தருங்கை முகனருளே. 12

அருள்மணி யயம்பொன் சிலைமரம் வேர்முத லாகியமண்
பொருள்படு தந்தம்நற் றேவுருக் கொள்ளுமிப் பூதபதி
திரளுறுங் கோயய மேலதி வாசஞ் சிறப்புடனா
மருளறப் பூண்ப தறுெ........கை வாய்க்குணமே. 13

வாயே வழுத்திரு கண்ணே தரிசி மடற்செவியே
நீயே திருப்புகழ் கேண்மோநே ரர்ச்சி நெடுங்கரமே
நாயே னிருகண்.........செய்பணி நற்றலையே
மீயே யுளங்கொள் விநாயகன் மெய்த்துணை விண்ணப்பமே. 14

விண்ணப்பஞ் செய்துமே கும்பிட்டுக் கைகட்டி முன்னநின்றே
வுண்ணப் பதமில்லை யென்றாலுஞ் சம்பன்ன ருற்றளியார்
வண்ணப் பிரபந்தத் துக்குமுரு கார்தம்மை வாழ்த்துவதென்
னெண்ணப் படு......னமைக்காக்கும் நாய னிற்ப னன்றே. 15

பானலக் கண்ணியர் பாலர் கிளைகள் பணிகலைசீ
ரானை குதிரை கொடிதேர் சிவிகைசிங் காதனஞ்சூழ்
சேனை யமைச்சர் திரவியம் நெற்கட்டுச் சேர்மகுடம்
பூணகர் நாடுபெற் றார்பிள்ளை யாரன்பு பூண்டவரே. 16

பூண்டிடுஞ் சென்னி புகழ்ந்திடும் நாக்குபாக் களையன்பாய்
வேண்டிடுங் காது விளக்கிடும் பாணி விரைந்து நித்தந்
தீண்டிடு நெஞ்சந் தரிசிக்குங் கண்வாய் செய்திடுங்கா
லாண்டிடு நீட்ட புழைக்கைக் கடவு ளடியிணையே. 17

அடிமிதி யாக்கினை நோய்கலி மால்கரு வல்லவிடப்
பிடிதடை கட்டுப் பிணைவிலங் கெச்சு வயில்.........கோதி
கடியெறி வெப்பொப்புக் காலப்பு மண்ணடை
[கைப்படைநாண்
மிடிபட் டிடார்ம தோன்மத்தர்க் காட்பட்ட மேன்மக்களே. 18

மேன்மக்கள் கீழ்மக்க ளாண்மக்கள் பெண்மக்கள் மேதியினிற்
றூன்மெய்ப் பு......றனிக் கோமயத் தைத்திரட் டிப்பிடித்தெங்
கோன்மத்த கப்பிள்ளை யாராய்க் குறித்தறு கும்புனைந்து
ஊன்மொய்த்த சென்னி குட்டிக்கை கூப்ப வுறுதியுண்டே. 19

உண்டென்ற வர்க்குண் டில்லார்க் கில்லைநீயவ் வுறுதிதந்தால்
கொண்டு நடக்குங் குணமுமில் லெல்லைகைக் கொள்பவரா
ரண்டுந்தென் பால்தன்ம ராச னொருவனுண் டல்லசெய்வான்
தொண்டரில் செத்துப் பிறப்பாய் மெய்ஞ்ஞானத்
[துதிக்கையனே. 20

கையனே பதபங் கயனே சிவகங் கையனருள்கோ
மயனே சைவச் சமயனே செவ்வேட மையனேநன்
னியனே மறையின் பயனே கணச்ச பயனெனவாழ்
செயனே விழியுச் சியனே னலனிச் செய்தெய்வமே. 21

தெயவானைக கனறுககு மாிசியுந தீனுமைநது
கைவாிப போடடிட நாலவாயககுக காணுங கவளமிடு
பைவாய பாபெறற பெறுவய ஞாபபடைப ப
போவாா பிறபபிறப பிலலாமல வாழவாாக ளுததமரே 22

உததம னேயென னுடலபொரு ளாவிக குடையவனே
விததக னேயுள விழியே மதவேழமுக
மததக னேமணி மநதிர னேவமுத துவரனபாா
பததரைக காககு முதலே முதனமை படைததவனே 23

படைபபேது ரெடசிபப தேததளிப பேது படைததெலலாம
துடைபபேது நலவினை தீவினை யேதினப துனபமுமே
தடைபபேது பினதிறப பேதுபெண பொனபணி யாதியநதம
விடைபபாக னுககுமெட டாககை முகனசெயல
[மேனபடடதே 24

படடவா துனபப படாதவா நனமை பலவிதமாக
கெடடவா நிநதை கெடாதவா குடடுக கிணஙகிருகை
விடடவா பாவ மிடாதவ ரனபு விளைநதகததால
தொடடவா கூததைத தொடாதவாககை முதறசெயலே 25

செயமாகு மெணணுங கருமமெல லாநதென திசையனுககுள
பயமாகு மெனனிலப பயமுமுண டோரனறு பாரததததை
வயமே ருவிலக கொமபா லெழுதிய நாமமத
கயமா வதனனைப பாடிககொண டாடிக கதிபெறுமே 26

பேறும புலநதர செல பநதா நலவி வேகமுநதா
ஊறும பவநதீா கவினோய மருநத ரெமதுபயந
தீரன றுமபலந தாவெனறுனை வலஞசெய தநநாளினுற
ல வாவுறு மேகதந தானன வாரணமே 27

வாரண மேநய வாசக மேகண மணியொளியே
பூரண மேவினை புணணிய னேபொரு ளினபொருளா
யாரண மேயெம தாருயி ரேதனிக காதரவே
காரண மேமன மேனனை வேணடியங கரபபிளளையே 28

பிளளைககு மூபபு பெறறாககு மூபபு பெ
கொளளக கொடுககக குறையாபல விததைக குஙகுருவாம
பளளிகது மாலயத துககும பிரதான பதிகனபெயா
வெளளப படைககு காதத னுமவிக கினகாததனே 29

விரகின காதத வியனே நினைதொழ வேயறியாக
கைககினிக காலன கயறிடு வானகொட்டிக கா டிடபான
அககினி யாலெரிப பானடிப பானரை யததிடுவான
கொககின மாளப பொருமயி லானறுணைக குஞசரமே 30

சரததின மனுட்ப பதராயப பிறநதிறந தாவதெனன
சரததின னறுகெனிற ருனணி வானபசுத தனமசறறு
சரததி னமாவெனற தநதைககு மாஞசநது சாததொருங்கும
சரததின சிலையிருப பாசன மாகுமகற ருனெனிலே 31

கறருவு நீயிரங கனறினை நானமழைக கரமுகிலநீ
முறருப பயிரமுளை ஞனளை னியம முலையுணணிநான
சிறருணைக கொமபு செவிவாய முகவகை சிறநதபிளளாய
மறருரு மிலலை யெனககா வுயிரககண வளாமணியே 32

விருததம

சதுவேத வரைமுகடுஞ சாததிரசசோ லையுமபுராண
தனிககா னறும
பொதுரீககிச சஞசரிககும புனிததெயவ [மூல]முதல(ப)
பொருளந தாதி
யிதுநாலெண கலிததுறையாய யெணணு(ர)[னகு] ணமமல
ரிணைககுந தாரை
பதிவாயககொண டவாகளிக பரலோக மெனகினற
பதிக ளாமே

கணபதி யநதாதி முறறும

2 திருவரஙகப பதிறறுபபத தநதாதி

காபபு

ஆழவாா வணககம

தெனபாற சிறநதெொளிா சீரரங கேசா திருவடிமேல
அனபாற பதிறறுபபத தநதாதி சூடடி யருளபெறநாந
தனபாற கருணை பெருகி மறைததமிழ தநதுலகை
நனபாற பொருததிய மாறன பதாமபுய நாடுதுமே 1

எமபெருமானாா வணககம

வாதாமபற பலச(மை)[ம]ய மயககிருடாந துயிாகளுடய
வநது தோனறிச
சாதாநதற கருததிரஙகிச சநதேயி விபாீதந
தலைசாயந தோட
வேதாநதப பழமபொருளாம விசிடடாதது விதபபொருளை
விளககி யாணட
போதாநதத தொளிாபூதூா எதிராசன றிருவடிகள போறறல
செயவாம 2

ஆசிரியன வணககம

(வெணபா)

ஓதித தொழுதுமே லுளளமே நாரணனை
ஆதிக குரவ ரருளபெறறும—நீதித
தருமந திரமருவுந தனனருளா லுணமைத
திருமந திரமளிகதான சீா 3

நூல

உலகமெஙகு நிறைநதபரப பிரம மாகி
யொளிாதிருநா ராயணனெனற றுயாநால வேதம
பலகலைதே ரயனரனவா னருவ மேததப
பதினமரொடு பாகவதா பணிநது போறற
வலகிலபுக ழாாநததிரு வரஙக மேவி
யனநதனமேற கணவளரு மாதி மூாததி
இலகியநின றிருவடியே சரணம புகக
வெளியெனை யருளபுரிநதா ளெமபி ரானே 1

எமபிரா னெவவுயிாககு முயிரா மீசன
இநதிரன சநதிரமவுாி யிறையோன வேதன
நமபிரா னெனறுபணிந தேததந நாளு
நயநதருளு நாினமலா மஙகை நாதன
வெமபிரா வணையுயிா வீடடி மேளுள
வீடணனுக கருளரஙக விமான மேய
தமபிரான றிருவடியா ரடியாா பாத
தாமரையே தலைககணியாந தமிய னேறகே 2

தமியனென சனசசார ருந
தனமையிலேன சாாநதவாககோா பயனுஞ சாரா
வுமியனை னுனதடிமை யெனனும வாயமை
யொனறுணடே யாதலா லெனையு மேலாஞ
சமியனே திருவரஙகத தலைவ னேஙின
தாமரைகக ணருளவெளளந தனிலோா நுணடுந
துமியினு லொருபொருளசெய தாடகொண டாயகெனன
றுணடனேன பணடுதவஞ சூழநதிட டேனே 3

சூழநதிடடாா கொடுமபவமே சொனனாா தீமை
தொகுததிடடாா வெவவினையே துணிவி னுளும
வீழநதிடடாா வேடகைவெளளத தனனு ரேனும
விதிவசததா லரஙகமெனறே விளமபி னூரே
லாழநதிடடாா பேரினப வமுத வாாி
யமைவுறறு ரடியரொடு மமல வீடடுள
வாழநதிடடாா வானோரு மலரு ளோனும
வானவரு மேனையரு மதிககத தாமே 4

மதிககினற மாதவதது யோகா ஞானா
மணணகததா விணணகததா வநது தெணணீா
கதிககினற காவிாிமா நதியின மூழகிக
கனகவிமா னததரஙகன கமல(ப) பாத
முதிககினற மெயயனபிற றெழுவாா பேறறை
யுமைகேளவ ரனுதருக குரைபு ராணம
விதிககினற ததிகமாந தொணடா காணமின
மேவுதுநாந திருவரஙக[ம] விரைமி னீரே 5

விரைமினோ வுயிாககுறுதி வேணடி நிறபீா
மெயஞஞான வாழவாாகள வேத மெயநூல
உரைமினோ நாரணாககா ளுாிமை பூணடே
வுடையவரெம பெருமானு ரொழுககி னினமின

றரைவிணமீ திவைஙிகாககுந தகுதி காணெஞ
சரைமரணத தளாசசிறுமமெய சாரா முனனம
வரைமினறோய மாதேவன வேதா வேததி
மகிழபுகழசோ திருவரஙக மருவு மாறே 6

மருவுமா றறியேனின மலாபபொற பாத
மதியிலேன வாழநாளவீழ நாளி னுயததேன
வெருவுமா றடுபிறவி வெமமைக காறறேன
வெஙகூறறுக கெனசெயகேன விமல மூததி
திருவுமா மணியதுவுந திகழு மாபபா
திருவரஙகக கோயிலவளா தேவா வெனனை
யொருவுமா றுனனியினி யொழியல கணடா
யுனையலலா லுறுதுணைமற றொனறி லேனே 7

ஒனறுகிப பலவாகி யாவு மாகி
யொனறுபல வனறுகி யாவு மனறி
நினறுயநீ யெனறுணாதது மலலால வேத
நினனிலைமை யுளளபடி யினனுந தேரா
தெனறுலிங கியாவர தறிய வலலா
ரெமபெருமா னெழிலரஙகத தெநதா யுனறன
குனறுலன றுளிரைகாத திலஙகை வெனற
குணககடலிற குடைநதாடிக குளிாககினறேமே 8

குளிாபபுறற சிநதையராயக குருகூா மாறன
கூறுமறைத தமிழவாயமை கொணடு தாழநது
தளிாபபுறற மெயயினரா யரஙக மேவித
தஙகுநாதாந தனிமுததித தலததுண மேவிக
களிபபுறற பேரினபங கலநதாா முனனங
கண ணுதலசொல புராணநூற கருததது மீதே
வொளிபபுறற புநதியரா யரஙகஞ சாரா
துழலவரெனனே சிலாபிறவிப பறறி னூடே 9

பறறறறா பறறினற பறறற றேயைப
பறறுறற பாவியேனயான பறறற பாறறே
பெறறுறறா பெருமபயனே யரஙக மாலே
பேதுறறேன றீவினையாற பேதை நாயேன
சறறுததா னியருளத தகாதோ வெஙக
டாமரையாட டலைவனே தரும மூததி
முறறததா னிரஙகாது முனிதி யாகின
முதலவனே முடிவெனகொல மூாகக னேறகே 10

வேறு

மூாககனே ஞகி முடியவே கெடுவான
முயலகினறேன நீமையே யாகிற
பாாககினரு ரெவரும பழிககினரு ராவா
பாவமேற கொணடுவெங நரகிற
சோககினற தாகுஞ சிறியனே ஞணடைச
செயவதென னேபொனனு மணியு
மீாகருமீப பொனனி சூழதிரு வரஙகா
வெனனபபா விரஙகிநீ யருளே 11

அருளுமா றறியே னடியனே ஞவி
யாககையோ டலசினன சால
வெருளுமா றினிநீ விடுததிடேல விமலா
வேணடுறின மேதையோா தமமை
மருளுமா றுஞறற வலலமா யவனே
மலாமஙகைக கினியமா மாலே
தெருளுமா றருளசெய திருவரங கததுட
சேடனமேற கணவளா தேவே 12

தேவதே வேசன றேவகி புதலவன
றிஙகளுட பருதியுட டிகழுவோன
மூவரா னவருண முதலவனமுக குணததுண
முதறகுணச சததுவ மூாததி
யாவனே வவனிவ வறிதுயி லரஙக
ஞதலா லடைநதுயது நடமா
லாவதே தனைதது மவனருட செயலென
றசைவறு நிலைமைகொண டகமே 13

அகமனை புதலவ ராடைபூ டணமபொன
ஆதிய பொருளகளே யவாவிச
சகமதி லுழனறு தளாநதுபோயக குடுமப
சாகரத தழுநதிஞாக கெலலாம
மிகமலா புானை நிழனமதி வாவி
விளஙகுசீ ரரஙகமெயப பரனே
புகலிட மாகின பொனனடிப போதின
போதமே போதமா குவதே 14

ஆகுவதி யாதோ வலைகடல சூழநத
வவனிமேற பிறநதுளளா யாககுஞ
சாகுவ தலலா லாதலா லுயிாககுச
சனனமு மரணமுந தபுவான
போகுவ தொழிக புகுவது புகுக
பொருநதிய திருநதியுள ளருநதி
யேகுவ திலதா மினபவீ டளிககு
எழிலரங கததுறை குவமே 15

உறைதரு காம மாதியாந தீய
வுடபகை யாறையு மொறுததுக
குறைதரு புலனக ளைநதையுஞ செறுததுக
குதிததெழு மனததினைக குறைதது
பொறைதரு முபசாந தநதமிற பொருநதி
பொலிதிரு வரஙகநா ரணனை
நிறைதரு மனபி னிறைஞசியேத துவதே
நிததியா னநதமெயப பேறே 16

பேறிதிற பெறுமபே றியாதுகொ லறிமயன
பெருமநின னடிமைபெற றுயநதேன
தேறினுந தேறு விடினுநீ தெரிததாள
செயவினைக கெனகட வேனயான
ஊறிய வனப ருளசசெழுந தேனே
யுவடடெறி கடறபடா வமுதே
யீறினற சுவையே யரஙகதது ணிறைநத
வினபவா னநதமாக கடலே 17

கடலபுயல காயாக களஙகனி காவிக
கதிரமணி வணணமெயக கணணு
மடலவிழ கமல மலாபபொருட டுறையு
மஙகையின புறுமறு மாாபா
வுடலெனும வாயிற சிறையிடை யடியே
னுலணடுபோ யுழனறன னினியுன
விடலருங கருணை கொடுததுத தாடகொள
விளஙகுசீ ரரஙகநா யகனே 18

நாயக நீயே யைமபெரும பூத
நவையிலா வுலகஙக ளலகித
தாயக மாகி நினனுளவைதத தளிககுஞ
சசசிதா னநதமா மூாததி

பாயக மாகப பணகணப பணிமேற
பளளிகொண டருளபரம பரனே
தாயகா வாழந திருவரங காநின
றொணடுபண டேதொணட னேனே 9

தொணடாதந தொணட ரெனறவா தொணடன
தொணடனேன றொணடுடை யவனே
கணடுகொண டெனைநீ கைநெகிழத திடிலோ
களைகணமற றருளார கணடா
யணடமண டலஙக ளுணடுமிழந தளிககு
மபபனே வொபபிலா தவனே
யெணடிசை விளககு மெழுமதின புடைசூ
ழெழிறறிரு வரஙகவம மானே 20

வேறு

மாணுஞ மாதேவன மகிழநதேததுந திருவரஙகன
றுணுஞம வணணமவன றடபணிசெய குவநெஞசே
மேணுஞள ளனபொடுமவ விணடுவைபபோற றினரனறே
வாணுஞ மிநதிரரு மணணுஞ மனனருமே 21

மனனவரா யெததனையோர மாணடொழிநதார மணணுணடு
பொனனகராண டெததனையோர போயொழிநதார
[கேடடிலையோ
வெனனிலைமை கணடவா வாழவெண ணுகினற பேதைநெஞசே
தெனனரஙகா தரிசனமே செயவதுநா மூயவதுவே 22

விடடிலையம புலததொடா வீடடிலையுட பகையைநதுஞ
நீண்டு நீள்கொடி யாடுபொன் னெழில்சூழ்
திசையெ லாம்புக ழாவினன் குடியுள்
வேண்டு வாரவர் வேண்டிய வருளும்
வித்த காவிமை யோர்சிகா மணியே. 73

மணிக ளொன்பது நிரைத்துவில் வீசு
மாட நீடிய வாவினன் குடிவா
ழணிகொ ளம்பிகை யெம்பெரு மாட்டி
யமிர்த வல்லித னன்பனே யுருகிப்
பணிசெய் வார்க்கருள் மடைதிறந் தளிக்கும்
பசுப திப்பர மாபழ வினையாம்
பிணியி னுன்மிகத் தேய்ந்துதேய்ந் திளைத்தேன்
பேதை யேனையும் பாதுகாத் தருளே. 74

பாது காத்தி ருப்பதுன் கடமை
பணிகளே செய்து கிடப்பதென் கடனே
சூது காத்திடு மிளமுலை மடவார்
தோழி மாரொடு மென்மெல நடந்து
போது காத்தலை யெடுத்துமென் குழற்குப்
புனைந்து முத்தணி யூசலா டிடும்பொன்
மாது காத்திடு மாவினன் குடியின்
மருவி வாழ்ந்தருள் புரிசதா சிவனே. 75

சிவந்த வேணியு மபய வரதமுந்
தெள்ளு நீறணி [தி]ருநுத லழகும்
பவந்த விர்த்தருள் கருணைநேத் திரமும்
பவள வாயுநற் குறுநகை யழகும்
அவிந்தி டாவொலி தருஞ்சிலம் படியும்
அமிர்த வல்லிசேர் திருவுரு வழுமாய்
நவந்த ருந்திரு வாவினன் குடிவாழ்
நாத னென்னுளங் கோயில்கொண் டனனே. 76

கொண்ட கோலமு மாவினன் குடியிற்
குடியி ருந்தருள் சிவபிரா னருளுங்
கண்டு கண்களா லடித்தொழும் பாற்றிக்
கரையி லானந்தக் கடல்படி யாதே
தொண்டை வாய்க்கிளி மொழிநலார் கலவித்
தூர்த்த ராகிநன் னடையிழந் திறுமாந்
துண்டு டுடுத்துநல் லாயுளைக் கழிக்கு
மூவர்க ளுக்கென்ன வுறுதிசொல் லுவனே. 77

சொல்லு நூல்பல வோதினும் புனலிற்
தோய்ந்து பற்பல தவங்களாற் றிடினுங்
கல்வி லேறிநன் னிட்டையி லிருந்து
கால மெண்ணில கழிக்கினு மேன்மை
அல்லு மெல்லுமென் னுயிர்க்கொரு துணையா
மமிர்த நாயகி யம்பிகை யுடனே
மல்ல லாவினன் குடியினி லிருக்கும்
வள்ள லார்திரு வருள்பெறு தவர்க்கே. 78

கேத னத்தினை யிடந்தொறு நாட்டிக்
கேடி லன்புடை யார்க்கனு தினந்தப்
பாத னத்தினைப் பரிவுட னூட்டிப்
பயன்[கொ]ள் பாக்கியர் வீதியி னூடு
வேத னத்தினை யேந்திவா னவர்கண
மிடைந்த வாவினன் குடியுறை விமலா
சேத னத்தினை யடியனேற் களித்துன்
சே(ர்)[வை] செய்திடக் காட்சிதந் தருளே. 79

தந்தை யாய்நறும் பாலமு தூட்டும்
தாயு மாயிருந் தென்னையாண் டவனே
எந்த நாளென்றன் வினையற நின்னோ
டிரண்ட றக்கலந் திருந்துவாழ்ந் திடுவேன்
கந்த மார்செழும் பாளைவண் கமுகுங்
கதலியுந் தெங்குஞ் சண்பக வனமு
மந்த மாருத முலவிட நாளும்
வளரு மாவினன் குடிதிரு மலனே. 80

வேறு

நிருத்த னித்த னிராமய னிட்கள
னொருத்த னிவ்வ் வுலகமுங் காப்பவன்
றிருத்த மாருந் திருவாவி னன்குடிக்
கருத்த னாதி கயிலாச நாதனே. 81

தன்ன மாயினுந் தன்னை நினைந்திடின்
மன்னு மூவபண் டாரம் வழங்குவான்
தென்னந் தண்டலைத் திருவாவி னன்குடிக்
கன்னி யாதி கயிலாச வள்ளலே. 82

வள்ள லேழுலை யார்க்கென் மதியெலாங்
கொள்ளை யாகக் கொடுத்திளைத் தேனருள்
தெள்ளுஞ் செல்வத் திருவாவி னன்குடி
யுள்ளி ருந்த வொருபர மேட்டியே. 83

மேட மொன்றும் விடைக்கொடி யுஞ்சூழ்
சேடு கொண்ட திருவாவி னன்குடித்
தோடு கொண்டசை சுந்தரக் காதனை
மூட நெஞ்சமே முன்னுமுப் போதுமே. 84

போதும் போதுமிப் பொன்றுடல் வாழ்வினி
மாதர் வீதிகண் மல்காவி னன்குடி
நாத னேமிக நானுலந் தேனையா
தீது தீரச் சிவானந்த மூட்டிடே. 85

ஊட்டுங் கன்னற் கலாவி னுள்ளமேன்
வேட்டுன் சேவடி மேவுவ னேதொண்டை
நாட்டி (நீ)[னீ]டிய நல்லாவி னன்குடி
யாட்டு கந்துநின் றுடிய வையனே. 86

ஐய நுண்ணிடை யஞ்சொற் கடைசியர்
செய்யிற் பாடுந் திருவாவி னன்குடி
மெய்யன் மெய்யன் விழிக்கெதிர் தோன்றுவான்
பொய்ய னேனுட் புகுந்ததெவ் வண்ணமே. 87

மேவி னன்குடி மீட்டென துள்ளமே
பூவி னன்குடி லச்சடைப் புங்கவன்
சேவி னன்குடி தோய வளர்ந்திடு
மாவி னன்குடி யாண்டரு ளீசனே. 88

ஈச னேநல் லெயிலாவி னன்குடி
வாச னேமலக் கோடையின் வாடினே
னூசி லாத வமிர்தவல் லிக்குநன்
னேச னேயரு ளின்னடி நீழலே. 89

நீக்க மின்றி நிறைந்த வுனைக்கண்டு
போக்கொ ராறையும் போக்கியென் றுய்குவேன்
தேக்கு நீர்வயற் றென்னுவி னன்குடி
காக்கு மாதி கயிலாச நாதனே. 90

வேறு

நாதனே போற்றி யாவி
னன்குடி நண்ணும் வேத
கீதனே போற்றி வெள்ளிக்
கிரியில்வாழ் பவனே போற்றி
போதனே போற்றி மாயன்
பூப்பிளங் தறிய மாட்டாப்
பாதனே போற்றி யெங்கள்
பகவனே போற்றி போற்றி. 91

போற்றுவார்க் கமுத மான
புண்ணியா போற்றி மாறன்
மாற்றினு லடிக்க நின்ற
வடிவுடை யவனே போற்றி
சேற்றுறு கழுநீ ரோடை
செறிந்தவா வினன்கு டிக்க
ணேற்றின்மேற் காட்சி தந்திங்
கென்னையாண் டவனே போற்றி. 92

ஆண்டவா போற்றி மார்பி
லணிகிளை ரக்க மாலை
பூண்டவா போற்றி நல்வி
மு(ா)வருப் புனித வீதி
நீண்டவா வினன்கு டிக்க
ணிலவிய நிமலா போற்றி
தாண்டவ மாடி போற்றி
தவிக்கின்றேன் தனிய னேனே. 93

தனிவிடைப் பாகா போற்றி
சதுமறைப் பொருளே போற்றி
பனிவரை யமிர்த வல்லி
பாகனே போற்றி நீலங்
கனிதரு கண்டா போற்றி
கந்தப்ப னப்பா போற்றி
துனிதரு கவலை யெல்லாந்
துடைத்தருள் மூவர் கோவே. 94

கோவனைந் தாடு கின்ற
குருமணி முடியாய் போற்றி
மேவிவித் தின்றி யெல்லாம்
விளைவுசெய் பவனே போற்றி
(யா)[வா]வியிற் கமலம் பூத்த
வாவினன் குடியில் வாழுந்
தேவனே போற்றி யென்றன்
சிறுமைதீர்த் தருள்செய் வாயே. 95

செய்வதொன் றறிகி லாத
சிற்றறி வுடையேன் மேலாஞ்
சைவசித் தாந்த வுண்மை
தனிப்பெரு மார்க்கந் தேறி
யுய்வகை கருணை யால்வந்
துதவிய குருவே போற்றி
யைவகை மலந்தீர்த் தானு
மாவினன் குடியாய் போற்றி. 96

போற்றிமுத் திருக்கு மூன்று
புகழ்ச்சுட ராய தேவே
போற்றியோர் மறுவி லாத
பொருவிலெண் குணத்தி னனே
போற்றியா வினன்கு டிக்கட்
பொருந்திவாழ் கருணை மேரு
போற்றியெங் கனுசி றைந்த
பூரணா னந்த வாழ்வே. 97

வேதமே துரக மாக
மேயசஞ் சரண போற்றி
யோதரு மூழி காலத்
தொருவனாய் நின்றாய் போற்றி

யாதுலர்க் கின்ப நல்கு
　　மாவினன் குடியுள் வாழுங்
காதலாய் போற்றி யாதி
　　கயிலாச நாத போற்றி. 98

போற்றுமஞ் செழுத்து நல்ல
　　புனிதமா ருருவாய் போற்
றோற்றமு மீறு மில்லாச்
　　சுகப்பெருங் கடலே போற்றி
சாற்றரும் வினையே னுற்ற
　　தணப்பிலாப் பிறவி நோயை
யாற்றுவாய் போற்றி கீர்த்தி
　　யாவினன் குடியம் மானே. 99

அம்மையென் னமுத வல்லி
　　யன்பனே போற்றி மானைக்
கைமல ரேந்து மாதி
　　கைலாச நாத போற்றி
செம்மணி மதில்சூழ் தென்னு
　　வினன்குடிச் சிவனே போற்றி
யெம்மையு மடிமை யான
　　வெனக்குப கார போற்றி. 100

திருச்சிற்றம்பலம்

திருவாவினன்குடி பதிற்றுப்பத் தந்தாதி முற்றும்.

5. திருமங்கை கரும்பேசர்

பதிற்றுப்பத் தந்தாதி

காப்பு: விநாயகர் வணக்கம்

துதிக்குந் திருமங்கை வாழ்கரும் பேசர் துணைமலர்த்தாள்
பதிக்கும் பதிற்றுப்பத் தந்தாதி சொல்லமுன் பாரதம்பொன்
மதிக்கும் வரையில் வரைந்தது போலருள் மான்சசிபால்
உதிக்கு மிருகொம்புக் காணேமுன் வந்த வொருகொம்பனே. 1

இறை வணக்கம்

தாயே யெனப்பெண் ணுருவாய் வபாமக டென்றனுக்...
தாயே யுனைநம்பு மன்பர நேகர்க்கு மன்புகந்தாய்
பேயேன் றனக்கருள் வாய்மங்கை வாழ்கரும் பேசரனே
நீயே கதியன்றி வேறே கதியில்லை நிச்சயமே. 2

சிவமயம்.

திருவளர் கரும்பேசர் துணை.

நூல்

கங்கை வளர்செஞ் சடைமுடியுங்
கருணை முகமுங் கண்மூன் றுஞ்
செங்கை மழுவு மானபயந்
திகழும் வரத முடன்திருமால்
தங்கை யொருபா லிருந்திலகத்
தாம்வந் தடியார் தமக்கருள்வார்
மங்கை வளருங் கரும்பேசர்
மலர்த்தா ளகத்தில் மறவேனே. 1

மறவேன் றிருநீ றைந்தெழுத்து
மணியும் பணியு மருவுமன்பர்
உறவே யலது வேறெனக்
குளதோ வுளமே யுணராதோ

துறவே விரும்பிப் பலவேடத்
    துடன்கா னகங்க டொறுநடந்தே
அறவே திரிய முடியாதுன்
    னருள்பார் மங்கைக் கதிபதியே. 2

பதியே பசுவே பசுபதியே
    பாசத் தொடரின் பற்றறுக்குங்
கதியே மதியார் முப்புரந்தீக்
    கண்ணா லெரிக்குங் கமழ்திருச்சந்
நிதியே [1]யுபைய நிதிபதிக்கு
    நேயா வேணி நிறைந்தசுர
நதியே நதியால் விளங்குவயல்
    நலஞ்சேர் மங்கை நாயகமே. 3

அகமே வியமா மணிவிளக்கே
    வயன்மால் தேவர்க் கரியவனே
இகமே லடியார்க் கெளியவனே
    யிமவான் மகளுக் கெழிலவனே
மகமே ருவைவில் லாய்வளைத்து
    மதமா வுரித்த வலியவனே
சுகமே மங்கைப் பதிவாழ்பைந்
    தோகைக் கரும்பே சுராதிபனே. 4

ஆதி மறையா கமப்பொருளா
    யணுவுக் கணுவா யகண்டிதமாய்
சோதி வடிவாய் நிற்குணமாய்த்
    துரியா துரியச் சூட்சுமமாய்
நீதி நிறைவாய் நின்மலமாய்
    நிராதா ரமுமாய் நிட்களமாய்
பூதி யணிமங் கைக்குருவாய்ப்
    புவிமே லுதித்தாய் போற்றிடவே. 5

போற்றுந் தமியேன் குரம்பைதனிற்
    புகுந்து மயக்கைம் புலக்குறும்பை
மாற்றும் படிநீ நினைந்துயிரை
    மறலிக் கிரையாய் வருத்தாமற்
றேற்று மூனது திருச்சூலந்
    தோண்மேற் பொறித்தாள் தொண்டர்துயர்
ஆற்றுங் கருணைக் கரும்பேயின்
    னமுதே மங்கை யருட்கடலே. 6

பிரதிபேதம்: 1, யிரண்டு.

கடலிற் றிரையே நிகர்செனனக்
　　கருவி லுதித்துக் கருமவசத்
துடலிற் பிணியா லுனதடிமே
　　லொருபோ தணியே னொருபோதும்
அடலிற் சமனை யுதைத்தசர
　　ணமென் றறியே னாட்கொள்வாய்
மடலிற் பசுந்தே னுகளிதழி
　　மலர்சேர் மங்கை வாழ்கரும்பே. 7

கரும்புங் கனியு மடுபால்சர்க்
　　கரையுஞ் செழுந்தேன் கற்கண்டும்
விரும்புஞ் சுவைகள் போன்மொழியு
　　மின்னா ரரமாம் விழிக்கென்மனம்
இரும்பு மெனவே யுழல்வேனுன்
　　னிருதாள் பணியே னிரங்காயோ
சுரும்பும் பணிபூங் குழலுமையாள்
　　துணைவா மங்கை சுடர்க்கொழுந்தே. 8

கொழுந்தேன் முரலு மலர்சாத்திக்
　　கும்பிட் டிருதாள் குறித்துவிழுந்
தெழுந்தே யன்பாய்த் திருமுறைக
　　ளேழுந் துதித்தஞ் செழுத்துநெஞ்சில்
அழுந்தேன் தறுகண் ணறிவிலியை
　　யாட்கொண் டருள்வ தறியேனுன்
தொழுந்தே சிகனே மங்கைவளர்
　　சுருதிக் கிறைவா சுந்தரனே. 9

தரமா றுடைய மகவிருவர்
　　தாமு மிருக்கத் தமிழ்மதுரை
யுரமா றுடைய மண்சுமந்தே
　　யுதிர்பிட் டிரந்தா யுயர்வழுதி
கரமா றுடைத்தாய் மேனியின்மங்
　　களமா தொருபாற் கலந்தனையே
சிரமா றுடைய சிவனேயுன்
　　செயல்யா ரறிவார் செகந்தனிலே. 10

வேறு சந்தம்

தனிமு தற்பொரு ளென்றுனை யாகம
சாத்திர மறையோதுங்
கனிமொ ழிச்சிவ சத்தியல் லாலெவர்
கண்டவ ருண்டோகாண்
பனிம திச்சடை யாய்விடை யாய்பணி
பத்தர் வற்சலனேயென்
துனிவ யிற்றுநோய் தீர்த்தடி யாரெனத்
தொண்டுகொண் டருள்வாயே. 11

தொண்ட கத்துறை யாதிப ரால்வருஞ்
சுகதுக்க மதனாலே
விண்ட கப்படு முயிர்க்கெலா நீயன்றி
வேறுளதோ வுரையாய்
முண்ட கத்திரு மாலயன் போற்றிடு
முக்கண னேகாள
கண்ட கத்தனே மங்கை வாழுமங்
களமின் மனோகரனே. 12

கரக பாலமுஞ் சூலபி னாகமுங்
கண்ணுதல் மழுமானும்
உரக பூடண மடரு கடக்கையு
முத்தமி பாகமுமாய்ச்
சிரக ராதி யுடன்மன மெண்ணியே
சிந்தனை செய்தொருபோ
தரக ராவென மங்கையம் பதியா
ரங்குவந் தருள்வாரே. 13

அருளு மைந்தரு மனைவியு மொக்கலு
மாடையு மாபரணப்
பொருளு மங்கமு மற்றவை யாவையும்
போதவு மேகுறித்து
மருளும் நெஞ்சனை வஞ்சனை யாட்கொள
வருவதெந் நாள்பரனே
தெருளு மன்பர்க் கினிகரும் பேசனே
செஞ்சடை யுடையானே. 14

உடையும் யானை யதள்பணி பூடண
முண்பதும் விடமாகும்
சடையு மங்கமு மாதிரு வோருமே
சாபமு மாமிடமும்
விடையும் வாகன மையமுற் றோர்மங்கை
வித்தகா யாமெனவே
இடையு மம்பலந் தோறுநின் றுடினோர்
ஏற்றுயர் கொடியாரே. 15

கொடிய பாதகர் காதகர் மேற்றமிழ்
கூறியு மேபுகழ்ந்து
மிடிய தாலுமிக் குற்றியுங் கைத்தல
மெத்த வருந்தினனின்
னடிய லாற்கதி வேறிலை நம்பினே
னம்பிகை பங்காளா
நெடிய மால்விடை யாய்கரும் பேசனே
நீயருள் செய்வாயே. 16

செய்வாய் சங்கு சங்கொடு தருநித்
திலநில வதனுலே
மைவாய் திங்க ளெனவிர வலர்கள்
வாய்விண் டலர்மங்கை
அய்வாய் தங்கு மதனுடை யீடையா
யரிபிர மர்க்கரியாய்
மெய்வாய் கண்கள் செவிநா சியிலும்
மேவிய புலவோனே. 17

புலம்பெறு சிந்தைமெய்ஞ் ஞானியர் யோகியர்
புரியுமு னூல்மறையோர்
உலம்பெறு மன்ப ரிடத்தில் முளைத்து
ருசித்த கரும்பாம்நீ
நலம்பெறு சுந்தர வாண்முக மங்கள
நாயகி பங்காசஞ்
சலம்பெறு துன்ப மகற்று மருந்தே
சந்திர சேகரனே. 18

சேகர மன்பிலா நோயுறு தேகந்
தரித்திர சம்சாரஞ்
சாகர மென்றதன் பால்வரை துன்மதி
தான்மதி வீணாணிற்

சூகர வன்பனை யாளுவ துன்கடன்
சூழொளி பாவகதி
வாகர சந்திர லோசன மங்கையில்
வாழும யேசுரனே. 19

சுரந்தருள் கற்றா மனமென வுருகித்
துறைசையில் வளர்கு[ரு]நாத
மரந்தனில் நற்றே சிகனாய் மாணிக்க
வாசகர்க் குபதேசம்
புரந்தரு ளுற்றே பிரமர கிடம்
போலவு மேசெய்தாய்
சிரந்தரி யத்தா பித்தனை [1]யும்பார்
தென்மங் கைக்கரசே. 20

வேறு

கைக்கர வுடன்வாய் பொய்சேர் கயவரை யடுத்து நான்காத்
துக்கர முகமும் பார்த்துத் துன்பமே யின்ப மானேன்
அக்கர விந்தன் றன்கண் ணருச்சனை யடிமேற் செய்யச்
சக்கர மளித்தாய் மங்கைச் சம்புவே நம்பு வேனே. 21

நம்புநின் சரணி ரண்டு நளினநாண் மலர தாக
வம்புவண் டேன ருந்தும் வண்டெனச் சுழலா நின்றேன்
தும்புரு வீணா கானத் துணைச்செவி யுடையாய் கங்கை
யம்புலிச் சடையாய் மங்கை யட்டமா சித்தி யானே. 22

சித்தி[2]யார் மந்தி ரங்கள் செபித்துரு வேற்றிப் போற்றிப்
பத்தி[3]சே ரன்பர் போல்நின் பணிவிடை செய்தன் பாகி
முத்திசே[4]ர் வகைசற் றில்லா மூடனைக் காப்ப தென்னாள்
அத்தியா பரணா மங்கை யம்பிகா பதியெம் மானே. 23

வேறு

மானே நிகரும் விழிமடவார்
மயலிற் சூறை வளிச்சருகாய்த்
தானே மனமு மயங்கிநித்தந்
தயங்கித் திரிந்துன் றனைநினையேன்
ஊனே வுடலே வுடலி னுறு
முயிரே வுயிருக் குறுதுணையே
கானே றுடையாய் விடவரவக்
கைகங் கணனே முக்கணனே. 24

பிரதிபேதம் : 1. யாள்வாய். 2. சேர், 3. பத்தியா. 4. முத்தியா

கணப்போ துனது திருவடியைக்
    கருத்தி லிருத்திக் கனிந்துருகி
மணப்போ தணிந்து பணிந்துலகில்
    மரித்துற் பவித்து மறுகாத
குணப்போ தவுளப் பழவடியார்
    கூட்டத் தெனையுங் கூட்டாயோ
உணப்போ தனமாய் விடமருந்து
    மொளியே மங்கை யுத்தமனே. 25

வேறு

உத்தம ரடியா ரென்ன வுனக்குநா னடிமை யுற்றே
மத்தமர் தயிர்போல் நோவால் மயங்கியே வருந்து வேனோ
எத்தம ரிருந்து மென்னு மிரங்கி[1]நீ யருள்வாய் மங்கைச்
சித்தமர் வித்தே மங்கை [2]செங்கண்மா விடையா னே. 26

விடையமைந் ததனு லுள்ளம் விதறி[3]யெவ் விடங்க டோறும்
புடையமைந் தோடும் யாற்றுப் புரிசுழித் துரும்ப தானேன்
சடையமர்ந் திலகு மூலத் தனிக்கரும் பானே யைங்கை
உடையமைந் தனையும் பெற்ற வுமையொரு பாகத் தானே. 27

பாகல மொழியும் வேலம் பாமன விழியுங் காட்டு
மோகன வடிவா மின்னார் முலைமத மாவுக் குள்ளம்
ஆகனற் கரும்பாய் வாடி யலந்தன னருள்வாய் மஞ்ஞை
வாகன வேளைப் பெற்ற மங்கையம் பதியி னனே. 28

நானமும் பணியும் பூவும் நலம்பெற வலங்க ரித்து
மான[4]மு மின்றி யீன வகைத்தொழில் புரியு மாந்தர்க்
கூனமு மில்லா வின்சொல் லுரைத்[5]துயிர் காப்ப தெந்நாள்
ஏனமு மனமு போற்று மிட்சுமா பட்சத் தானே. 29

பட்சியாய்ச் சரப ரூபம் படைத்தரி முதலோர் சிந்தைக்
கட்சிசேர்ந் தண்ட மீன்ற காமக்கோட் டனத்தை மேவி
வெட்சியார் குகனைப் பெற்று [6]மேதினி தனையு மன்பர்
குட்சிசேர் வினையுந் தீர்க்குங் [7]கோமள மங்கை யானே. 30

வேறு : கொச்சகம்

கழையேந்து மாதவன் செங்கண்ணு மயன்சிரசும்
தழையேந்து கால்கரமேற் றனமைத்த வாறுலகில்
உழையேந் துனதடிமை யுண்டென் றுரைத்திடவோ
இழையேந்து கொங்கைக் கிசைந்தகரும் பேசுரனே. 31

பிரதிபேதம் : 1. மிரங்கிநின் னருளே வேண்டும், 2. சச்சிதா னந்த தானே. 3. யோர் நிலைமே வாமற். 4. முந் தவிர்த்து மீன, 5. துடல் வருத்த மானேன், 6. மேவலர் புரமு, 7. குள்விழிக் கழையி னனே,

சுரமார் வனமலைக டோறுஞ் சுழல்பரம
பரமாருஞ் சாட்டையும்போற்பற்றவினை யுற்றலைந்தே
வுரமா ரெழுத்தஞ் [1]சுரையே னருள்புரிவாய்
வரமார் கரும்பே மதிச்செஞ் சடையானே. 32

சடைவா யொருத்தியுந் தான்பாதி யாயொருத்தி
இடைவா யொருத்தி யிருக்கமுனி மாதர்
கடைவா யிரந்தாற் கலைநெகிழச் செய்வதுண்டோ
விடைவா யுகந்[2]த [3]மகமேருச் சிலையானே. 33

சிலையாய் முளைத்தீர் சிலையே குடியானீர்
[4]மலையான் மகளை மணந்திருக்க வேணுமென்றோ
அலையார் கடல்விடமுண் டண்டர் தமைக்காத்து
நிலையா யருள்கரும்பே நீள்கருணை யாரமுதே. 34

ஆரா மணிக்கரும்பே யாடரவோ டம்புதமாந்
தாரமத னைத்தலைமீ தில்வைத்துக் கொண்டதல்லாற்
பேரம்ப லந்தோறும் பித்தரென வேநடித்தீர்
வீரம ணியுமங்கை வேட்கன லோசனரே. 35

வேடனெச்சில் தின்றும் வீடாய்தீரா வாயுவுட்கொண்
டாடரவாய்த் தோலுரி[5]சேர் தங்கமத்தி யாநீரே
கீடமுதல் மாதவஞ்சேர் **கேரள சிங்கவள**
நாடதிப ரானவிட்சு நாதா சதாசிவமே. 36

சிவமாகிச் சத்தியொடு சேர்ந்துருவ மாகித்
தவமாய் முளைத்ததனிக் கரும்பையே விரும்பாய்
அவமா யப்பிசித மருந்து மனமேயுற்
பவமா ரணமாம் பவக்கடலை நீந்துவையே. 37

நீந்த வருகடலாம் நீயுன் கருணைகப்பல்
கூர்ந்தருள் பாய்மரமாங் கொடியென் கொடியாகும்
போந்[6]திகல் வேறு புகலிடமுண் டோமலைமான்
காந்தனென்னு மங்கைவ்ளர் கன்னற் பெருமானே. 38

பெருமான் கரத்தேந்தும் பெம்மானை வேதன்
றிருமான் மகிழுமங்கைச் செங்கரும்பைப் போற்றுவர்தாம்
இருமா நிலத்துக் கிறையாகி யப்பாற்
பொருமான் விழிச்சசியைப் பொன்னுலகை யாளுவரே. 39

பிரதிபேதம்: 1. சுணரே. 2. தங்கை. 3. மங்கை 4. மலைவார். 5. பொன்ற. 6 திருக்க

ஆளுங் கரும்பி னடிச்சார மாலறிவான்
வேளு மறிந்துலகை வென்றிடுரிந் தான்மனமே
கோளு மகலுமந்தக் கோலத் திருவடிநீ
நாளும் நினைவாய் நமனும் நினையானே. 40

வேறு

நினையும்வினை நினையாத வினைக டன்னால்
நீணரக சுவர்க்கமெய்தி நிலவி ராப்போற்
புனையும்வினை மாந்தர்களே முள்ளை முள்ளாற்
புரிந்துகளை வதுபோலப் புவன மீன்ற
அனையுமலர்ப் புங்கவனும் போற்று மங்கை
யமர்ந்தகரும் பேசர்சர ணார விந்தந்
தனையுமுகந் தவர்பணியே செய்தாற் கன்மந்
தருவினைபோம் பரமபதந் தானுண் டாமே. 41

தானுண்டென் றிருப்பவர்க டமைப்பு ரக்குந்
தழல்விழிலோ சனக்கரும்பே தாம ரைப்பொன்
மீனுண்ட வுலகதனி லாசை மூன்றால்
மெத்தமன மேமயங்கி மிகவ ருந்தி
ஆனுண்ட வுணவினரை நம்பிக் கான
லருந்தவிடாய் [1]தீருமென வலைவார் போல
நானுண்டென் றுனைப்பணிய வறியா தேவீ
ணாளாய்வீ ணாளாய்வா ணாளுற் றேனே. 42

உற்றவரை வேற்றுமையா யெண்ணித் தோளி
லுகந்திருந்து செவிகடிக்கு முழுத்தர் தம்மை
யிற்றவரை யடுத்தொருசாண் வயிற்றுக் கீயே
வெச்சில்தின்றும் வீடாய்தீரா திருந்தே னுக்கே
கற்றவரை வளைத்துநகைத் திஞ்சி மூன்றுங்
கண்ணம்பா லெய்தகறைக் கண்டர் தொண்டர்
நற்றவரை யாதரிக்கு மங்கை வாழ்கன்
னற்பரனே தற்பரனே நலஞ்செய் வாயே. 43

நலம்புரியும் வெண்டிருசெந் திரு[2]வு லாவும்
நளினதடஞ் சூழ்மங்கை நாடு கந்து
கலம்புரியு மங்களநா யகிபங் காளா
கரும்பேசர் திருக்கோயில் கண்டு வண்டூர்

பிரதி பேதம்: 1. தணிநீரென், 2. திருவும் வாழும்.

வலம்புரியுந் தெண்டனிடும் வாய்பு தைத்து
மதலைதர வேணுமென்று மறுத்து ரைத்தான்
சலம்புரியு மதன்போர்க்கு வின்ணா ணாகத்
தான்பகைநீர் நானுமென்றே சாற்று வீரே. 44

சாற்றுபுரா ணாகமவே தாந்த(ம்) மேலாஞ்
சச்சிதா னந்த[1]மெனச் சராச ரங்கள்
போற்றுதனி மூலமெனும் வேழ மூர்த்தி
பொற்கழலை நினைந்திறைஞ்சிப் போற்றா தார்தாம்
வேற்றுரு வநேகமெடுத் துலைந்து நோவால்
மெலிந்திறுதி[2]க் காலமுற்று மேதி வாழ்வெங்
கூற்றுவச[3]மாய்ச்சூல முங்கட்டச் சூலங்
குற்றவெழு நரகினிலுங் குடியா வாரே. 45

குடியாய மங்கையினு மன்பர்மனத் தினும்வாழ்
குளிர்கலா நிதிநதிசேர் கோடீ ரத்தா
துடியாருஞ் செங்கராசங் கரகி ரீசா
தோகைவளர் கரும்பேசர் துணைத்தாள் போற்ற
மிடியார்நல் குரவலகை விலங்கு தீக்கொள்
விடவரவ மகலும் வினைக டரும்
அடியார்போற் றாழ்வில்லா வாழ்வுண்[4]டாகி
யருளுண்டா மெய்ஞ்ஞான வறிவுண் டாமே. 46

அறியாமை யிருக்குமன வஞ்ச புஞ்ச
மருந்துயரம் பலபிணிக்கா தார வில்லம்
குறியான மலபாண்ட மயான காட்டங்
கொடுங்காம வறைதவறு குடில பீடம்
வெறியான பித்துருவங் கர்ம காண்ட
மேவியுனக் காளாகி விடிவ தெந்நாள்
மறியார்செங் கரதலனே [5]வடியார் வாழ்வே
மங்கைவளர் கரும்பேவின் மணிக்கண் ணானே. 47

கண்ணாடி தனில்யானை காண்பார் போலென்
கருத்திலுனைக் காண்பதெந்தக் காலங் காலன்
உண்ணாடிப் பாசமுங் கைக்கொண் டதட்டி
யுறுக்கியழைத் திடப்பயந்தே யுடல்விட் டாவி
விண்ணாடிப் புலன்[6]பொறிகள் விழிசு ழன்று
விக்கலைமே லாய்வருந்தும் வேளை கண்டே
மண்ணாடி வந்தருள்வாய் மங்கை வாழ்வே
மங்களநா யகிபாகா மழுக்கை யானே. 48

பிரதி பேதம் : 1. மதாய்ச், 2. யாய்ச்செங்கண், 3. மாயபயு காசங், 4. டாய்நல்ல, 5. வறிஞோர், 6. மயங்கி.

மழுப்புரமுங் கருணையில்லாக் கண்ணு மீயா
மரக்கரமு மின்சொலில்லா வாயும் பெற்றுக்
கொழுப்புடன்பூ பாரமென வீணா ணுண்டு
கொடுவினைக்கா யுடலெடுத்துக் கொண்ட லைந்தேன்
முழுப்புவன சிருட்டிதிதி சங்கா ரம்மா
முத்தொழிலு மெத்தொழிலு முடிப்போ மென்று
விழுப்புயர்வெள் ளேறுயாத்த கொடிக்க ரும்பே
வேண்டுமுன தருளிதுகாண் வேளை தானே. 49

வேளையெரித் தாய்கமலன் றலையைக் கொய்தாய்
விழிபறித்தாய் மாலைதக்கன் வேள்வி வீட்டாய்
தாளையசைத் தேயுதைத்தாய் சமனை வெற்பார்
தசமுகனைப் பெருவிரலாற் றணியச் செய்தாய்
நாளையென வெண்ணுமற் ருழ்வு வாழ்வும்
நல்கினவன் பன்பவர்போல் [1]நானு மாகேன்
வாளைதிகழ் தடம்புடைசூழ் மங்கை நாட்டில்
வளர்கரும்பே யென்பிணியு மாற்று வாயே. 50

வேறு

வாயுந் திகழ்மன மாகந் திரிவித
மாகுங் கரணமு மேகமுமாய்
வேயுந் தருமணி போன்மங் கையில்வளர்
வேழங் குடியென வாழீசர்
சேயுந் தமிழ்மறை யோனுந் திருமக
டேவு முனிவர்க டேவருமன்
பாயுந் தொழுதருண் மேவுந் திருவடி
பணிவா ரவர்வினை தணிவாரே. 51

தணியுங் கருமுகி லகிலசை வலமருள்
தாரே வுன்றற வார்குழல்கார்
மணியுந் திருமகள் கலைமக ணிறமென
வங்கயல் விழிசேர் மங்களமான்
அணியுங் கழையுரு வெனவும் வளர்பர
னம்புய வடியிணை நம்பியுமே
பணியுந் தவிர்வது செனனம் பலபிணி
பாசமு மிகலயம் பாசமுமே. 52

பிரதி பேதம் : 1. நாடி நானும்.

பாசன மிசைபரி பாகுட னறுசுவை
பாலமு தடியா பாலுறவே
போசனம் நுகரவு மேதில னுமதிரு
போதடி பரவவு மேதவரும்
மாசன வேதக டார்சுழல் பிணிகெட
மாதய வருள்செய் மாதாவாய்
மோசன வாநதி வாழ்சடை யணிகழை
மூலமர் செகபரி பாலனரே. 53

பால னயனமது வேள்புர திரிபுரம்
[1]பாவக புரமென மேவுகவே
காலன முயலகன் மேலடர் புரிவது
கால்கர மதுவெலுந்[2] தோவினையே
மாலன வருளது தானடி யவர்துயர்
மாளவு மிகல்செயும் வாண்மனமே
வேலன விழிநடை யாளுமை புணர்கழை
வேதரை நிதநினை தீதிலையே. 54

திங்கரும் பிணிக்குடல் நொந்துழல் வதுவின்றிச்
சேர்ந்தடி யவரெனத் திரியாது
பாங்கரு மொழிநித மோஞ்சிவ வெனவுமன்
பாந்திரு முறைகளைப் பகராது
கோங்கரும் பிணைமுலைச் சாம்பவி யுடனுனைக்
கூர்ந்தக நினையவுங் குறியாது
பூங்கரும் பதில்வளர் சாம்ப சதாசிவ
பூங்கழ லிணையருள் புரியாயே. 55

புரியு மிருவினை தனிலும் வருபிணி
போக்குறு துலைதுன் மார்க்கரே
எரியு மாகிமதி விழியு மணிகரும்
பேசர் மங்கையினில் வாசமாம்
வரியு மணியான் விழியின மணியது
மந்திர மாவதெ ழுத்தைந்துமே
தரியு நினையுநல் லவிழ்த மனுதினஞ்
சாற்றுவீர் திருவெண் ணீற்றையே. 56

பிரதி பேதம்: 1, பாறிட வமர்தரும் விறடனே, 2, மாலிபமே,

நீற்றறை யுறைதிரு நா[வு]க்கர சிடரினை
நீக்குவ தெனவடி யேற்கடரா
காற்றறை வலியற லூற்றொடு பொருமியுங்
காத்திர மிழைத்திரை காற்றருநோய்
மாற்றருள் புரியினி யாற்றில னுனதடி
மாத்திரங் கதியல தாற்றுவரார்
வேற்றலர் புரமெரி நேத்திரம் வளர்நுதல்
வேட்கரும் பிறைவபஞ் சாக்கரனே. 57

கரமஞ் சுடைக்ய முகனந் தரிபரை
ககமங் கையில்வட திகைவாழுஞ்
சிரமஞ் சுடையவர் [1]பரைமங் களமயில்
தினமும் புணர்கழை வனவாசர்
சரமஞ் சுகடிகழ் மதில்மண் டபமுயர்
தடமுன் றினில்பணி விடைசெய்வோர்
புரமஞ் சுறயம னமரும் பழவினை
பொருதும் பிணிகளுங் கருதாரே. 58

கருதார் திரிபுர மெரிதா விடவடர்
கண்ணுத லேமறை விண்ணவர்மால்
வருதா பதர்பணி கழையே சுரமலை
மஞ்ஞையோர் பால்வளர் பிஞ்ஞகனே
ஒருதாழ் வடமொடு திருநீ றிடவுனை
யுன்னிட வேநித மன்னவர்பால்
இருதாண் மலரருள் [2]புரிவா யெனையவ
[3]ரென்னையு மேசெய்வை [4]யின்னமுதே. 59

இன்மையு மறுமையு மம்மையு [5]மெழுபிறப்
[6]பெய்தியும் பணிவிடை செய்தறியேன்
நன்மையுந் திகழறி வின்மையும் பிணியொடு
[7]நைவனுன் னடிபணிந் துய்வதெந்நாள்
பன்மையு மொருமையு முண்மையு மறைபுகல்
பங்கய கரபண கங்கணனே
வன்மையும் பலதளை மென்மையி லணிவள
மங்கையில் வளர்கழைச் சங்கரனே. 60

பிரதி பேதம்: 1. வர. 2. புரிவா யவரென, 3. வென்னையு, 4. யுன்னருளே, 5. மெழுமையு, 6. மின்புட னுனைநினைந் தன்புசெய்யேன், 7. நயந்துடல் வருந்தினேன் வந்தருள்வாய்.

வேறு

சங்கினம் பணைசூழ் மங்கைநா [1]டாளுஞ்
சாம்பவி மங்களே சுவரிதன்
பங்கினர் கரும்பே சுரரிரு ணளின
பாதமே கதியெனப் பணியக்
கொங்கினங் கமழும் புட்பசா திகளாய்க்
கூவிளை யறுகுவேர் கொழுந்தாய்
அங்கினம் கோவில் திருப்படி யாகவு
மமைத்தெனைப் படைத்தில னயனே. 61

அயமுகன் றக்கன் வேள்வியி லுகந்தே
யதிலவிப் பாகமும் வேண்டுங்
கயமுகன் முதலாந் தேவருக் கெல்லாங்
கனல்விழி யுதித்தவன் கையாற்
பயமுக மளித்தா யப்படி யடியேன்
பாரவல் வினையினைப் பாராய்
நயமுக மாகும் பத்தவற் சலனே
நாதனே மங்கைநாட் டரசே. 62

அரசுதா கரன்சேர் பவளகோ டீரா
வமலனே திரிபுராந் தகனே
பரசுபா ணியனே திருவளர் கரும்பே
பரமனே யெனப்பெயர் பகர்ந்து
சிரசுமேற் கரமா யகத்திலஞ் செழுத்துந்
திருவெண்ணீ றக்குடன் றிகழ
முரசுயர் கோவில் வலம்புரிந் திடுவார்
முத்தரா யிருப்பவர்முத் தினத்தே. 63

முத்திருந் திலகு முளரியந் தடஞ்சூழ்
முத்தமிழ் மங்கைமூ தூர்வாழ்
நத்திசை கிரீப மங்கள நாயகி
நயனமாஞ் சகோரமு நாடப்
ப்த்திரு நான்கு கலைவள ரமிர்தப்
பசுங்கதிர்க் கன்னலம் பரனென்
றெத்திசை துதிக்க வுதித்தனை விண்ணோர்க்
கிறைவனே மறையவர்க் கிருக்கே. 64

பிரதி பேதம் : 1, டாமுஞ்.

இருக்கு மாசன மீதிலன் பாகவே
யிருத்தியேநல் லமுதுக ளென்றுமன்
பருக்கு மீய்ந்துன் பணிவிடை செய்தபின்
பாலிப்பாய்நின் பரம பதத்தையே
முருக்கும் நெரித்தட செங்கனி வாய்க்குறு
மூரலா [1]லும துள்ள முகந்துதான்
செருக்கு மங்கள நாயகி பங்கில்வாழ்
செம்மலே யெம்மையாள் சிவனே. 65

சிவந்த தாளை நினைந்தருட் செல்வந்தான்
சேரவேயறி வின்றியுந் [2]தேசமேல்
உவந்த தீப மிருக்கவுந் தீயுகந்
தோடிநான் தேடியு முலேந்தேன்
அவந்த யர்விலி கூற்றஞ்சு மேயெழுத்
தஞ்சுமேயென் னுளத்தி லழுத்துவாய்
கவந்த வார்சடை வளர்கரும் பேசனே
காமனைக் [3]காய்ந்தருள் கணனே. 66

கண்ண னுலிரு கண்ணனு மாயிரங்
கடவுளர் பதிகளுங் கருதேன்
றிண்ண நின்றிருக் கோவி[லி]ல் மேவிய
திருப்பணிச் சிலையெனச் செனிப்பேன்
எண்ணமீ தன்றி வேறிலை தானெனக்
(கீ)[கே]ழைபங் காளனே யிரங்காய்
தண்ண மேந்திய [4]காதல் விமலனே
[5]சடிலனே கற்பகத் தருவே. 67

தரும நீதியு மோட்சசா தகங்கள்
சாத்திரங் கலைகளுந் தரித்தே
உரும மந்திசந் தியிலுநின் றிருப்பெயர்
ஓர்(தி)[த]ர முரைத்திட வுணரேன்
கரும தேக மெடுத்தலைந் தாற்றிலே
கரைத்திடும்புளி யாகினேன் காத்திடாய்
மரும மாதவன் வேதவன் போற்றிடு
மங்கைவாழ்செங் கரும்பிறை வள்ளலே. 68

பிரதி பேதம்: 1. லுமதருட் செல்லான். 2. திகைத்தே, 3. காய்மா, 4. பாணியாய் பாணிவாழ், 5. சங்கரா மங்கையுத் தமனே.

வள்ளத்தா மரைமலர் வாவிசூழ் மங்கை
    வளர்கரும் பேசர்சே வடியை
உள்ளத்தா மரைமிசை வைத்தெழுத் தஞ்சுநா
    றுருச்செபித் துகந்திடு வோர்கள்
வெள்ளத்தா மரைமயில் திருமயில் நாளு
    மேவிவாழ்ந் தன்புமேன் மேலும்
கொள்ளத்தா மரைமதி யணிந்தவ ரடியார்
    கொள்கைபோ லிருப்பர்தாள் குடியே. 69

குடிக்கும் நீரெனக் கானலைத் தாகமாய்க்
    குறுகியே மறுகின குணம்போல்
மடிக்குந் தெய்வங் களைநாடிக் கும்பிட்டே
    வாழ்த்திநா னிழைத்துனை வணங்கேன்
தடிக்கும் புல்லறி வாளனைக் காத்திடாய்
    தஞ்சம்நீ கதியாகுஞ் சபையிலே
நடிக்கு மங்கை வளர்கரும் பேசனே
    [1]நம்பனே சொன்னபன் னகனே. 70

வேறு

நகத்தி னாற்பொன் னசுரனை மார்புகீண்
டிகத்தின் மேலரி யெய்தும் வெறிகெட
வகத்திற் புள்ளுரு வாங்கரும் பேசனே
சகத்தி லென்றுயர் தன்னையு மாற்றுவாய். 71

மாற்றலர் முப்புர மாள நகைத்துவன்
கூற்று [2]தன்னையுங் கோபித் துதைத்தனை
போற்று மன்பர் புகலன்பி னலன்றோ
[3]ஏற்றுயர் கொடியாய் மங்கை யீசனே. 72

ஈசர் மங்கை யிறைவர்பொற் றாளன்பிற்
பேச யாரும் பிழைதவிர்ந் துய்குவார்
நீசர் நாளைப்போ வார்நிறை யன்பினாற்
பாசம் போயம் பரமன்று ளெய்தினர். 73

எய்தி கத்தினி லின்பதுன் பத்துயர்
பொய்தி கழ்ப்புன் புலையுடம் பாற்றி(நீ)யே
வைதி கச்சைவ வாழ்வுகந் தீசனே
செய்தி கழ்ச்சியில் லாதருள் செய்வையே. 74

பிரதி பேதம்: 1. நதிசெடாதரப் பூத நாதனே. 2 மஞ்சிடக். 3. ஆற்றுயர் சடையாய்.

வைய மாநில மாய்ப்புரம் வென்றவர்
வைய மீது வளர்கரும் பேசுரர்
செய்ய தாமரைச் சேவடி சிந்தனை
செய்ய வேதன் சிருட்டிப்ப தில்லையே. 75

தில்லை மாவனஞ் சேருஞ் சிதம்பரத்
தெல்லை காண வெமபுரங் காண்கிலர்
தொல்லை முத்தி யுதவினை பொற்கிரி
வில்லை யேந்துகை வேழம யேசனே. 76

ஏச யாரு மெடுத்துடல் நோயினால்
மாச டைந்தனை வந்து வணங்கிலேன்
பாச மோடெம்மை படைத்தவ ராள்வதுக்
கேச டைவுமுண் டோசொல் கிரீசனே. 77

[1]கிரிகை யாலுமுன் கேசவன் பூசைதாள்
அரிய கண்ணிடந் தாழிபெற் றுன்மங்கை
யுரிய வீசர் பணியுகந் தோர்கட்குத்
தெரிய ஞான கிரிகையுஞ் சித்தியே. 78

சித்த ராதிமூ வாறு திருக்கணம்
பத்த ராகிப் பணிவிடை செய்தலால்
நித்த ராயநன் னிலைமையுற் றூர்மங்கை
அத்தர் தாணினை வார்க்குமுண் டாகுமே. 79

ஆகு வாகன ராறு முகவர்க்கு
மாகு மையர் மதனயன் மாதுலர்
நாகு மங்கள நாயகி மால்பங்கா
ஆகு லத்தெனக் காண்டவ ராமின்னே. 80

வேறு

மின்னாரிடை மடவார்மயல் மேவும்[பிணி] யினிலிப்
பொன்னாரவர் சுவர்க்கஞ்சுக போகந்தரு மென்றே
என்னாருயிர் சுடர்தீபவண் டென[2]வேசுழல் கின்றேன்
துன்னார்புர மெரித்தோயருள் துணைத்தாமரை யடியே. 81

அடியாருட னுறவாய்த்திரு வடித்தொண்டுகள் புரியேன்
நடியார்சபை முதல்மாதலம் நாடேன்தட மாடேன்
மிடியார்பிணி பசிவாட்டவும் வினையேனுனை நினையேன்
துடியார்கர தலனேகமைச் சுடரேயரு டருவாய். 82

பிரதி பேதம்: 1. கிரியை, 2. வாயின் கரும்பே.

தருவார்பொழில் சொரிதேனிறை தடத்தாமரை யிடத்தார்
மருவார்திரு மங்கைப்பதி வாசர்கரும் பேசர்
திருவார்மதில் சிகரந்திகழ் திருவாலய மருவார்
கருவார்பிறப் பிறப்பாய்நர கத்தேயுறை வித்தே. 83

வித்தாரம துரஞ்சித்திர மேலாசொடு நாலாம்
பத்தாரழ கார்வாழ்கவி பாடிப்புகழ்ந் தோர்கள்
இத்தாரணி முழுதுந்திரிந் திளைத்தேனென்னை யழைத்தே
முத்தார்செழுங் கரும்பேசுர முதல்வாவரு ளுதவாய். 84

உதவாரவர் பொருளாறன லுளவா..........களவுக்
கித[1]வாமுன தடியேன்கலிக் கிவர்தாமிரங் குவரோ
சதவாண்மகன் முதலோர்[2]கிரி தருமங்கையும் வெருவ
மதவாரண முரித்தோய்திரு மங்கைப்பதி யானே. 85

யானென்பது மகமென்பது மினதென்பது மனத்தும்
ஊனென்பது முடலென்பது முயிரென்பது முயிருக்
கானென்பது மருளென்பது மறிவென்பதும் நெறிநீ
தானென்பதும் வேறேவுரை திருசெங்கழை [3]யரனே. 86

[இதற்குமேல் பாடல்கள் மூலப்பிரதியில் காணப்பெறவில்லை.]

பிரதி பேதம் : 1, வாய்மது வியாகுவ ரிவர்தா, 2, மலை, 3, யானே,

6. திருவெவ்வுளூ ரந்தாதி

உடையவர் தோத்திரம்

வெண்பா

ஆழிசங்கை மாற்களித்தா யாண்டன்பர் தம்பிறவி
ஆழிசங்கை மாற்றிவைத்தா யம்புயத்தி—லாழிசங்கை
பூதூர வையாநின் பொன்னடியென் சென்னியிறும்
பூதூர வையாயிப் போது. 1

நம்மாழ்வார் தோத்திரமும் அவையடக்கமும்

கலித்துறை

சீரார் குருகையன் ருடொழு துட்கொண்டு சிற்றறிவிற்
கூரார்வ மேத்துக வென்னப் பழங்கணைக் கொல்லநற்பா
லாரார் கவியிற் றுயின்ருயென் றெவ்வுளந் தாதிசொல்வல்
பாரார் கவிக்குற்றம் பாரா ரெனும்பலம் பற்றிநின்றே. 2

கனகவல்லித் தாயார் தோத்திரம்

வெண்பா

என்கோ தறமுடித்திங் கேத்துவே னென்றுமெவ்வுண்
மன்கோ னிடத்தார்வம் வைத்துறையும்—பொன்கோ
கனகவல்லித் தாயார் கனத்த தனத்துக்
கனகவல்லித் தாயார் கழல். 3

வாணி தோத்திரம்

கட்டளைக் கலித்துறை

பாரதி கந்தர நந்தாள நந்துறழ் பங்கயத்திற்
பாரதி கந்தரு மேனிப் பணியிடைப் பந்திற்கொங்கைப்
பாரதி கந்த மறையோன் கிழத்தியின் பத்மநற்ருள்
பாரதி கந்த புலேயே னிவரப் பவக்கடற்கே. 4

நூல்

கட்டளைக் கலித்துறை

திருவரன் பாரிற் றிருவரந் தந்தன்பர் சேயெனத்தாய்க்
கருவரன் மாய்த்துக் கருவரன் றோட்டக் கடிந்தவன்றம்
பருவரன் மோதும் பருவரன் பிற்கருள் பண்பினன்கா
மருவரன் கௌரி மருவரன் போற்றெவ்வுண் மாயவனே. 1

மாயா வுடலருண் மாயா வமரர் வழுத்தெவ்வுளாந்
தேயா விருவினை தேயா வுனைத்தொழல் செய்திலர்க்கென்
றுயா வறிபவர்க் காயா யருமறை யாய்ந்தறியாக்
காயா நிறத்தவ காயா யிழுக்கனைக் கண்டுகொண்டே. 2

கண்டா மெனுமொழி கண்டா னரவிந்தங் கார்குழல்சேர்
தண்டா மரையவ டண்டாத மார்ப சலங்கவர்ந்த
கொண்டா லடியனைக் கொண்டா ளினக்குக் கொடுஞ்சிரம
முண்டா வுரையனை யுண்டா யணியெவ்வு ளூரத்தனே. 3

அத்தா வனைச்சக்ர வத்தா வழிவழி யாளவந்த
சித்தா வுனைத்தெரி சித்தாவ வின்மனஞ் சோர்ந்துருகிக்
கத்தா வெனச்சொலிக் கத்தாதிருக்கிற் கவினெவ்வுளூர்ச்
சத்தாய பரவசத் தாவெங்ஙன் முத்தி சார்வதுவே. 4

சாரலே வேங்கடச் சாரலே நண்ணித் தலமடவார்
மூரலே முத்தென்று மூரலே யீட்டியென் மூடநெஞ்சே
யீரலே போற்கத்தி யீரலே வவ்விக்கொண் டீமக்குறள்
பாரலைத் தோடுவ பாரலே யாதெவ்வுட் பற்றுவையே. 5

பற்றின மற்றிலன் பற்றின மாகியும் பத்தர்களக்
கற்றின புன்மையன் கற்றின மேய்த்தவ கண்ணபொறி
யிற்றின வுள்ளம் பயிற்றின னுதலி னீண்டுய்குவ
தெற்றின லாய்பணி யெற்றின னுயெவ்வு ளின்றலனே. 6

இன்றல மந்தன னின்றல கிட்டிட லெவ்வுளென்னு
னின்றல முற்றவ னின்றல் லில்ல னிரைபிரிந்த
கன்றல மர்ந்துழல் கன்றல னன்பர் கணமகன்றூற்
குன்ற லடர்முலைக் குன்ற லரும்பொன்னைக் கூடுரனே. 7

கூடு மடியருட் கூடு மவர்துதி கொண்டவெவ்வு
ளூடு மயன்மறை நாடு மகத்திலு நற்பரம
வீடு மழற்கடு வீடு மராமணி விற்சிரத்தின்
பாடு முனதளி பாடு மலர்த்தாள் பரவினவே. 8

பரந்தா னுனக்குப் பரந்தாம னேயெனைப் பற்றிவிட்டுக்
கரந்தா லுமேயென் கரந்தா வருளெனக் காட்டிநிற்ப
இரந்தா மவற் குயிரந்தான மாகவு மிரவலராற்
புரந்தா விலெவ்வுட் புரந்தா யிலென்கிலர் புன்மையென்றே. 9

என்று மெனுமெனை யென்று ளடிமைக் கிசைவிப்பதே
பொன்று நினைதகப் பொன்று வெனச்சினம் பூண்டனையோ
என்று னிலையடி யென்றுப மேகநின் னின்னருளே
மூன்றுச ரேத்தெவ்வுண் முன்றுக மோடு முயங்கினனே. 10

முயங்கு மறைகண் முயங்குமென் றுலிந்த மூடனுக்கு
வயங்கு னடிப்பங் கயங்கு றுங்கொல் வறிதடைந்தேன்
தயங்கு பொறியி லியங்குவட் டூர்மது சார்ந்துணுமோ
கயங்கு லவெவ்வு ளியங்குகண் ணுவிரங் காததென்னே. 11

காதலை யான்சொலி னுதலை யோதிலை காணவென்னின்
ஈதலை யானென வோதலை மெய்யுரு வேணுமன்பர்
மாதலை யீட்டத்தை யீதலை யாநின் மழையெனுமெய்
நோதலை யுற்றிடு மோதலை வாவெவ்வு ளுறைன்றவனே. 12

நோன்ற தவங்களு மான்ற பலபல நூலறிவுஞ்
சான்ற வொழுக்கமு மேன்ற வருத்தியுஞ் சால்புமிவை
போன்றன வென்னுளை தோன்றலின் றேனுமென் புன்றலையி
லூன்றநின் றுளரு ளீன்றளிக் கும்மெவ்வு ளூரவனே. 13

ஊர்ந்தான் கருடப்புள் ளூர்ந்தான் கனக னுரத்தைமுன்ன
ரீர்ந்தான் மலமனம் பேர்ந்தான் வளங்குல வெவ்வுளிடைச்
சார்ந்தான் சுரர்க்கருள் கூர்ந்தான் றனைப்புனை காற்கவியிற்
சேர்ந்தான் மனக்கறை தீர்ந்தான் றினமெனைத் தேற்றுவனே. 14

தேற்றினன் றெண்டரை மாற்றினன் புன்கருச் சீர்விரசை
யாற்றினன் சக்கர மாற்றினன் போற்றிடு மன்பருழை
யூற்றினன் றண்ணரு டோற்றினன் றென்னெவு
[ளூரன்வின்னுண்
ஏற்றினன் பார்த்தரு ளாற்றின னில்லையெற்
[கென்னென்பனே. 15

என்னைக் கருதுரை யென்னை யிடாரி விருத்தினதாற்
பொன்னை யணிநிறத் துன்னைச் சுகத்திற் பொருத்தியதோ
அன்னை யுயிர்க்கென முன்னை மறைக ளரற்றன்மெய்யோ
மன்னை வரையளி பின்னை வராவெவ்வுள் வாழ்பரனே. 16

பரனைக் கனகாம் பரனைக் கவினெவ்வுட் பரற்கிருபா
கரனைப் பொருவிற் கரனைத் தனியலக் கையன்சகோ
தரனைத் துளசி தரனைத் தரிசிக்கத் தந்தவப்பூ
வரனைப் புகழ்வன் வரனைப் பெறப்போவ திற்பெரிதே. 17

பொரியா யுளத்திற் பிரியா தெனையிடர்ப் பேரகழி
தரியா தெடுத்து விரியா டகக்கழற் சார்த்தவுருக்
கரியா யுலகிற் கரியா யிரங்கெனைக் கண்டுமெவ்வுட்
புரியா வருளைப் புரியா யெனிலென்ன பூட்டகமே. 18

பூட்டா யுதிபவுங் கூட்டா யென்னற் புதுமைவினை
யாட்டாக வாடலை வேட்டா யெனுமிஃ தறிகிலன்மேல்
வீட்டா யெழிலெவ்வு ணாட்டா யபய மிளிர்வரதம்
தாட்டா மரைகளுங் காட்டா திருந்திடிற் சாலநன்றே. 19

சாலுங் கொடியனைப் போலு மொருவசை சார்ந்துறவா
னுலுங் கமலத்த னேலும் படிசெய் கலனவமெப்
பாலுங் கொளாவகைக் கோலும் படியெனைப் பண்ணுவித்தெக்
காலுங் கணித்தனை மேலும்ப ரேத்தெவ்வுட் காவலனே. 20

* மடக்கு

காவ லரும்பன கத்திந்தி ரனயன் கைகுவித்துக்
காவ லரும்பன காசல வென்னக் கவினெவ்வுட்சு
காவ லரும்பன கொங்கைப்பொன் காந்த கடையேற்கன
காவ லரும்பன சக்கனி யேயருள் கண்டனனே. 21

---

*21-ஆம் பாடல் முதல் 30-ஆம் பாடல் முடிய மடக்கு என்றும் இலக்கண வகையைச் சார்ந்தவை; மடக்காவது : வந்த சொல்லே ஒவ்வொரடியிலும் வந்து பொருள் வேறுபடும்படி பாடப்படுவது இப்பாடல் ஒவ்வொரடியிலும் முதலிரண்டு சீரும் ஒரே சொல்லாக வந்த அடிமுதல் முற்றுமடக்கு எனப்படும். இது யமகம் எனவும் வழங்கப்படும்.

கண்ணமை யன்ன வெழிறோ ளுருக்மிணி காந்தன்கஞ்சக்
கண்ணமை யன்னவ நீதமுண் டானெவ்வுட் கத்தனடிக்
கண்ணமை யன்னனி யற்றுநெஞ் சேமுத்தி காணவிடுக்
கண்ணமை யன்ன வுடலைச்சே ருதுக டன்மையன்றே. 22

கடத்த விரும்பத மூன்றினைக் கன்மமிக் காயமென்னுங்
கடத்த விரும்பத ராகுமென் னெஞ்சினைக் கட்டித்துன்பங்
கடத்த விரும்பத மாக்கிடிற் புண்ணியங் காவில்வாரற்
கடத்த விரும்பத ரார்க முடுக்கெவ்வுட் காரணனே. 23

காரம ருந்தனி மேனிய முன்ன வுகாரநன்ம
காரம ருந்த வெவ்வுள தாய்சேய் கதறத்தருங்
காரம ருந்த வதுபோற் பொறிசென்று காமமென்னு
காரம ருந்தயி லாதரு ளெற்குநின் கான்மலரே. 24

மலைவருந் தங்க ளறிற்றள்ளி யென்னை நமன்றமர்செம்
மலைவருந் தங்க மதைப்பெண்ணைப் பூவைக்கொள் வான்மறமா
மலைவருந் தங்க மதாற்புரி யும்முனம் வந்தருள்க
மலைவருந் தங்க லையிற்றுயின் றோயெவ்வுண் மங்கலனே. 25

மங்கலந் தங்க வந்தகன் கிட்டிலன் வாய்த்திங்குச்சே
மங்கலந் தங்க மதிலாழி சங்கம் வரைவித்தனன்
மங்கலந் தங்க மனமே பவமற வந்தவனுர்
மங்கலந் தங்க வுடையவ னெவ்வுளின் மானவனே. 26

மானவ நந்த னரும்புதல் வாமணி வண்ணசந்த
மானவ நந்த வனந்திக ழெவ்வு ணிவாசமுன்கன்
மானவ நந்த வடிவைத் தனையெனின் வைக்கவதை
மானவ நந்த சயனுவிப் போதென் மனக்கல்விலே. 27

மனவலங் கார நெடியவ மூவடி வாங்கியவா
மனவலங் கார திருவெவ்வு ளீச மணிவலய
மனவலங் கார மராகமுங் காட்ட மகிழ்வையுற்ற
மனவலங் காரண மென்கொலுன் னித்தொழ வந்ததுவே. 28

வந்தனந் தந்த வெனைநீ மறுக்கறம் மல்லலுறி
வந்தனந் தந்தவ றில்லல்ல லெங்ஙன மாற்றுவரார்
வந்தனந் தந்த விளரிபச் செல்வமா வைத்தனெனு
வந்தனந் தந்த மனைபுல் கயத்தெவ்வுள் வண்டலனே. 29

வண்டலங் கந்த வனமாலை மார்ப வனத்தெவ்வுளாம்
வண்டலங் கந்த மலரென நின்ற வஞ்சமல
வண்டலங் கந்த வீர்க்காயென் னினுமுனை மன்னுமெற்கு
வண்டலங் கந்தர மின்னார் மயலினை மாற்றுகவே. 30

மாற்றரும் புன்மைய துன்னடி யாரை மறந்திங்ஙனென்
பாற்றருந் தாகர மானே னதுசெயற் பாலதன்றே
சேற்றரும் பம்புய வம்பக வம்பசை செம்மணிக
ளேற்றரும் பட்ட முலைப்பொன் னோடெவ்வு ளிருப்பவனே. 31

இருந்தா யெழிலெவ்வு ளென்செய வோவந் திரந்தவெற்கு
வருந்தா திருவெனும் சொல்வன்மை யின்றி வலியநிரு
தருந்தா னவரும் விருந்தா யருந்திடச் சண்டனுக்குத்
தருந்தா வறுவலி யைக்கலி யைக்கண்டு தாங்கலற்றே. 32

தாங்கிலை யேனுஞ் சரணா ரவிந்தந் தராயெனினு
மூங்கிலை யூதிய வேதிய வெவ்வுள முன்னவவா
றாங்கிலை மேற்றுயில் கொண்டவ வன்பரைச் சுட்டியவர்
பாங்கிலை யோவெனைக் கூட்டா யெனிலென் பகர்நினைவே. 33

*நிரோட்டகம்

நினைத்தனை யென்னி னினக்கேல் செயலினை நேரச்சிந்தை
தனைத்த னைந்தின னிடத்திற்செல் கலாத்திற் சார்தற்கென்னே
யினைத்தனை யர்க்கென் றினியீக லாதெனை யீயநின்னிற்
றினைத்தனை யென்னை நினைக்கிலை யேயென் றினகரனே. 34

---

*நிரோட்ட(க)ம் என்பது இதழ் முயற்சியாற் பிறப்பனவாகிய உ., ஊ, ஒ. ஓ. ஔ. ப, ம, வ, என்னும் எழுத்துக்கள் வாராமற் பாடப்படுவது. "உ ஊ ஒ ஓ ஔ ப ம வ விவற்றியைபு, சேராநி ரோட்டத் திறத்து" என்றாராகலின். நிரோட்யம் என்பது நிரோட்டம் என நின்றது. நிர்=இன்மை. ஓட்டியம்=உதடு சம்பந்தமுடையது, இச்செய்யுள் அவ்வாறமைந்தமை காண்க. [தண்டி. ; சொல்லணியல்].

*காதை கரப்பு

கராவுகச் சேதி தவந்தார் வலயமு காநமவ
வராக ததிசோ ரதணிந் தனனீ வழிநணுக
பராவரு [மெ]மீச கணிக்கறு நாம பனகமணு
மராமிசை வாமத வந்தனின் முன்னந்த மானவனே. 35

†திரிபங்கி

ஆனந்த தாய்நின்னை யேயனை யாய்இம்ப ராமெவ்வுளாய்
தானவள் ளால்மின்னை யேலு ரனேநம்பு தாளினனே
ஊனமுள் ளேன்என்னை யாளுவை யேவெம்பு வோததிதிர்
ஈனமுள் ளேல்முன்னை மாதவ னேதம்ப மேயரியே. 36

---

35. *காதை கரப்பு என்பது, ஒரு செய்யுள் முடியவெழுதி அதனீற்று மொழிக்கு முதலெழுந்துத் தொடங்கி ஒவ்வொரெழுத் திடையிட்டு வாசிக்கப் பிறிதொரு செய்யுட் போதுவது, [தண்டி ; சொல்லணியியல்].

இதனீற்று ['கராவுக' என்ற செய்யுளின்] மொழிக்கு முதலெழுத்துத் தொடங்கி யொவ்வோரெழுத்து இடைவிட்டு வாசிக்க,

“ தனமுனிந்த வாமம
மனமறுக்க மீருரா
கநவனந்த சோதரா
வநமலர்ந்த சேகரா ”

என்னும் வஞ்சித்துறை வந்தமை காண்க.

36. †திரிபங்கி என்பது :

யாதேனும் ஒரு செய்யுளாய் நின்று ஒரு பொருள் பயப்பதன்றி அதுவே மூன்று செய்யுளாய்ப் பிரிந்து முடிந்து வெவ்வேறு பொருள் பயக்கத் தக்கதாகப் பாடப்படுவது. திரி = மூன்று, பங்கி = பேதமுடையது. [தண்டி : சொல்லணியியல்]

இஃது பின்வருமாறு மூன்று வஞ்சித்துறைகளாக அமையும்:

1. ஆனந் த[த]தாய்
தான வள்ளால்
ஊன முள்ளேன்
ஈன முள்ளேல்.

2. நின்னையே யனையாய்
மின்னையே லுரனே
என்னையா ளுவையே
முன்னைமா தவனே.

3. இம்பரா மெவ்வுளாய்
நம்புதா ளினனே
வெம்புவோ ததிதிர்
தம்பமே யரியே.

* பிறிது[படு] பாட்டு

அரியே யலகை முலையுண் டழித்த வரியநிற்கே
புரியே னென்றியா னுனையெக் காலமேனு மொருவகில்லேன்
தரியே னுறுகண் சலதியின் மூழ்கிச் சராசரத்திற்
றிரியே தமற வருளெவ்வுள் வாழ திதிசுதனே. 37

†தகரவருக்கச் செய்யுள்

திதத்த ததிது ததைதா திதத்தொத்த தேதித்தித்தே
துதித்த தத்தத்த துதைதாது தத்துத்தத் தொத்ததிதத்
துதித்த துதைத்ததீ தாதா ததிததத் தோதத்தத்த
ததித்த துதித்ததொத் தித்துத்தித் தத்தத்த
[தாதிதித்தே. 38

---

37. * அடி தொடைகளை வேறுபடுத்தலால் முன்னைய நிலை மாறி வேறொரு செய்யுளாகும்படி பாடப்படுவது பிறிதுபடு பாட்டு, [தண்டி: சொல்லணியியல்]

இச் செய்யுள், நிலைமண்டில வாசிரியப் பாவாகவும் வருதல் காண்க.

அரியே யலகை முலையுண் டழித்த
வரிய நிற்கே புரியே னென்றியா
னுனையெக் கால மேனு மொருவ
கில்லேன் தரியே னுறுகண் சலதியின்
மூழ்கிச் சராசரத் திற்றிரி யேதமற
வருளெவ் வுள்வா ழதிதி சுதனே.

† இச்செய்யுள் தகரவருக்கத்தால் அமைந்தது.

இது மடக்கு என்னும் சொல்லணியின் பாற்படும்.

இதன் பொருள் :

திதித்த=நிலைத்த, ததி=தயிரை, து=உண்ட, ததை=நெருங்கிய, தூதித்து=(பாண்டவர்) தூதினிமைக்கு, ஒத்த=சரியான, தே=தெய்வமே, தித்தித்தே=இரசித்தே, துதித்த=(யாவராலும்) துதிக்கப்பட்ட, தத்தத்த=வரங்கொடுப்பவனே, அதீதா=குற்றமில்லாதவனே, தாது=பூந்தாது, அதி=அதிகரித்த, ததத்து=அகலத்தையுடைய, ஓதத்து=சமுத்திரத்திற் சயனித்த, அத்த=அத்தனே, ததித்த துதித்தது=ததித்த துதித்தென்ன தாளம், ஒத்தி=தட்டி, துத்தி=பாம்பின் படப்பொறியில், தத்து=தாண்டின அத்த=எப்பொருளுமுடையவனே, துதை=நெருங்கிய, தா=உடலாகிய ஆனில், துதம்=அசைவுடைய, துத்தத் தொத்து=நாயாகிய வடிமைக்கு, அதிதத்து=அதிக ஆபத்து, உதித்தது=தோன்றியது; (ஆதலால்) உதைத்து=அவைகளை நின் பாதத்தா லுதைத்தும், திதித்து=என்னை ரட்சித்தும் தா=பரமபதத்தைத் தந்தருள், என்பதாம்,

*ஆறுரைச் சக்கரம்

பதக்கணி லெவ்வுளுள் வீதிக ளில்லன்ப ராதரிக்க
மதக்களி றுங்கொங்கை ரதிவரன் றுதை வருவனந்தா
நிதக்கவலைப்பிணி வாராதின் னம்புனை நீமுற்றும்பா
பதக்கமலத்தைநின் றுய்கலுழ்ந் தாழலென் பாழகமே. 39



* இது சக்கரபந்த மென்ற சித்திரகவி வகையைச் சார்ந்தது. வண்டியின் சில்லுப்போல் அமைக்கப்பட்ட சித்திரத்தில், சில உறுப்புக்களில் எழுத்துக்களைப் பொதுவாக நிற்கும்படி யமைத்துப் பாடப்படுவது சக்கர பந்தமாகும். சக்கரம் = வண்டியின் சில்லு; பந்தம் = கட்டு; ஒடுக்குதல். "சக்கரத் துட்டடு மாறுதருனே. சக்கர பந்த மெனச்சாற் றினரே" என்பது மாறனலங்காரம். இது நான்காரச் சக்கரம், ஆறாரச் சக்கரம், எட்டாரச் சக்கரம் என மூவகைப்படும் ஆரைச் சக்கரம் எனவும் படும்.

39. "பதக்கணி லெவ்வுளுள்" என்ற பாடல் மேற்காணும் ஆறுரைச் சக்கரத்துள் அமைந்திருத்தல் காண்க.

இது, ஆறு ஆராய் நடுவே "தி" என்ற எழுத்து நின்று ஆர் ஒன்றனுக்கு ஒன்பதொன்ப தெழுத்தாய் குறட்டின் மேல் (ஆர்க்கால்களுக்கு அடியில் உள்ள குடத்தின் வளைவான பாகம்) வீரராகவன் என்ற பெயர் நின்று சூட்டின்மேல் இருபத்து நான்கு எழுத்து நின்று இடக் குறுக்கு ஆரின் முனையிலிருந்து அதன் எதிர் ஆரின் முனையிறுதி சென்று முதலடி முற்றி, அடுத்த வலக்கீழ் ஆரின் முனையிலிருந்து அதன் எதிராரின் முனையிறுதி சென்று இரண்டாமடி முற்றி, அடுத்த வலக்கீழ் ஆரின் முனையிலிருந்து எதிர்த்த மேல் ஆரின் முனையிறுதி சென்று மூன்றாம் அடி முற்றி, அதற்கடுத்த வலக்கீழ் ஆரின் முனையிலிருந்து வட்டை வழியே வலஞ் சுற்றி நான்காமடியால் முடிகின்றது.

* வல்லினச் செய்யுள்

தாதா சுகப்பொறி பத்தர்சொற் றிட்டபா தைக்கக்கேட்ட
காதா கதைகோடு கட்கத் தொடுதடி கைக்கட்டெற்ற
போதா பதைபதைக் கக்கெட்ட துட்டற்குப் புக்கதுபோ
தாதா தடுத்ததைப் போக்கிட்டுக் காத்திபற் றப்பதத்தே. 40

** கூட சதுக்கம்

பாழுங் கருக்குழி வாய்விழுங் கன்மத்தின் பாதமறச்
சூழுநன் ஞழுது ஞானநன் மாக்கட ரேய்ந்துண்ணமே
லூழுங் கெடவந் தயர்ந்தெவ்வுள் வாச வுரம்புரிந்து
வாழுங் கதிதரு முன்சர ணும்புய மான்மனமே. 41

† மெல்லினச் செய்யுள்

மான்மா மனமன்னி னுனேமி மாணன் மணிமன்னனெம்
மான்மா னிநன்மண ழுமனம் மண்ணனம் மண்ணன்மண் ணுண்
மான்மாமை மின்னண்ணு மைமான மேனி மனுமினனே
மான்மான நண்ணுமை ஞனுன்னி னேனிங்ஙன்
[மன்னமுன்னே. 42

‡ கரந்துறைச் செய்யுள்

முன்னந் தனுச்சேமஞ் செய்கிலா ரன்பர் மூர்க்கனுக்கை
பொன்னந் தரையிற் புதைத்திழக் கும்மவர் போற்றரித்தாம்
அன்னந்துய்ப் பித்துமெல் லாப்பத னம்புரிந்
[தானென்றெல்லை
மன்னந்த மைகர மாறு வருளெவ்வுள் வாழ்வலனே. 43

§ இடையினச் செய்யுள்

வலவா வொழிய வருள்வா யொளிரெவ்வுள் வாழரியே
வலவா வலாரி யுள்ளே யயர்வீர் வலியவைய
வலவா வயவ ருயிரயி லேவ வலயவாழி
வலவா விழிவா ளரிவைய ருள்ள வழியுழையே. 44

---

* இது வல்லின வெழுத்துக்களால் அமைந்தமை காண்க.

**நான்காமடி யெழுத்துக்கள் ஏனை மூன்றடியுள்ளும் நிற்குமாறு பாடப்படுவது கூடசதுக்கம்; கூடம்=மறைவு சதுக்கம்=மறைவு. மறைவான நான்காமடி யுடையது என்பது பொருள் [தண்டி : சொல்லணியியல்].

இதன் ஈற்றடி எழுத்துக்கள் ஏனை மூன்றடியுள்ளுங் கரந்து நின்றமை காண்க.

† இதனுள் மெல்லின வெழுத்துக்களே வந்துள்ளமை காண்க.

‡ கரந்துறைச் செய்யுள் என்பது : ஒரு செய்யுள், பிறிதொரு செய்யுட் சொல் புகாது எழுத்துப் பொறுக்கிக் கொள்ளலாம்படி பாடப்படுவது. இஃது கரந்துறைப் பாட்டு எனவும் படும். [தண்டி: சொல்லணியியல்]. இதனுள், "தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால், மனக்கவலை மாற்ற லரிது" என்னுஞ் செய்யுட் சொற்புகாது எழுத்துக்கள் வந்தமை காண்க.

§ இச்செய்யுளில் இடையெழுத்துக்கள் விரவிவந்தமை நோக்குக.

ஒற்றின்றி வந்த செய்யுள்

*உழைவிழி மாதி னெடுகா னகமே குறுதினமா
உழைவழி மேவு சிலைபுத லாதி யுனைமகிழ
இழையுப கார மெவனதை நீயுரை யீசதிரு
இழையணி சேருர கேசவ வேத விறுதியனே. 45

இறுதிபெ றுவென் றுன்பங்க ளோங்கின வின்னிசைகள்
அறுதிபெற் றுலுமுன் னின்னருள் போல்வினை வாகிநின்றே
உறுதிபெற் றேமிகு மென்னவை யாதலி னாங்குணரப்
பெறுதியெவ் வுட்பர மானவ பாவம் பிரிடவே. 46

பாவனை செய்ய மனமுண் டெனினும் பருசுவரின்
மீவனை யோவியப் பூவையஃ தொக்கும் விகசிதத்திற்
பூவனை யீன்றவ வெவ்வுள்வா முந்த பொருளொடுறும்
பாவனை யாயரு ளுண்டெனின் மேவும் பரிமளமே. 47

பரிந்திடக் கஞ்சனைக் கொன்றவக் கஞ்சனைப் பாலித்ததென்
புரிந்திட வென்னைய வன்பூவி லெவ்வுட் புரத்தவென்று
சொரிந்திடக் கண்ணீ ருள்நெகக் காவெனச் சொல்விக்கரம்
விரிந்திடத் தாவரு ளென்றக லேனிற்கும் வேதனையே. 48

வேதனை யானன்றி யெவ்வெவா தரமும் விதித்தனனிவ்
வேதனை யெங்களுக் கென்றென் றுஞ் சொல்வா மிருவசைநின்
போதனை யென்றறி யாரூர்க் குதவாப் புதல்வனென்ற
வேதனை யீன்றனை யெவ்வுள நின்னையு மேற்குமதே. 49

ஏற்கும் பதமரு ளாயென்னி லென்பழி யேற்குநிற்குத்
தோற்கும் மெனவுண ராயென்று சொல்லலென் றுன்மதியே
வேற்கும் பழிப்பளி கண்ணிற தாயெவ்வுள் வீரமறை
நோற்கும் பழியறம் நிற்கில்லை யென்று நுவன்றிடினே. 50

நுவன்று பனுவலை லோபர் வெறுங்கை நுவலவகங்
கவன்று வரும்பா வலர்போல நின்றிருக் கண்டுதளி
துவன்று வந்தேற் கருளில்லை யென்றுனின் சுரந்தளிக்கை
யவன்றுன்னு மெவ்வுள் நிற்கறி விப்பதென் னுமறிவே. 51

அறிவாய் மனித னுருவா யெடுத்துற்ற வப்பொழுதே
பொறிவாய்ப் புலன்கள் கிடையாம னோய்கொளப் புக்கினுடல்
செறிவாய்ப் பொருந்த வெயிற்புழுப் போறுடி செய்கையைநீ
முறிவாய்! வுருதெவ்வு ளாய்முறி செய்கவிம் மூடனையே. 52

---

*இப்பாடல் மெய்யெழுத்துக்கள் விரவாமல் அமைந்திருத்தல் காண்க.

மூடும் படிபாநு வைமறைத் தாய்முன்னை முன்னிரண்டிற்
கூடும் யுகத்தி லதுபோ றிரியுமேற் கொளும்யுகத்தில்
வாடும் படியென் னவிர்ஞான பாநு மறைத்தனையான்
வீடும் படிவ திலையெவ்வு ளாயென் விளம்புவதே. 53

விளங்க வெமக்கருள் செய்வானிவ் வெவ்வுளின் மேவவவன்
உளங்கனி பேரரு ளிங்கும்வந் தேத்திட்டு முண்ணவந்தீர்
துளங்க வுடற்றுவ நும்மைநும் மூர்வரிற் றேத்திரிப்பீர்
களங்க மிலாதே குகவர னுதி கடவுளரே. 54

கடத்த நினக்கு நியாயமுண் டோவெங் கருமத்தினென்
னிடத்த விரும்புவ நோய்வினை யாவு மிகுத்தலின்றிக்
கடத்த வனுக்கருள் செய்தவ வெவ்வுள கட்செவியி
னடத்த வினைதீர்த் திடும்வீர ராகவ னுமமுற்றே. 55

நாமஞ் சொலுந்தொழுந் தாமம் வினவு நடுங்குமென்பெண்
காமஞ் சகிக்குமோ நீயே யுனக்கன்று கானிலுன்சே
யாமஞ் சலரான் புரிதுன் பிணையும்பி யாற்றிடப்பல்
யாமஞ் செலுத்தியு மாறினை யெவ்வு ளிராகவனே. 56

இராக மொழித்தே வியர்மக்கள் வீடெனதி யானெனுந்த
மராக விருஞ்செல்வ மிச்சித்து நீயுநல் வாழ்வுவக்கின்
பராக மரைப்பத வச்சுத வெவ்வுள பாரிடந்த
வராக வடியேன் விடுவெனோ பாசப்புன் வாழ்வினையே. 57

வாழ்வார் மறைத்தமிழ் செய்தேத்தி நின்னைநின்
[மாண்பதத்தில்
ஆழ்வார்க ளென்றழுக் காறடைந் தேனன்று யன்பொடுனைத்
தாழ்வார் தலையும் பனுவலு மின்றித் தளந்தெனந்தோ
சூழ்வார் கடல்வைப்பி லென்செய்வெ னெவ்வுணற்
[சுந்தரனே. 58

சுந்தர மாயுண்மெய் மூவாசை யாதியிற் றாக்குமன்பி
லந்தர மாயி னரைமா மடங்கு மடைந்திலனே
கந்தர மேனிய வெவ்வுட் கவுத்துவக் கந்தரசு
தந்தர மென்றெனு மன்புநின் பாதச் சலசத்திலே. 59

சலசத் திருவரைச் சேர்க்கி னகந்தை தருவரெவ்வுள்
நலசத் துவக்குணக் குன்றே நலமெலா நாடிக்கொண்டே
குலசத் துருவெனத் துன்பமெல் லாமெற்கு கூட்டலென்னே
கலசத் தெனுமனத் திற்பதி யாய்நின் கழன்மட்டுமே. 60

மட்டுற்ற கட்டிய மொட்டுமுட் டிட்டுமட் டற்றகட்டு
வெட்டுற்ற புட்கமுற் கெட்டதுட் டத்தெட்டர் விட்டவிட்டக்
கட்டுற்ற லற்றெலற் றட்டதிக் கெட்டிடிக் கட்டுருட்டோர்த்
தட்டுற்ற கொற்றவ சொற்றிசற் றெவ்வுளூட் சக்கரனே. 61

சக்கரத் தற்புதற் கற்புரற் கெவ்வுளிற் றற்பரற்கெட்
டக்கரத் தத்துவற் கெய்ப்பறக் கிங்கரத் தாட்பட்டனென்
உக்கரத் தத்தற்ற கட்குடற் கப்படைக் கொற்றர்க்குப்பா
சக்கரத் திற்குடற் றற்குமஞ் சேனண்டல் சண்டவந்தே. 62

சண்டைகொண் டெண்டிசை மண்டலர் தூற்றிச் சபிப்பரன்றி
விண்டையொக் கும்பொன் றருகினு மெல்லுரை மேவுவரோ
கெண்டை விழிச்சியர்ப் போன்றில னின்னருள் கிஞ்சித்தெற்கு
விண்டை யெனிற்கொள்வன் விண்போக மாக
[விறல்விண்டுவே. 63

வீண்டல மண்டலு மாயநல் குரவினை மேவிடவா
கண்டல ஞதிய ரேத்திடத் தொண்டர்தங் கண்ணிமையா
மண்டல ரிட்டுறத் தேவியென் றேயெவ்வுள் வந்தனைபொற்
குண்டல மாதவ மாதவஞ் செய்ததென் கூறுகவே. 64

கூறுங் களியன்பொ டன்றோ ரழைக்கக் குழவிநனி
வீறுங் களியன் புறவரும் போலெவ்வுள் வீரமுன்ன
மூறுங் கருத்தன்பு நின்னிடத் தெட்டுணை யுண்டெனிலெற்
காறுங் கடலு மடங்காமிக் கன்பெழு மாய்ந்திடினே. 65

ஆயுங் குதலை மழலை ததும்பவ ரற்றென்சொல்லி
லேயுங் கசிய விலையெனி லுன்மன மெத்தகைத்தோ
காயுங் கொடிய வறுமையி னெக்குக் கசிந்தென்றுமென்
றேயுங் கவன்மனங் கல்லன்று மெய்யெவ்வுட் டேசிகனே. 66

தேசவி ராடக வாடைய பாடக தென்னெவ்வுளின்
வாசவி ராகவ வாசையிற் றத்தம வான்மொழிலி
னேசவி திப்பினை யவ்வவ் விபுதர்நி கழ்த்தினரசர்
வேசவி சித்திர செய்ததென் னின்மொழி லீண்டுரையே. 67

ஈண்டு விளைநில மீண்டு வெறுநில மென்றெழிலி
வேண்டுவ தின்றிப் பொழியுமஃ தொத்துயிர் மேல்விருப்போ
டாண்டு வருநீ யறிஞர்க் கருளி யறிவிலெனை
மீண்டு புரந்திலை தோற்றமங் குற்கெவ்வுள் வித்தகனே. 68

வித்தக மார்ந்தின் னிசையோ டிசைத்த விமலர்கவி
எத்தக வாலுவந் தேகேட் டருளிலை யெவ்வுளவென்
பித்தக லற்பக் குரல்கேட் டருளில பேர்மறையோய்ப்
புத்தக நச்சல வெறுப்புநிற் கின்றெனப் போற்றலினே. 69

போற்றுந் தசாவ தார மெடுத்தனை போற்றுமெம்முன்
ரேற்றுந் தனித்தவிவ் வர்ச்சாவ தாரந் தொடுத்துனிசை
சாற்றுந் தவத்தன்ப ரிந்திராதி தேவர் சரணிறைஞ்ச
ஆற்றுந் திருவரு ளோடெவ்வு ணின்றதென் னுத்தமனே. 70

உத்தம பத்தரை முத்தியில் வைத்தெவ்வு ளுத்துங்கநற்
கத்தம கத்துவ னேநீ யளந்திட்ட காலத்தினு
னித்தம ரக்கடல் வைப்பினி லுன்பதத் திற்படாமல்
சத்தம ரெவ்வுரு வுற்றன ணெங்கணுந் தங்கிலனே. 71

தங்களை யுண்டவ விங்கெவ்வு ணின்றவ தத்துரலம்
பொங்களை வுற்றழி புண்ணுழு கூன்சீப் புலாலொடுகண்
மங்களை யுற்ற வுடலையெவ் வாறயன் வைத்துக்கைம்ம
நங்களை யாமற்செய் தானெமக் கேயுன்ன நாறலினே. 72

நாறு வளரு மழைபெய்ய நின்னரு ளுடைவன்பர்க்
கூறு மனத்தன்ப தாலுடல் போய்முத்தி யுய்க்கப்படும்
சோறுமற் றுண்டிவ் வுடல்பருக் குந்தொறுந் துன்விகார
மாறு மெனக்கு வளர்ந்தாலென் னுமெவு ளாண்டவனே. 73

ஆண்டதுண் டென்னை யெனிலடை யாள மறிகிலனே
பூண்டவென் னன்பு புலன்வழி வீணுறப் போகலினே
நீண்ட வுதிப்பெனக் கெங்ஙன நீயின்னஞ் செய்தனையோ
நீண்ட வுருவ வருளொரு வாவெவ்வு ணிர்மலனே. 74

மலங்கப் பிணிபிணி காளெவ்வு ளீசன் வறுங்கலையன்
றிலங்கப்பெண் ணுக்கின தாளா விருத்திடி னென்றலையிற்
றுலங்கப் பெருஞ்சித் துருக்கொள்வெ னீரிடந் துன்னலின்றிக்
கலங்கப் பெறுவிர கன்றுறை மின்வணங் காரிடத்தே. 75

இடத்திற் சிரத்தில்வைத் தானர னெவ்வொரு வின்பெண்முகத்
திடத்திற் பிரமன்வைத் தானொரு பெண்பொறி யென்றுநிறத்
தடத்திற் பரித்தை நீயெவ்வுள் யான்பல தையலுள்ளத்
தடத்திற் பரித்தே னுளரேர்வென் போலிச் சகதலத்தே. 76

சகல சராசரத் தின்னுயி ருட்சஞ் சரிப்பையென்று
புகல மறைகளு மப்படி யென்னுட் பொருந்துனக்கென்
இகல வறுமையி னுல்வருந் துன்ப மியைந்திலதோ
அகல வறுக்கா திருப்பதென் னெவ்வு ளருட்கடலே. 77

அருளைப் பொழிந்தன்ப ரன்புப் பயிர்வளர்த் தாளெவ்வுளாய்
தெருளைப் படுக்க வருமூப் பலக்கண்கள் செய்யுமென்றே
யுருளைப் படுகின்ற வென்னெஞ்சங் கட்டி வுடற்றுநமன்
மருளைப் பொருந்த வதைக்குந் துயர்க்கெவ் வணமுறுமே. 78

வணங்கா ருனையென் னினைந்தோ வினோத மகிமைபல
குணங்கா சினியிற் பதிதொறு நீசெய்யுங் கொள்கைகண்டும்
மணங்கா விரியெவ்வு ளாயுன் விடயத்தின் மன்னச்சற்று
மிணங்கா முடிமுத லாக்கொண் டறிவி விழிஞர்களே. 79

இழிந்த பகைவ நலியத்துன் போடெவ்வி லே[க்]கருமுன்
வழிந்தவ ரின்னரு ளேற்றெவ்வு ளீசதம் வாதையறப்
பொழிந்தனர் பாவஃ தறியாம னுடுவர் புல்லியர்மற்
றொழிந்த விபுதரை நீரென்று கானலை யுன்னலொத்தே. 80

உன்னை யிகழ்ந்த வரைக்கொண் டெமனர குய்ப்பனப்போழ்
தென்னை படுவர் துயர்கூர்ந் தச்சோவென் றிரங்கிநைந்துன்
றன்னை முனிகுவ னென்ன வர்க்கத் தகாவறிவை
முன்னை யளித்தனை யென்றெவ்வுள் வேத முடிப்பொருளே. 81

பொருளினை யீட்டி யறஞ்செய் திசையுடற் பூணவென்னி
விருளினை யூட்டுந் தொழிலுண் டுனக்கன் பியற்றவென்னின்
மருளினை மாட்டும் விகாரமுண் டெற்கிங்ஙன் மற்றுனக்கும்
அருளினை நாட்டிட யாதுண் டுரையெவ்வு ளாகரனே. 82

ஆகர மாவருட் கானவ வெவ்வு ளலங்கற்றுழாய்ச்
சேகர வென்றும் வடிவே பெருநின் றிருவருளாஞ்
சாகர மொற்க முறுமெனி லென்னபில் சாகுமுடற்
சீகர மொற்க முறற்குரை பார்கொலெஞ் சீதரனே. 83

தரமறி யாதுநின் னன்பரைக் கோபிப்பன் சண்டற்குங்கந்
தரமறி நோக்கினர்க் கும்முயிர்ப் பங்கு தருவன்வெங்கா
தரமறி வாகனற் கீவே னுடலைத் தணியெவ்வுண்மந்
தரமறி யம்புய யானுய்வ தெங்ஙன்சொல் தந்திரமே. 84

தந்திரங் கந்தர மந்தர சுந்தர சந்த்ரமுகா
சிந்திர ணங்தொறும் வந்துதி ரங்தெவ்வர் சிந்திநந்த
மந்திர வெஞ்சம முந்திய முந்தைய வந்தனமென்
றிந்திர னின்றுநி ரந்தர முங்தொழு மெவ்வுளனே. 85

எவ்வுளந் தானத்த னென்மன மேயெவ் விடத்துமுயிர்
எவ்வுளந் தன்னிலுந் தங்கவ னைமைந் திரும்புலனுந்
தெவ்வுளந் தேடுக நின்னுள மும்முளன் றேடினவை
தெவ்வுளந் தப்படக் கோறு முபாயத் திரமுமதே. 86

திரமுற்ற ஞானஞ்சற் றில்லாம லுன்பதஞ் சேர்வரோவல்
உரமுற்ற லின்றிச் செருச்செய்வ ரோவெள் ளுறழ்பொருளும்
கரமுற்ற லின்றி யறஞ்செய்வ ரோவென் கடவனந்தோ
பரமுற்ற வெவ்வுள யாதுமற் றன்பிலேன் பாரிடத்தே. 87

பாரிடந் தீசெய்ய றன்பா ரிடம்புரி பாவமுள
ஆரிடஞ் சொல்வே னுடறின்றுந் தாங்கியு மாகலினே
வாரிடந் தோங்கு முலையாள் கனகவல் லிக்கொண்கனே
சாரிடந் தோன்று வளைகொண் டுளையெவ்வுட்
[டானத்திலே.

தானக் கரியின் மருப்பொடித் தாயண்டந் தந்துதுட்ட
ரூனக் கரிய நிசாசரர்க் கொன்றிங் குழலுமக்கள்
வானக் கரியவிந்த் ராதியர்க் காத்துமும் மைத்தொழில்கொண்
மானக் கரியெனு மெவ்வுள வெத்தொழின் மற்றும்பர்க்கே. 89

மற்றும்பர் தெய்வ முண்டெனி னின்னிடம் வந்தண்டங்கள்
முற்றும் பலவுயிர் யாவு மடங்கி முடிதலென்னே
பெற்றும் பெருவறி ஞர்க்கென் புகல்வல் பெரும்வெற்குப்
பற்றும் பொருளும் பயக்குஞ் சுகமுநின் பாதங்களே. 90

பாதபங் கேருக பத்மவி லோசன பத்மநாப
நாதபங் கன்பரைக் கிட்டா தருள்பவ நற்றிருச்ச
மேதபங் குன்னிடம் பெற்றார்க ளோசில விபுதர்கொடுந்
தீதபங் கொண்டலை வாரெவ னெவ்வுட் சிகாமணியே. 91

மணிவண்ண வெண்ணுந் துவாதச நாம வதனங்கஞ்ச
பணிவண்ணத் தியார்க்கு முவமேய மானவ பன்னுமறை
துணிவண்ண கிற்றில வாமென் வுளவென் றுயரமுரும்
மணிவண்ண மானிட வின்பம்வா ளாபெரும்
[பேறுடைத்தே. 92

பேறுக் கலைவதென் னெல்லாக் கொடுமையும் பேதமின்றி
வீறுக்குச் செய்தனே வேம்பூன்றிக் கன்னலை வேண்டலொத்தே
சோறுக் குழலு மதியே மதிமதி தோன்றுமிடை
யூறுக் குதவெவ்வு ளூரனம் போருக வொண்பதமே. 93

பதங்கண்ட போதெவை செய்கில ரெவ்வுளிற் பண்ணவன்பூம்
பதங்கண்ட போதெவர் முத்தியின் றுயினர் பானுவையே
நிதங்கண்ட போதெக் கமலம்விள் ளாதன நின்னிடஞ்சற்
றிதங்கண்ட போதுனக் கேனருள் கிட்டில
[தென்னெஞ்சமே. 94

நெஞ்சங் கிடப்பன முக்குற்ற மாதிய நீர்த்தடத்திற்
கஞ்சங் கிடப்பன போற்றுதி பூசைமெய் காதனன்மை
கொஞ்சங் கிடப்பன மேலாகச் சைவலக் கொள்கையெனத்
தஞ்சங் கிடைப்பன வோவெனக் கெவ்வுட் டயர்சிந்துவே. 95

சிந்திக்கு மூவருக் கேற்றே யொழுகுந் திறஞ்சற்றுமில்
மந்திக்கு மூடன் றெரிவரி தாயெவ்வுள் வாயமரர்
வந்திக்கு நாலாவ தாங்தெய்வ மேயுன் வழிப்பட்டெங்ஙன்
புந்திக்கு ளார்வம் பொருந்தி யொழுகுவல் பூதலத்தே. 96

பூதமைந் தாலுடல் செய்துவித் தாயெனிற் பொன்னனைமுன்
காதமைந் தாரு நரசிங்க மானவ காசிபன்வி
னோதமைந் தாவெவ்வுள் வீரநின் றொண்டன்பு நோற்கவதன்
மீதமைந் தாவன யாவுங்கொள் வாய்வல்லை வீயுமுன்னே. 97

வீயாமற் செல்வம் விரவாம ணேய்மெய் விழாமலுநீ
மாயாமற் பாலிக் கினுமென் மனத்தொடு வாழ்வுவக்கேன்
நாயாமற் பன்றனைக் கண்ணோட்ட மிட்டு நணுகிச்சற்றும்
காயாமற் காத்தரு ளெவ்வுளி னேரற்ற காகுத்தனே. 98

குத்துந் திரைகட லேழையு மோர்கணை கோத்தட்டனை
தத்துந்தோ லென்பவ் வாரிதிக் கோபல சரம்விடினும்
மத்துந்தி நாட்டினு மேகலங்கா வெவ்வுள் வாணவுருப்
பத்துந்தந் தாய்நின் னருட்கடைக் கண்ணே டடவற்றுமே. 99

படப்படி யோர்களுஞ் பேரென் னெனவிப் பவமெனும்வெவ்
விடப்படர் நீக்குநின் பேருரை யாவெனை மெல்லவென்பே
ரிடப்பட்ட தாகுநா ராயண தாசனென் னச்செய்தநின்
றிடப்பட்ட தாமுத்தி நன்றுநன் றெவ்வுட் டிருவுரனே. 100

திருவெவ்வுளூ ரந்தாதி முற்றும்

7. *மதுரை யமக வந்தாதி

(மதுரையந்தாதி)

காப்பு

ஆனன மைந்தன் புயமும் பதமுமெட் டானெடுமா
லானன மைந்தன் புறநான் மதுரையந் தாதிசொல்ல
வானன மைந்தனென் றம்பிகை சிந்தைசெய் யெந்தைதந்தை
யானன மைந்தனஞ் சித்திவி நாயக னாள்வ துண்டே.

சுபமஸ்து

நூல்

திருவந் தரவிந்த நீங்காத வாவி திகழ்மதுரை
திருவந் தரவிந் தணிவோனை வேதந் தெரிமொழிகந்
திருவந் தரவிந்த னஞ்சுமந் தோனைச்செய் [1]தீர்வணங்கு
திருவந் தரவிந்த ஞாலம் பரிக்குந் திறந்தங்கவே. 1

தங்கந் தராதலங் கொம்மையங் கொங்கையர் தம்மின்மனந்
தங்கந் தராதலை நீக்கியென் றீவினைச் சாகரமா
தங்கந் தராதருள் தம்முயிர் தாம்பெறத் தாங்குவிண்ணோர்
தங்கந் தராதமிழ்க் கூடலெந் தாயுன் சரணளி[2]த்தே. 2

சரங்கடந் தாவி பறிபோய் விடச்சம னாகியகுஞ்
சரங்கடந் தாவி வரும்போது கூடலிற் றங்குசரா
சரங்கடந் தாவினைச் சாய்த்திடக் குஞ்சரஞ் சாயவிட்ட
சரங்கடந் தாவிமைப் போதெளி யேற்குந் தயாபரனே. 3

பரனாக மத்தன்பு செய்துதென் கூடல் பணிந்துதிகம்
பரனாக மத்த மணிந்தோன் புகழைப் பரவவல்லான்
பரனாக மத்தனு மாகப் பரிவில னாகத(ா)யா
பரனாக மத்தனை யுஞ்சிவ ரூபமென் பாவினைக்கே. 4

---

*இவ்வந்தாதி முழுவதும் யமகம் என்னுஞ் சொல்லணியால் அமைந்துள்ளமை காண்க. யமகம் என்பது வந்த சொல்லே ஒவ்வொரு அடியிலுந் திரும்ப வந்து பொருள் வேறுபடுமாறு பாடப்படுவது.

1. யீர்வணங்கு. 2. மன்றே.

பாவந் தியங்க விடாதேய்ந் திடப்பசுந் தேன்வழியப்
பாவந் தியங்கப் புரவலன் வாழ்வுறப் பாற்குநெஞ்சே
பாவந் தியங்கனைக் கூடற் பிரானைப் பரமனை [ெ]யன்
பாவந் தியங்களன் பாதத்தை யேதொழு பண்புறவே. 5

பண்டங்க நாதன் படும்பாடு மேற்படும் பாடுமெண்ணிப்
பண்டங்க நாதனைக் கூடலி லாடல் பணிந்தவன்பேர்
பண்டங்க நாதனைப் பாடவல் லேனல்லேன் பற்பலவாம்
பண்டங்க நாதமி யேற்கென்று தோற்றுங்கொல் பாரகத்தே. 6

பாரக ராவர் மகுடேச ராவர் பரந்திடுபொற்
பாரக ராவ லுறுந்தவ ராவர் பணியிலென்றே
பாரக ராவடர் மால்போற்றுங் கூடற் பரன்வடிவைப்
பாரக [1]ராகம் பதறநெஞ் சேகண் பணியிதுவே. 7

பணிகல மால்படை தோலுடை பாரை யழித்தழித்துப்
பணிகல மாய்த்தந் தத்துதலை யோடென்று பாவிநெஞ்சே
பணிகல மாயின மதுரைப் பிரான்பற் [2]றதுநமக்கு
பணிகல மாடஞ் சுமந்துழக் கென்ற பலங்கொள்வதே. 8

பலவாய ரானைப் புரந்திடு மாயன் பணிந்திடுமம்
பலவாய ராகடம் பாடவி யாயுன் பதமலர்த்தேம்
பலவாய ராவிய நன்மணி யாய்ப்பணி யாதுமுத்தர்
பலவாய ராமல்குற் பாவையர் காதலைப் பற்றுவனே. 9

பற்று மதிக்கலை கண்டோன் பகலவன் கையிலவன்
பற்று மதிக்க வடர்த்தோன் மதுரைப் பதிகதியாய்ப்
பற்று மதிக்கய லோர்பதி பாடு பெறுவதுமாம்
பற்று மதிக்க வுயர்ந்திழி வானதும் பங்கயமே. 10

பங்கய வாவியன் பார்படை யென்று பணிக்குமங்கை
பங்கய வாவியப் பண்ணவ னேபல மேதியோடிப்
பங்கய வாவி யளைந்தாடுங் கூடற் பராவெனவின்
பங்கய வாவி யலையாது கூற்றும் பகைமறந்தே. 11

மறவா வரமொன்று கூடலெந் தாயுயிர் வாட்டுமிரு
மறவா வரங்கெனு மிவ்வுடல் வீழ வரும்பொழுது
மறவா வரலை வழிமறித் தேமதிண் மூன்றெரித்த
மறவா வரவிடி லாவென்று நான்சொல்ல வைத்தருளே. 12

---

1. ராகும் 2 றறு

வையம் படைத்த மலரோன் வலாரி வலக்கையின்மேல்
வையம் படைத்தனி யாழிப்பி ரான்வழி வந்துதன்மேல்
வையம் படைத்த மதனைவென் றோன்மதிட் கூடல்பெற்றால்
வையம் படைத்தகை வாய்பரி யோங்குங்கை மாவருமே. 13

வரவிருந் தாவன செய்யாது மான்றலை யார்மனங்க
வரவிருந் தாவட ரக்கிடந் தாலு மதுரைப்பிரான்
வரவிருந் தாவன மால்விடை யான்மலர்த் தாள்கடிதி
வரவிருந் தாவஞ்சி யர்பா விரந்தவன் வாழ்விக்குமே. 14

விக்கலை வாய்க்கொண்டு மேற்பதைப் பீர்நும் வெறுந்தவங்கா
விக்கலை வாரி வினையைவெல் லாது மிகவுநைந்தா
விக்கலை வாக மேலியர் தான வியன்கூடல்பார்
விக்கலை வாண ருடன்வாழ்ந் திருமது மேன்மையென்றே. 15

என்று கவலை யொழிவென் பிறப்பு மிறப்புமிடர்
என்று கவலை யறுவதென் றின்னருள் வாருதியில்
என்று கவலைப் படர்வதென் றீச னெழின்மதுரை
என்று கலைமதி யேனுக் கென்றிட மாவதுவே 16

ஆவாக ளுவிந் திரன்முத லோரன் பொழுகுநெஞ்சில்
ஆவாக ளுவியன் கூடலெந் தாயுன் னடிபணியேன்
ஆவாக ளுவிலு மீய்ந்தறி யார்தம்மை யைந்தருவே
ஆவாக நாவிற் புகழ்வேன் பெறுவ தறிந்திலனே. 17

இலங்கைக்கு மேல்வை யறிந்துதென் கூட லிறைவனைமுன்
இலங்கைக்கு மேநெல்லி யங்கனி போற்கதி யெய்துநெஞ்சே
இலங்கைக்கு மேல்வரை யழிப்பான் வந்திறுத் தவன்போன்ற
இலங்கைக்கு மேதி[னி] யாள்கைக்கும் வேண்ட
[வீடர்படிந்தே. 18

படியிடந் தான்விசும் பிற்பறந் தான்பதஞ் சென்னியெய்தாப்
படியிடந் தானுமை வாழ்வோன் மறைந்திலன் பாவிநெஞ்சே
படியிடந் தாவிய கூடலின் மான்மியம் பன்மணியாற்
படியிடந் தாமரைப் பொற்று மரைக்குப் பரிவுசெய்தே. 19

செய்ய கமலங் களைந்திட நாளஞ் சிறிதசைந்து
செய்ய கமலங்கள் செந்தேன் சொரியுந் திருமதுரைச்
செய்ய கமலங் கனல்புனைந் தோயென் சென்னமறச்
செய்ய கமலங் களைந்துநின் பொன்னடிச் சே(ர்)வைதந்தே. 20

தந்தந் தரிக்குத் தனந்தோ வெனநந்தி தாளமின்பந்
தந்தந் தரிக்கு நடம்புரிந் தோர்தமிழ்க் கூடலுற்றோர்
தந்தந் தரிக்கும் வரையுரித் தோர்தணந் தாற்கலைக்கோர்
தந்தந் தரிக்கும் வாகும்பெ ருர்சக்க ரேசருமே. 21

சக்கர பாணியி னுலே சமைத்துத் தரித்திடுங்கஞ்
சக்கர பாணி தடம்புயத் தேதலை மாலிகையச்
சக்கர பாணினிக் கன்பனின் கூடலைச் சாய்க்கவந்த
சக்கர பாணியென் றேசுவ ளாய்வளை தான்கன்றவே. 22

கன்றிடப் பட்ட கொடிபோல வாடக் கருதிநறுங்
கன்றிடப் பட்ட னியக்கரு தாதென் கன்னிபொன்மான்
கன்றிடப் பட்டந் திகழ்கூட லங்கயற் கண்கொடிபா
கன்றிடப் பட்டபொன் மேருவில் லாய்க்கொண்ட
[கண்ணுதலே. 23

கண்ணுத லாந்தட வாள்பிறை தாங்குங் கயற்கண்வளர்
கண்ணுத லாந்தவ மீதெனக் கேகள்வ ரீனர்வஞ்சர்
கண்ணுத லாந்தர பொற்கூட லைக்கட வாதிருக்கக்
கண்ணுத லாந்தரஞ் சென்றலை வேணைக் கருத்துவந்தே. 24

கருத்தரு மானிட ராதிச் சனனங் கடப்பதற்கோர்
கருத்தரு மாதரு மங்களை யாய்ந்திடுங் காட்சியென்பார்
கருத்தரு மாபதி யார்வாழ் கடம்ப வனம்பணியுங்
கருத்தரு மாதர வாதாம் பிறவி களைவதுண்டே. 25

களைவரன் றேகொடுங் காமாதி யைவிக்கல் கண்டுபெருங்
களைவரன் றேவென் னுள்காலைச் செங்கம லத்திதழின்
களைவரன் றேகையர் போலே களிவண் டருந்தமணி
களைவரன் றேடு துறையாளன் கூடல்கல் லாதவரே. 26

கல்லார மையங் கழித்திட ......ழினுங் கள்ளமனங்
கல்லார மைவிழி யாற்பொரு வாரைக் கலந்திடினுங்
கல்லார மையல்செய் கண்டன் கடம்ப வனமறக்க
கல்லார மையு மருஞ்செவ்வி பார்ப்பர் கடவுளரே. 27

ஊராகந் தோயின் னிசையாழ் மடந்தைய ரோடுகுயில்
ஊராகந் தோடி யுடன்பாடுங் கூடலி லுத்தமரை
ஊராகந் தோணி கடவிக் கடல்கடந் தோடநல்லோர்
ஊராகந் தோன்று மணியா சனத்துட னேங்குவரே. 28

ஓங்கற் குடையுண்ணா வீங்கிய கொங்கைய ரொண்குழலாம்
ஓங்கற் குடையுர கத்தல்கு லுக்கொளி ரும்விழிவாள்
ஓங்கற் குடையும் பொழுதேயுங் கூட லுடன்மறந்தில்
ஓங்கற் குடையுட னின்றோன் பணியு மொருத்தனையே. 29

ஒருவாக் குவலய நீங்குதற் கேதக்க னுக்குமுடி
ஒருவாக் குவல்ல வனேதமிழ்க் கூட லுருத்தழுந்த
ஒருவாக் குவடுசெய் தோய்வலி யானுக் குரைத்தடடி
ஒருவாக் குவந்து திருவாக் கருளெ னொருசெவிக்கே. 30

செவிக்கலங் காரமுறு தெள்ளமு தாந்திரு வைஞ்செழுத்தைச்
செவிக்கலங் காரண மெல்லா முரைப்பது சீரடியார்
செவிக்கலங் கார வடங்கண் டிகையவர் சேர்ந்திருக்குஞ்
செவிக்கலங் கார மதுரைப்பி ரான்புகழ்ச் சிந்தனையே. 31

தனையனை யான்கயற் கண்ணியை யீன்று தாழுமுன்னே
தனையனை யானனத் தான்றிருப் பாதந் தலையில்வைத்துத்
தனையனை யாண்டு புரந்தரன் வாழ்வையுந் தந்துமுன்னே
தனையனை யாளென வைப்பான் றரணி தனில் [வியப்பே.] 32

வியப்பாவை யைவரை வென்றோற்கு நீவெறும் வீணருக்கோ
வியப்பாவை யையநின் வீற்றியெண் மைவிழி ....ங்கா
வியப்பாவை யைமரு வும்மிறை வாமெய் யடியர்சொன்ன
வியப்பாவை யைய மறப்புகல் வேண்டியன் கூடலுற்றே. 33

கூடல ராவிக் குவிமுலைப் பாளைக் கொலைமதன்கைக்
கூடல ராவிக் குறுங்கணை யாளவன் கூரரத்தாற்
கூடல ராவிக் குறைப்பது தானுயிர் கூடக்கண்டாய்
கூடல ராவிக்கு நின்னகை போல்வருங் கோண்மதியே. 34

மதிக்க வடத்தமா மால்முத லோர்சென்று வேண்டவுமே
மதிக்க வடத்தட மால்வரை போல்வரு நஞ்சையுண்டு
மதிக்க வடத்தனை மேவா னெனவெண்ணி மானிடர்க்காய்
மதிக்க வடத்தனை நெஞ்சே மதுரையில் வந்துறைந்தே. 35

உறையூ ரனையெண்ணி யானிடுங் கூடலி லொள்வளையாய்
உறையூ ரனைய வெழுந்த தலரலை யொருமலர்க்காய்
உறையூ ரனைத்து மழித்தோர் வளை ......வு ரகமதிக்கு
உறையூ ரனைய முடியார் மதுரை யுயர்வரைக்கே. 36

வரைவா யலையெழு தத்துணிந் தாய்வஞ்சி சிற்றிடைநீ
வரைவா யலைவிடல் வேண்டுங்கண் டாயம் மதுரைக்குற்ற
வரைவா யலைவிட வாளாவ ராமங்கை பங்காதமிழ்
வரைவா யலையெறி தென்குன்ற நாட மனந்தெளிந்தே. 37

மனந்தந்தி யாயறி வங்குச மாய்மறித் தேயடக்கா
மனந்தந்தி யானமும் வாயாமல் நற்கதி வாய்த்திடுக
மனந்தந்தி யாவரும் வாழ்த்தவைப் பானலன் மாமதுரை
மனந்தந்தி யான வடிவா னெமக்கென்ன மாதவமே. 38

மாதவ னந்தம் புல்கோடி யாண்டுவந் தோய்ந்துலக
மாதவ னந்த மழியினு மாயை மயக்குபிற
மாதவ னந்தரந் தீராத மாந்தர்க்கும் வாய்க்குங்கொல்லோ
மாதவ னந்த மதுரையி லீசன் மலரடியே. 39

மலராக்கை மானிலந் தோய்முடி யாயும்பர் வாழ்த்தநிரு
மலராக்கை மாவன்னம் புள்ளோ டுலாவா மாத்திரமோ
மலராக்கை மாய்த்தவன் காப்பிந் திரன்பெரு வாழ்வுபெற
மலராக்கை மாவளம் யாவையுங் கூடலெம் மானருளே. 40

மானுகந் தோய மகிழ்வோன் மதுரை நகரிலட்ட
மானுகந் தோயத் திரையெறி வேக வதிதருமெம்
மானுகந் தோய மணிவோனைத் தேடுவர் மாலயன்சும்
மானுகந் தோயப் பறந்தோடிக் காணுங்கொல் வானகரே. 41

நகத்தா னடக்குஞ் சரம்பாயு மார்ப னடுங்குஞ்சற்றே
நகத்தா னடக்கும் புரமூன்று மாதலி நற்கயிலை
நகத்தா னடக்கு முலாவினிற் கூட நகரிலங்க
நகத்தா னடக்குஞ் சிதபாதம் போற்றுத னன்றென்பரே. 42

என்பணி யாநுண் ணிடைபாக மேரு வெனுந்தனு(ம்)நாண்
என்பணி யானுடற் றுஞ்சுமரா வென்செய் தாலுநன்றே
என்பணி யானுட னீவருங் கானின் றிறைஞ்சுவதும்
என்பணி யானுந் திருவால வாயி லிருப்பதுமே. 43

இராவண மேனி யொருபது சென்னி யிருபதுகை
இராவணன் மேருவை வெண்கயி லாயத் திடைகவித்த
இராவண மேறுந் தமிழ்க்கூட லாய்மார்பி லிட்டவேண்ட
இராவண மேழை யுதவா யிதழி யிதழிலொன்றே. 44

இதழிக்கல் லார்குழ லேந்திழை யாய்நினக் கென்றுபைந்தேன்
இதழிக்கல் லாரங் குணர்ந்தேன் விழியினை கொண்டுபொரு
இதழிக்கல் லாங்குலம் வெண்சங் குடைக்கு மெழின்மதுரை
இதழிக்கல் லாலம் புயமுத வார்வெற்பி லெண்ணமுற்றே. 45

எண்ண மாரநிமிர்த் தெய்தோன் முதலிய யாரிடத்தும்
எண்ண மாரநின்ற வென்னையொப் பாயுன் னிணையடிக்கென்
எண்ணமார நின்றிடு மாகி லன்றினை யானொருவன்
எண்ணமா ரனிட ரெய்துதல் யானு மிழந்தனனே. 46

தன்னா தலனா வலனாத லெழின்மத னாதல்சிங்கா
தன்னா தலனாதல் புரந்தா னாதலுஞ் சற்றுமெண்ணென்
தன்னா தனாவெனா வண்டிசை யார்தமிழ்க் கூடலில்வாழ்ந்
தன்னா தனாலுன் பதம்புகழ்ந் தேனெனிற் சங்கரனே. 47

சங்கரி யாகந் தணவாய் தணந்ததக் கன்றலையைச்
சங்கரி யாக மெனச்சிதைத் தாய்தமிழ்க் கூடலுள்ளாய்
சங்கரி யாகண் டலன்போல் விழிகள்பொற் றாமரைநெஞ்
சங்கரி யாகப் புணைந்தா லெனக்குண்டு சற்கதியே. 48

சற்கதி காரண மாய்ப்பணி யேனச் சுதற்குநற்கஞ்
சற்கதி காரவி யார்விழி யாய்சன னப்பெருமூ
சற்கதி ராமுன் கூடலென் றேதங்கு வாரொடுபே
சற்கதி காரந் தரல்வேண்டும் யானத் தலந்தெரிந்தே. 49

தரியல ரத்தியை யெய்தவட் டாலத் தமிழ்ச்சொக்கனார்
தரியல ரத்தி யெனத்தரித் தோர்சங்க மேந்திசகோ
தரியல ரத்திரு நட்டமிட் டோர்தந் திருப்பெயரா
தரியல ரத்திர நாமநெஞ் சேதரி யாதகலே. 50

அகலந் தரமல ககிலாண்டங் கோயிலென் னம்மனைக்கோர்
அகலந் தரஞ்சுடர் தீபம் புவனமெல் லாமடுக்
அகலந் தரணியிற் கூடல்பொற் பீடமன் னாள்முலைக்குன்
அகலந் தரமைய நின்றா ளிணைக்கென்ன கந்தரமே. 51

அகந்தை வராலிணை போற்கணைக் காலென்ன மன்னவர்மால்
அகந்தை வராமலுன் கூடலில் வாழ்ந்துன் னடியர்நல்கி
அகந்தை வராடிகை போதுமென் பார்க்கு னருணிறுவி
அகந்தை வராவிய லையா துடற்றுதற் காண்டகையே. 52

ஆண்ட பிராய நடந்தோட வாண்மையு மப்படிப்போம்
ஆண்ட பிராமமென் ஞமோதென் கூடலஞ் சோதியகில்
ஆண்ட பிராண நிலையே யிமையவ ரார்த்திடுபல்
ஆண்ட பிரானென் றடைவேனுன் பொன்னடி யம்புயமே. 53

அம்பு விலங்க நயனம் புரூர மமரிருந்தாள்
அம்பு விலங்கன் முலையனையார் மைய லாம்பெரும்பை
அம்பு விலங்க வருள்வா யரவ மசையமுட்டி
அம்பு விலங்கல் வெள்ளிமன் ருடிய வாநந்தனே. 54

ஆநந்த மாக்கட வுளர்தம் போலவ ஞகம்பெற்ற
ஆநந்த மாக்கட லாடுவ ஞேவெறும் பாதியனத்[த]
ஆநந்த மாக்கட லாய்தமிழ்க் கூடலி லமர்ந்தவையர் ?
ஆநந்த மாக்கடம் மாருயி ராய்நின் றருளண்ணலே. 55

அண்ணலந் தாமரை யானன மாயருந் தாணில்வந்த
அண்ணலந் தாமரை யொன்ருல் விழியணி யுந்திருத்தாள்
அண்ணலந் தாமரை மாத்திரைப் போதெண்ணி யம்மதுரை
அண்ணலந் தாமரை போற்றிரிந் தாமிம்மை யம்மையற்றே. 56

அம்மைக் கடைக்கலங் கானெறிக் கேமட வார்குழலாம்
அம்மைக் கடைக்கலங் காதலைக் கூட லரனையெண்ணி
அம்மைக் கடைக்கல கப்போர் விழித்துணை யங்கயற்கண்
அம்மைக் கடைக்கல மென்போமெண் ணேம்பல்
[வாறுகளே. 57

ஆறு தரத்தறு பூதத்தர் கூடலி லன்பையற்கு
ஆறு தரத்தறு காதமைத் தோரங்கை யிற்பசும்புண்
ஆறு தரத்தறு கார்முடி யாரஞ் செழுத்தையெண்ணும்
ஆறு தரத்தறு மூன்று தரத்தறு மாள்வினையே. 58

வினையார வாரம் புனைந்தோயென் ருற்கெடும் வேறிடமே
வினையார வாரவி காண்பனி யாமின் னஞரிருத்த
வினையார வார்த்தில் விண்டுயி லாவியன் கூட்னக
வினையார வார விழிபடைத் தார்க்கென் விழுமங்களே. 59

விழுமந் தகவிதென் ருரெ னுடலம் விழுமுன்வந்து
விழுமந் தகன்கடை வாய்க்கும்பற் றேன்மெய்யா முன்றலைக
விழுமந் தகன்றமிழ்க் கூடலெந் தாயுன் விழித்திருமுன்
விழுமந் தகனின் றிசைஞ்சேன் விழைவது மேற்பதமே. 60

பதங்கா தலைச்செய்து மாதவ மாம்பஞ் சுடரில்விழும்
பதங்காத் துப்பெய்த வன்பாற் பணியென் றனைப்பணித்துன்
பதங்கா தலைப்பெருஞ் சென்மந் தொலைக்கும் படியிறக்கும்
பதங்கா தலைக்கொண்டு நான்போற்றக் கூடற் பசுபதியே. 61

பதியா வதுமது ரைப்பதி யேயென்று பற்றநெஞ்சே
பதியா வதுவெவ் வினையெய்த தீவினை பாறவுமா
பதியா வதுமுது கேறும்பி ரான்பஞ் சவனெனும்பூ
பதியா வதுங்குறை வில்லாப் பதம்புனை பாவகத்தே. 62

பாவக நங்கை திருமால் விழிபக லோனெயிறு
பாவக நங்கை மணவாளன் சென்னி பறித்தவனென்
பாவக நங்கையற் கண்பாகன் கூடற் பரனையெண்ணென்
பாவக நங்கை தவங்களெல் லாமெப் படியஞ்சுமே. 63

அஞ்ச மருந்த வடைந்தசெந் தேனுண் டளியினங்கள்
அஞ்ச மருந்த வலர்மலர் கூட லார்விடத்தால்
அஞ்ச மருந்தன தண்ணளி யாரளித் தோர்தமெழுத்[து]
அஞ்ச மருந்தவ மேதவ மாநெஞ்சி லாரணற்கே. 64

ஆரணங் காணம் மதுரையி லீசனை யங்கயற்கண்
ஆரணங் காண மகலானை யந்தத்தில் யாவருமுய்
ஆரணங் காணவல் லானை யுருவென் றருவமென்றும்
ஆரணங் காணவ னுவறிந் தார்சொல்லு மாய்ந்துகண்டே. 65

கண்டலம் பாதங் கணத்திடை யேகட் டியவுடைவாட்
கண்டலம் பாதகன் கூற்றுவ னுவி கவர்ந்திடவான்
கண்டலம் பாதலம் போற்றிய கூடற் கடவுளைநான்
கண்டலம் பாதமெ னன்றேன் கருணையிற் காயத்தையே. 66

காயத் தரணிக் கனல்போற் சமர்தியிற் கண்டுவினை
காயத் தரணியிற் கைதொழு வார்தங் கருத்தமரா
காயத் தரணி மதிட்கூட லார்கழற் போதருஞ்ச
காயத் தரணி கருமேகம் மாயைக் கடும்படைக்கே. 67

கடுப்போ னகங்கண்ட மட்டுண்ட வன்கடம் பாய்பெரும்ப
கடுப்போ னகங்கண்ட வட்டால நாதன் கணைமதனைக்
கடுப்போ னகங்கண்ட சூழ்கூட லான்கட் கனிவொழிந்தோர்
கடுப்போ னகங்கண்ட லஞ்சீறும் வேதனைக் காமனையே. 68

காமனை யாண்ட நுதல்விழி யான்கடம் பாடவிநீங்
காமனை யாண்டரை மாத்திரை யாய்க்கடத் தும்பிரமன்
காமனை யாண்டகை யாதியா வெவ்விடங் கண்டமுதிற்
காமனை யாண்டரு ளாளுகி லென்படுங் காசினியே. 69

காசினி தானம் பரந்தா னிலையென்று கண்மயங்காக்
காசினி தானங் கடைப்பிடிப் பீர்கடம் பாடவியே
காசினி தானமென் றேவெள்ளி மன்று கனமணிபோற்
காசினி தான மதுரேசன் றுளென்று கைதொழுமே. 70

கைப்படை மாலை விடையாக வூர்கடம் பாடவியான்
கைப்படை மாலைக் கவுரியன் மேவிற் கனிமொழிபா
கைப்படை மாலைக் குழலாட் குமாரன் கணையுமவன்
கைப்படை மாலை வளர்ப்பதுஞ் சீனியுங் கற்கண்டுமே. 71

கற்கண்டு மோந்து மணமல ருண்டுகை வீணைமுழங்
கற்கண்டு மோக நடங்கேட் டணைந்து கனியையமயங்
கற்கண்டு மோவப் பொருளான கூடற் கபாலிமதிற்
கற்கண்டு மோமிரு மோமென்று சூழ்ந்தென்ன காதலற்றே. 72

காதலி யங்கம் மலையத் துவசன் கனிந்துபெற்ற
காதலி யங்க மரும்பக வாயுன் கழலொழிந்தா
காதலி யங்கம லத்திரு வாழ்வுங் கவின்பெறுவார்
காதலி யங்கம் பெறினுநன் றேயுன் கடம்படியே. 73

கடம்பா டவிக்கு ளுறைந்திறை யுங்கட வாமறையோர்
கடம்பா டவிக்கு விழைந்தோன் பதங்கரு தாச்சிலமற்
கடம்பா டவிக்குங் கருத்தலை காவலை மருத்துவர்வா
கடம்பா டவிக்குண் மிகும்போதி லென்சொலுங் காலருக்கே. 74

காலரை யன்றி மிகச்சீறுங் கூற்றன் கடுஞ்சகடக்
காலரை யன்றிடுஞ் செந்தீயில் வெந்து கழுத்துமுகங்
காலரை யன்றி லெனக்கன்றி யுள்ளங் களைத்துவருங்
காலரை யன்றிருக் கூடற்பி ரானருட் காப்பெமக்கே. 75

காப்பார் புரந்தர வைவா யரவுகை வாயணிந்தோர்
காப்பார் புரந்தழல் கண்பார் கடம்ப வனத்தர்செழுங்
காப்பார் புரந்தரன் போலாள வைப்பக் கருதிலரங்
காப்பார் புரந்தருள் வாரென்று தீம்பா கலங்குவரே. 76

கலங்கா தவரை யெனச்சலி யாது(ந)லங் காயமரர்க்
கலங்கா தவரை மதுரே சரைக்கரு தாதவரைங்
கலங்கா தவரைச் சுமந்துண்டு வாழ்ந்துங் கழறல்புகாக்
கலங்கா தவரைப் புகழ்ந்துமெய்ப் பார்வை கலுமிருந்தே. 77

வைகலை யாயுனை யெய்யாம லீர்கின்ற வாளிதென்று
வைகலை யாயு மறிவினுள் ளேமத மாவினுரி
வைகலை யாயுமை பங்குறை வோன்மது ரைப்பதியில்
வைகலை யாயுள்ள மேமிது வேதவ மாலுறவே. 78

அறுகாலம் போருக நீலங்க ளாலர்ச்சி யாரொருகால்
அறுகாலம் போதி யழைத்தோனைக் கூட லரனையர்ச்சித்[து]
அறுகாலம் போரிடுங் கூற்றைவெல் லாரவர் வாழ்ந்திடுநா[டு]
அறுகாலம் போலும் வரிப்புலி வாழ்கடம் பாடவியே. 79

ஆடக மன்று புகுந்துவன் றொண்டரை யாண்டவெந்தாய்
ஆடக மன்று கயிலையென் றேவெள்ளி யாற்சமைத்த
ஆடக மன்று விளைந்தசொக் கேயுடற் கங்கியென்றும்
ஆடக மன்றுனை யாமுனுன் றுடுணை யாக்குகவே. 80

ஆக்கை யிலேச நிலையா வகையம்பு யத்தொருவன்
ஆக்கை யிலேசங் கரிப்பவ னேயருட் கூடலகல்
ஆக்கை யிலேச வெழுத்தஞ்சு நாவறி யாதவர்பொல்[லா]
ஆக்கை யிலேச விரவே னுனைத்தொழு மங்கைகொண்டே. 81

அங்கம்பஞ் சாயவ டுப்போற் களிற்றை யடர்முலையாள்
அங்கம்பஞ் சாயதி லாரழல் போலடன் மாரனெய்ப்பும்
அங்கம்பஞ் சாயவென் செய்வான்தென் கூட லமர்ந்திமையோர்
அங்கம்பஞ் சாயன்ன வன்னந் திகழ்மெய்க் கணிநம்பனே. 82

நம்பாவ லாரிதஞ் சேர்முலை பாக நளினமத
நம்பாவ லாரிதை யந்தமிழ்க் கூட நகரனையாய்
நம்பாவ லாரி முதலோர் விரும்ப நமனத்தியா
நம்பாவ லாரினுஞ் செல்லாதுன் பாலவர் நாட்டினியே. 83

நாட்டிய மாதி யிருநான் கியோகமு நாடினையே
நாட்டிய மாதிர வாழ்வுமெண் ணேனடு மார்பிலயில்
நாட்டிய மாதினன் னீபார்த் திருந்தென்ன நன்மதுரை
நாட்டிய மாதிடஞ் செய்தான் றிருப்பெயர் நான்கற்றதே. 84

கற்றா னடைய சலஞ்சாய்ப்பக் கூடலின் கண்வருங்காற்
கற்றா னடைய விடைக்கோர் விடைதந்த காவலன்பேர்
கற்றா னடையப் புரந்திடும் போதுங் கருத்தருள
கற்றா னடைய வனுக்குரை யார்கஞ்சன் மாலையமே. 85

மாலை யருக்க மலரா யினுமது ரேசருக்கெம்
மாலை யருக்க மணிவாய்ப் பனியென மாய்ப்பவற்கு
மாலை யருக்க மலிதலைச் சூலத்தின் வாய்க்கருத்து
மாலை யருக்கமா நன்மா திமைய வரைச்செல்வியே. 86

செல்வரை யாறு முகத்துட னின்றவர் தென்மதுரைச்
செல்வரை யாறும் பதியார் செனனந் துடைக்கவன்றோ
செல்வரை யாறு கடல்பாருஞ் செய்தயன் மான்முதலாச்
செல்வரை யாறு திறம்பாச் செனனம் படைப்பதுவே. 87

படைப்பரி யங்க நரியா மதுரைப் பரனுமைகண்
படைப்பரி யங்க மெனுந்துடை யான்பதம் போற்றநெஞ்சு
படைப்பரி யங்க வயிரா வதம்வரப் பாரிலினிப்
படைப்பரி யங்கவ லேமென்று வாழுவர் பன்முறையே. 88

பன்னக மாய தாளங் கிளிபெற்ற பாவைபங்கன்
பன்னக மாயன் பணிவோன் மதுரைப் பதிவளத்தைப்
பன்னக மாயம் பரவாது பண்டையிற் சஞ்சிதமாம்
பன்னக மாய வருந்தவ மேபொங்கிப் படர்தருமே. 89

தருக்கத்த னாதி யிறைவரைப் போன்றுதம் பாலவர்தாந்
தருக்கத்த னாதிப னாவதும் வாணி தகையறவே
தருக்கத்த னாதிசை விப்பது மெய்துங்கொல் தாரணிமாந்
தருக்கத்த னாதிரை யான்கூடல் வாழ்வற்றே தாமதற்கே. 90

தாமத ராசத சத்துவ தாற்றவ ராயவராய்
தாமத ராசதர் தேடிச்செல் வாரெவர் தாங்குகொன்றைத்
தாமத ராச தலையர் செழுந்தமிழ்க் கூடலின்றாந்
தாமத ராச தகனாகின் பாதந் தரப்பெற்றிலே. 91

தரவயி ராவதம் போற்பாருங் கற்பகத் தாருவுமே
தரவயி ராவுன் சரணடைந் தோர்தணி யாதசலந்
தரவயி ராதமிழ்க் கூடலல் லாதுதங் காதகங்கா
தரவயி ராசல மேபெறு மாறு தருதியன்றே. 92

தகுதிக் கலருண் டுழப்போ துறைதடம் போலுடம்பார்
தகுதிக் கலருண்டு தேதறி யார்தனத் தால்நடந்தோய்ந்
தகுதிக் கலருனை யென்றறி வார்தமிழ் வையைவிசைத்
தகுதிக் கலருவீ சுங்கூ டற்பணி றனிமுதலே. 93

முதலைக் கடங்கடல் வாய்நீந்திச் சென்று முயன்றுகொண்ட
முதலைக் கடங்களில் வைத்திழப் பார்முய லார்சிலர்விம்
முதலைக் கடங்க வருள்வோனைக் கூடலின் முக்கண்முழு
முதலைக் கடங்கவில் வேழந் தொறுமை முகவனையே. 94

முகந்தடங் காது முறுவல்பொற் பாத முளரியெழில்
முகந்தடங் காது விழிதார்ப் பார்த்தனன் மொய்த்ததெற்றி
முகந்தடங் காதுறை சூழ்கூட லாய்முன்னை வெவ்வினையுன்
முகந்தடங் காதுல னற்றேன் பிறப்பின் முளைத்திடவே. 95

குடும்பா சுரவயி ரிக்குநெஞ் சாப்பணி வெய்துவித்தோய்
குடும்பா சுரமெதி ரேற்றிய வையைக் கிறைய்வனே
குடும்பா சுரங்கெடக் கூடலி னின்புக ழேபரவி
குடும்பா சுரகங்கை போலே பெருகு மியைவிலனே. 96

வில்லவ னங்கணை வீணென்று வெள்கிவில் வேள்புகழின்
வில்லவ னங்க மெனத்தேய நானுன்னை வேண்டால்காய
வில்லவ னங்க னிலம்போற்றும் பாடல் விருப்புச்செய்தாய்
வில்லவ னங்கமழ் நீபாட நின்ற வித்தகனே. 97

வித்தக மாகமம் விளையும்பைங் கூழ்வினை யேனவிச்சை
வித்தக மாக முளைத்தலுற் றேனின் விளங்கெழில்பா
வித்தக மாகமம் வாக்கா லுரைத்துமெய் யால்வணங்கேன்
வித்தக மாகப் புகழ்தமிழ்க் கூடலில் வேதியனே. 98

வேதனை யாமற் படைத்தலுத் தான்விண்டு காதலுற்றான்
வேதனை யாமலற் கென்றுனு மென்னை வினைக்கனலின்
வேதனை யாமலர்த் தாள்சேரென் றூர்சென்ம வேதனைக்கோர்
வேதனை யாமது ரைப்பர மாவெண் புகழெய்துமே. 99

எய்தா யகன்று வருந்திய ஞான்றன்னை யென்னமுன்னம்
எய்தா யகன்றுறை சூழ்கூட லஞ்சிட வெழுமாவை
எய்தா யகன்றவந் தீரா யெனிலெளி யேற்கருள
எய்தா யகன்று மறியேந்து முக்க ணிமையவனே. 100

இமையவ ராகி யிடத்தாய்தென் கூடலெந் தாயிமைப்போ[து]
இமையவ ராகி விதய்த்தி லேயென் றிரந்திருகண்
இமையவ ராகிறு திப்பே ரெழிலையெல் லாம்பொதிந்தால்
இமையவ ராகி யிருப்போம் வளரு மிருந்திருவே. 101

மதுரை யமக வந்தாதி முற்றும்.

8. சடக்கர வந்தாதி

(ஆறெழுத்தந்தாதி)

கடவுள் வாழ்த்து

இரக கோரம் பணைத்தென்ன நான்முகக்
கிழவ னிட்ட விதிதப்பி னாலென்ன
நரக கோர மறலிவந் தாலென்ன
நமது சத்துரு சங்கார தாண்டவ
சரக கோர நிராமய பூரண
சண்மு காதி பதிமுரு கப்பன்கை
வரக கோர வடிவேலுண் டென்னிடம்
வைத்தி ருக்க வயதுபல் லூழியே.

அரி திருமருகன் துணை. **சிவகிரி முருகன் துணை.**

சிவமயம்.

நூல்

1. சரியை மார்க்கம்

ஆனந்த **மாறெழுத்** தாலய மாமென தங்கமெல்லாந்
தானந்த மாதி முதற்பொரு ளாவிசத் தாங்கமுநீ
மோனந்த முன்னுள தென்னுள துன்னுள தென்னுள தா
லீனந்தம் போக்கி யெனைநீய தாக்கிய வென்குருவே. 1

என்குரு வேகிருபை யானந்த மோன வெழிற்சிவனார்
தன்குரு வேபரை யீரா று கோலஞ் சமைந்த[1]னவைப்
பின்குரு வேவிந்து நாதம் பரம்பெரும் பேரொளிக்கு
முன்குரு வேமுரு கோனா றெழுத்தென்னு மூலங்களே. 2

மூலங்க ளேசிவஞ் சத்திவித் தா[2]யுன்னு முன்பிறந்த
சீலங்க ளேபஞ்ச [3]கர்த்தாவும் நின்வழி தேறியொரு
காலங்க ளேயொக்க வேகீ கரிப்பக் கடையுள்நின்ற
கோலங்க ளேமுரு கோனா றெழுத்தின் குணக்குன்றமே. 3

பிரதி பேதம் :— 1. நவைப். 2. யென்று. 3. கர்த்தாவி னின்வழி.

குணக்குன்ற மேயன்ப ருள்ளூ டுருவிக் குமுகு[1]மென்ற
மணக்குன்ற மேமுரு கா[2]வென் றன் கர்ம மாற்றிடுங்கங்
கணக்குன்ற மேயெங்கு மாறெழுத் தாயுருக் காட்டியபொற்
சுணற்குன்ற மேயண்ட பிண்டமொன் றாய்நின்ற சூத்திரமே. 4

சூத்திரம் நம்முடற் சக்கர மேருவைச் சுற்றியரை
மாத்திரை யிற்சந்திர சூரியர் போய்வரும் வாசி[3]தன்னைக்
காத்திர [4]மாய்விட்டு டேகத் திருத்துங் கருமவுனச்
சாத்திரங் கைவரும் நின்னா றெழுத்துந் தரிநெஞ்சற்கே. 5

நெஞ்சேபொற் பீட[5]ம்நந் தேகஞ் சிவாலயம் நீள்பொறிக
ளஞ்சே [6]யிவைபெறு மாதாரஞ் சத்தி [7]யருநிலைவிட்
டுஞ்சா துணர்வு முருகனி னாறெழுத் துன்னுவற்குச்
செஞ்சேவ[8]லவன் றனக்குச் சரீரமுஞ் சித்துமொன்றே. 6

ஒன்றே முருகனி னாறெழுத் தோசை யுலகமெல்லாம்
நின்றே பலபொருள் நீயென்றும் நானென்றும் நீதிவெவ்வே
றன்றே சமையங்க ளீராறு மாய்நின்ற வானந்தநீ
யென்றே தெளிந்தவர்க் கேகர்ம மாயை யிருளறுமே. 7

இருளறு மெங்கு மொளியாய் நிரம்பு மிரவுபகல்
[9]மருளறு மாயினும் வர்த்திக்குங் கர்த்தன்மட் டத்துயர்ந்த
பொருளறு கோணத்தி [10]னுள்(ப்)பே சரிய பொறியுள்நின்ற
வருளரு ணாசல வேலே யுனதெழுத் தாறுன்னவே. 8

உன்னரி தாமுரு கோனா றெழுத்தினை யு(ட்)ச்சரித்தார்க்
கென்னரி தாம்பொரு[11]ளொன்றுமில் லையிறப் பும்பிறப்பும்
பின்னரி தாமிவை யொன்[12]றன்றிப் பேசிப் பிரமனுடைத்
தன்னதி காரமுந் தப்பியப் பால்நின்ற தானவனே. 9

தானவ னாதிவி நாயக னான்முகன் சங்குசக்(கி)ர
வானவன் ருத்திரன் மயேசுர னீசன் வடிவிவையா
றானவ னாறு முகத்தன் பரசமை யையன்முரு
கோனவ னின்னெழுத் தாறே பொருளெனக் கொண்டவனே. 10

கொண்டனை கையிற் பரைவே லினைப்பின்பு கொக்கை
[ரெண்டாய்க்
கண்டனை மஞ்ஞையுஞ் சேவலு மாய்வரக் [13]காரணத்தில்(ப்)
பண்டனை யாதி பகவனிப் [14]போதெவன் பாலனென
விண்டனை யாறெழுத் தாய்முக மாறுடன் மேவியதே. 11

பிரதி பேதம்: 1. மென. 2. வெனவே வினைமாற்றிடு, 3. தனிற். 4. லாயம் விட்டேகத். 5. நந்த. 6 பெறுமிவை. 7 யருணிலை விட். 8. லன்றன் றன்க்குஞ் 9. மருளறும் வாய்வும். 10. னுள்ளே புலன்பொறி பேசரிய 11. ளொன்றும் பிறப்பு மிறப்புமறப். 12. றென்றைப் பேசிற். 13. காரணத்தாற். 14. போதவன்.

மேவிய வாதி சிவாய சதாசிவ வேலைதனி
லாவிய நம்பெரு [1]மாள்மரு காவென்றுன் னுறெழுத்தைத்
தாவிய வுள்ள [2]மதர்க்கவெண் ணீற்றைத் தரித்துனையே
கூவிய பேர்கள்முன் னஞ்சலென் றேவந்து கூடுவையே. 12

கூடுவை நீயன்ப ருள்ளா லயமெனக் கூடியிருந்
தாடுவை நீமுரு கோனு றெழுத்தினை யாரொருவர்
[3]நாடுவர் நீயவர் கர்மந் துடைத்து நரகறுத்துப்
போடுவை நீயென்று கண்டோர் கடைவெல்வர் புத்தியிதே. 13

புத்தியு நீமுரு கோனு றெழுத்தின் பொருளறியச்
சத்தியு நீசிவ மாகுமாய் நின்ற[4]ச ரூபமுக
சித்தியு நீயன்பர் பார்க்கின்ற ஞானத் தெளிவுதரு
முத்தியு நீயன்றி வேறில்லை வேத முடிந்திடமே. 14

முடிந்திடம் பேச்சற்ற மோனமெஞ் ஞான [5]முதல்வநின்னைப்
படிந்திட மேபதி பாசம் பசுவிருள்(ப்) [6]பற்றதற்று
விடிந்திடந் தானெனும் நானெனும் [7]யாவையும் விட்டெவையுங்
கடிந்திடத் தப்புறத் தப்புறத் தானந்தங் காணுமதே. 15

காணுமென் பால்முரு கோனு றெழுத்தின் கனியையுண்டே
பூணுமென் பாலைம் புலனுமொன் றுய்ச்சரம் பூரித்துள்ளாய்த்
தோணுமென் பாலிற் சுழியூ டசைவற்ற சோதியொத்தா
லாணுமென் பாற்பெண்ணு மென்பால் நின்பாலென்
[றறிவதுவே. 16

அறிவது வேதெனில் நின்னு றெழுத்தஞ் செழுத்ததிலே
பிரிவது மவ்வெழுத் தண்டபிண் டத்திற் பெருஞ்சிற்றிலாய்ச்
செறிவது [8]மப்புறம் நின்றோ ரெழுத்துத் திகாந்தமுட்டி
மறிவதுங் கண்டுதன் னுள்ளே தெளிந்த மவுனங்களே. 17

[9]ஏதானு மாறெழுத் துள்ளஞ் செழுத்தென் றெடுத்ததெல்லாஞ்
சூதாக நானென் றுருப்பண்ணும் வாறதைத் தூக்குதற்கோ
ராதார மாகி யகமும் புறமு மருவுருவா
மோதா துணர்வு முயிரு[10]ம தாய்நின்ற தோரெழுத்தே. 18

பிரதி பேதம்: 1. மான். 2 மதாக. 3. நாடுவை. 4. சாருவமுக. 5. முதல்வனெனைப். 6. பற்றகற்றும். 7. மாயையை. 8. மப்புறந் தோரெழுத் தானந்தத் 9. ஏதேனு 10. மொன் றுய்நின்ற

ஓரெழுத் தாதி நிராமய மைவரு முன்னறியப்
பேரெழுத் தவ்வெழுத் தேயம்மை தேவி பிறங்கவள்பா
லாறெழுத் துஞ்சடை [1]யானவ தார மவனுடைம்மை
சீரெழுத் தாறுமோர் வேளா யெடுத்த திருவுருவே. 19

திருவுரு வாகிய செவ்வேள் முருகனம் சிந்தை[2]யுள்ளே
யருவுரு வாய்நின்ற தாறெழுத் [3]தாயுன்னை யாண்பெண்ணிதென்
றுருவுரு வாய்க்கொளப் போகா தவரவ ருள்ளத்திலே
கருவுரு வெப்படி யப்படி யேநின்ற காரணமே. 20

காரண காரிய மிரண்டையுந் [4]தாண்டிக் கடவுள்முன்னுட்
பூரண ஞான முகமாய்ப் பிரவேசிப்பப் [5]பொங்க(ள)[ழ]லை
யாரணங் காப்ப வதுவே யருவுரு வாயனந்த
நாரண ரூபமுஞ் சங்கர வேடமும் நண்ணினதே. 21

நண்ணின வாறு முகமா முருக நமதுள்ளத்தி
லெண்ணின காரிய மெல்லாந் தரும்பொரு ளெல்லையில்லாக்
கண்ணிநின் றுறெழுத் தானமெய்ஞ் ஞானக் [6]கருப்புயர்ந்த
[7]மண்ணினும் விண்ணினும் யாவுமொன் றுய்நின்ற மாமயமே. 22

மாமய மாமுரு கோனு றெழுத்துமட் டற்றஅரி
ஓமய மாமவ்வு முவ்வும தாய்ச்சுழித் தோங்குமுச்சிப்
பூமய மாய்ச்சிவ மாய்ப்பரை யாய்ப்பற் [8]பொறியொடுநி
ராமய மாயெங்குந் தானு யிருந்த ரகசியமே. 23

ரகசிய மாமுரு கோனு றெழுத்தையும் நம்புவர்க்குச்
சுகசெய மன்றி யபசெய மில்லை தொழில்படுத்தில்
முகசெயந் தம்பன மோகனம் [9]பேதன முன்னுளிப்போ
டகசெய [10]முச்சம்சங் காரமெட் டெட்டுக்கு மாதியதே. 24

ஆதி பரைகங்கை தெய்வானை வள்ளி யரன்முருகோன்
சோதி முகமைந்து மாறு முகம்மழுச் சூல்கதிர்வேல்
கோதி விடப மயில்கொன்றை மாலை குளிர்கடம்ப
மோதிய வஞ்செழுத் தாறெழுத் தாஞ்சுட ருற்பனமே. 25

சுடர்சங்கு சக்கரம் வேல்சூல் மழுவிற் சுரிகைகுலி
சடர்தண்டு தெண்டுகோ டாரிவிட் டேறரி வாள்கரக
மிடர்துஞ்சு பாச மெறிபாறை மானுடை ராறுகையும்
படரும் படிபொங்கி யாறெழுத் தங்கி பரந்ததுவே. 26

பிரதி பேதம்: 1. யானவ ளோடவ தார மம்மை. 2. பற்றி. 3. தாமுனை. 4. தாங்கிக். 5. பொங்கனலை. 6. கரும்புயர்ந்த. 7. மண்ணினம் விண்ணினம். 8. பல பொருளாய். 9. பேத முன்னுளி லிப்போ. 10. முச்சமுஞ் சங்கார மெட்டுக்கு.

பரந்தந்த ணர்செய்கை பல்லா [1]யிரத்தினும்பட் [2]டுடுருவி
நிரந்தந்த ரஞ்சிரம் பாதாளம் பாதம்நின் றோர்முகமாய்த்
துரந்தன்றி யாவையுஞ் சூர்கழு வேற்றித்தோம் மென்னடித்
தர[3]ன்சுந்த ரன்சங்க ரன்சம்பு வாய்நின்ற தாறெழுத்தே. 27

ஆறெழுத் துண்மை யறியார்கள் கர்ம மறுக்கவப்பால்
வேறெழுத் தில்லைவெண் ணீறில்லை மால்சிவ வேடமில்லை(த்)
தேறெழுத் தேதயன் கையுங் கருக்குழிச் [4]சேறதும்பின்
மாறெழுத் தந்தகன் றென்புலத் தேயென்றும் வவ்வுவரே. 28

வவ்வுநின் றாட்கன் [5]பில்லாரே நரகத்தை வவ்வும்வஞ்சற்
கெவ்வழி மோட்சத்துக் கேதுவென் றாலெழுத் தாறுளநின்
சவ்வுரவ் வுமவ்வு ணவ்வுபவ் வுவ்வட் சரத்திலொன்றைக்
கவ்வுங்கவ் வோர்சொற் பிறந்தா லுடன்கதி காட்டுமதே. 29

கதிகாட்டு மோரெழுத் தோரெழுத் தேவச்சிர காயந்தரும்
நிதிகாட்டு மோரெழுத் தோரெழுத் தேயுண் ணிரப்புமருள்
மதிகாட்டு மோரெழுத் தோரெழுத் தேயென்னுள்
[வைத்தபொற்றாட்
டுதிகாட்டு மேருக நின்னா றெழுத்துள்ள சூத்திரமே. 30

திரமே முருகனின் னாறெழுத் தங்கிதன் சிந்தை[6]பற்றப்
பரமே [7]யிதென்றுள் ளுணர்ந்தார்க்கு மன்பர் பழவினைநெட்
டுரமே சிதையும் பிறப்பறுங் கூற்று மொழியுநில
வரமேயெக் காலமுஞ் சாகார் சிவசித்தர் மாநிலத்தே. 31

நிலத்தே [8]யிறப்பும் பிறப்பு மருக்கர்மம் நீங்கு[9]மெப்போ
தலத்தே மிதக்கினு மேமுரு காவென்றுன் னாறெழுத்தைப்
பிலத்தே பிடித்தவ ரப்பால்நின் னானந்தப் பேரொளிநிற்
சலத்தே மிதப்பரல் லால்பின்னை வேறு தடையில்லையே. 32

தடையாது பாசஞ் சறுவாது மாயை சரமறுகி
யுடையாது காய முலையாதுள் ளாவி யுலகிலினிப்
படையா தயன்கைப் பவநீக்கி ஞானப் பரத்துறைவா
னடையா[10]தெங்கெங்குஞ் சிவமாகக் காட்டுநின்
[னாறெழுத்தே. 33

பிரதி பேதம்: 1. யிரமும், 2 டுடுருவ 3. னந் தரன்சங் கரன்சம்பு, 4 சேர்தலும். 5. பிலாதார். 6. பற்றிப், 7. யிதுவென் றுளநோக்கு மன்பர். 8. பிறப்பு மிறப்பு. 9. மிப்போ. 10. தெங்குஞ்.

எழுத்தாறு மொன்றுபட் [1]டேகீ கரித்துள் ளெழுந்தொளி
வழுத்தாத மூல முருகன்பொற் றுளிரண்டும் வைத்துளத்தே
பழுத்தோகை யன்போ டிரவும் பகலும் பரமுனக்கென்
[2]றழுத்தாவ சத்தர் பிறவிக் கடல்விட் டகலரிதே. 34

பிறவிக் கடற்குடற் சம்பர னம்மாவிப் பெருஞ்சரக்கி
லறவைத்த பத்தொன்ப தாறுமச் சாணி யயன்கையினு
லுறவைத்த மந்திர மூன்றுநங் கூரமுன் னஞ்செழுத்துந்
துறவைத்த ஒட்டன் குகனு றெழுத்தின் சுய[3]கர்த்தனே. 35

கர்த்தன் பரங்கிரி சீரலை யேரகங் காண்பலகுன்
றத்தன்றென் சோலை மலையாவி னன்குடி யாறு[4]மோர்பா
லித்தன்ப தாயென்னு ளாதார மாறும்வெவ் வேறுருவாம்
பித்தன் சருவ குருவாஞ் சடாட்சரப் பேரொளியே. 36

குருவான வய்யன் சடாட்சரத் தாகமங் கூறில்முன்னே
யருவான வெட்ட வெறும்பா (ளு)[மு]ரையுணர் வற்றவிடம்
பெறுவா [5]னழிவு தெளிவா யளவற்ற பேரொளியா
யுருவா னதீத முருவாம் படிகனிந் துற்றதுவே. 37

உற்றது மிவ்விட மிவ்வண்ண மின்னதென் றோதநினைப்
பற்றதும் பற்றற் றதுமன்பர் பாவ[6]க மாச்சதங்கே
[7]பெற்றது மெவ்விட மோமூச்சு விட்டது பின்பசைவாய்ச்
சொற்றது சொற்றிடத் துண்டுமிழ்ந் [8]தேங்கித்
[துணுக்கென்றதே. 38

[9]துணுக்கென் றுபமுறச் சரணஞ் சரமெனத் தோற்றியொரு
[10]கணுக்கென் றிலைத்துடன் பூத்தது காய்த்துக் கனிவடிவாய்த்
திணுக்கென்று வூடொரு செக்கரும் பச்சையுந் திங்களுமா
யணுக்கண்ட துண்டில்லை யென்றே நிசபர மானதுவே. 39

பரமான தாதி சிவனுதி சத்தியுற் பத்திமுற்றி
யுரமான பார்வை யுறுவிந்து [11]நாதத் துதிமவுனந்
திரமான சற்குரு தேசிக னாமன் [12]றிடாரித்துத்
தரமா மகார முகாரமோங் காரித்துச் சத்தித்ததே. 40

சத்தித் தவளவன் றானு யவனவள் தன்[13]வடிவாய்
முத்தித்த பச்சை முழுமுத [14]லாளசண் முகவடிவா
யத்தித் தறு[15]சம யந்தொழி லாறுக்கு மாறெழுத்தாய்ச்
சித்தித்தென் னுவி விளையாட லண்டத்தின் செய்கையிதே. 41

பிரதி பேதம்: 1. டேகிக்கருத்துள். 2 றழுத்காத 3 கத்தனே 4. மேபா. 5 னிழிவு 6. கம் பாச் சதங்கே. 7. பெற்றவ துந்கா மோ. 8. தோங்கித். 9 துணுக் கென்று பன்முர சாஞ்சா மென்னத் துவன்றி. 10. கணுக் கண்டிலைத். 11 நாதந் 12. றிடாரித்தவுத் 13 னு ருவாய். 14. லாய்ச் 15 சமையத்.

அண்டத்தி லுள்ளது பிண்டத் தினு[1]முண்டவ் வாறெழுத்திற்
பண்டத்திற் சத்த கோடிமகா சித்துப் பண்ணுதற்காய்த்
[2]துண்டித் துடலுயி ராயே பரைசெய்த சூத்திரத்தால்
கண்டித்த [3]**தோநம சிவாய** வென்றுருக் காட்டியதே. 42

சரி(தை)[யை] முற்றும்

(இப்பால் கிரி(கை)[யை]ச் சொல்லுகிறது.)

சிவமயம்.

2. கிரி(கை)[யை]

[4]உருவா மம்மூல மதுவட்டம் நாலித ழுள்ளின்முக்கோ
டருவாம் பிரணவ சத்தியுட் சவ்வுஞ் சருவமய
குருவாம தோமுக மவ்வே தியாநங் குளிர்ந்தலிங்க
மருவா மவையிவை தானே கணபதி யானதுவே. 43

ஆனமண் ணறிதழ் நாற்கோணம் பொன்னிற மஞ்சுகுண
[5]மீனமிம் மூல[6]ம துள்ளேரவ் வாகு மிவை[7]யுவந்த
பான மமிர்த முகஞ்சத்தி தேவிசொற் பாரதியாள்
தானுயிர் மந்திரம் நவ்வாகு நான்முகன் சக்கரமே. 44

கரமாய வப்பிரு கோணவெண் பத்திதழ் காண்குணம்நான்
குரமா யருளவ்வு மப்பலங் கார முடந்தையதாய்
வரமாய தேவி திருமுகம் வாம மந்திரமே
திரமாய தோநமோ நாராய ணஅரி செய்கையிதே. 45

அரிவன்னி செம்மைமுக் கோணமு மூன்றித ழா[8]திரண்டாந்
தரியுண்மை ணவ்வுஞ் சிவஞ்சத்தி [9]பார்ப்பதி தானுளதாம்
பரியுண்ணல் [10]தோத்திர மகோர [11]முகமன்பர் பாவமறத்
தெரியுண்மை மந்திரஞ் சிகாரமும் ருத்திரன் சேவடியே. 46

அடியான வாயுக் கறுப்பறு கோண்பதி னறிதழ்மேற்
றிடியா னிரண்டு குணம்பொருட் பவ்வவ்வு டேகலிங்கம்
பிடியான சாம்பவி சத்தி முகந்தற் புருடமருட்
[12]டுடியான மந்திரம் வகார மயேசுரன் றேற்றங்களே. 47

தோற்றிய வானது தூனிற வட்டந் தொடுமிதழ்ரண்
டேற்றிய வோர்குணம் [13]வவ்வாம் பரம்பற்றி யேபிரியஞ்
சாற்றிய பங்கில் மனோன்மணி தேவி[14]யீ சானமுகம்
போற்றிய [15]யவ்வரி றீயுஞ் சதாசிவ பூரணமே. 48

பிரதி பேதம்: 1. முண்டிவ். 2 துண்டத். 3. தோ நமச் சிவாய மென். 4. உருவான. 5 மீனமில் 6 மதனுளே ரவ்வாகு. 7 யுயர்ந்த. 8. றிரண்டாய்த். 9 பராபரை. 10. கோத்திர. 11. மன மன்பர் 12 தடியான வம்மந் ரதிமே மயேசுரன். 13 மவ்வவ்வாம் பரம் 14. யீ சானிய முகம். 15. லவ்வரி.

பூரண மாகிய வான்கா லனலப்புப் பூமியிவை
[1]தாரணி மூலமுந் தாளுகி யோரிதழ்த் தாமரைமேல்(க்)
காரண [2]மாமவ்வு மவ்வுள்ளாஞ் சுடர்பிறைக் காட்சியுமா
யாரண யோகி பராசத்தி தேவிநின் றங்கமிதே. 49

ஏயு மிதழன்பத் தொன்றினும் நின்ற தெழுத்துறுப்பாங்
காயுமுட் சக்கர மாரு றெழுத்துமோர் காத்திரமுயிர்
பாயும் பிரணவ மேபரை தோற்றம் பலசிற்[3]றில்கொண்
டாயு முடல்பொரு ளாவியு [4]மென்சுழி யானந்தமே. 50

சுழியா தொருவற்குந் தோயாதி தன்பர்க்குந் தோயும்வெட்ட
வெளியா திணையில்லை மெய்ஞ்ஞாை நீதம் விளங்கியசொற்
றளியா றெழுத்துள் ளவதார மாறொடு [5]தற்பரைவிட்
டழியா திடத்தில் குருமுரு கோனின்ற ததிசயமே. 51

அதிசய மாறெழுத் தாறு சிவமு மறுமுகமாய்க்
கதிசெய்யு மூரற் பரைநெற்றிக் கண்ணெனக் காட்சியுமாய்
விதிசெய்யு மாமயில் மேற்சத்தி யாவுங்கை வேற்படையாய்த்
துதிசெய்யு மன்பர்முன் ஓங்கார வட்டத்துட் டோன்றியதே. 52

ஓங்கார வட்டத்துள் ளாதார மாறும்விட் டோங்கியரி
றீங்கார வட்டத்துள் ளேவிந்து நாத மிணைச்சுடர்மேற்
பாங்காம் [5]பரைசிவ [6]மிரண்டுமொன் ருயப் பரவெளிநின்
ருங்காரத் தாண்டவி யாறெழுத் தாறு முகத்தம்மையே. 53

ஆறு முகத்தம்மை வேலாயி நின்னெழுத் தாறுமுரு
வேறு முகத்துக் கிலக்கோர் முகமில்லை யென்வினையைச்
சீறு முகத்தி குமராயி யன்பர்சிந் தித்துநினைப்
பேறு மளித்தவற் குள்ளெழுத் தாந்திறல் பெண்கொடியே. 54

பெண்கொடி யேபர மாயிசி வாயி [7]பிரணவத்தி
னண்கொடி யேமுரு காயிகு காயி நலமுடைய
பண்கொடி யேயென் னுளமே யிரவும் பகலும்விடா[த்]
தண்கொடி யாதி சடாட்சரீ யீச்வரி யம்பிகையே. 55

அம்பிகை யன்பத்தோ ரட்சரி யு(ட்)[ச்]சரி யன்பர்தமைத்
[8]தம்பிகை வெவ்வினை சங்கரி சூலி [9]சரமசரந்
தும்பிகை யைந்துடை [10]யான்றொழி லைவர்ச் சுதன்களெனக்
கும்பிகை [11]யன்பர் வல்லி சடாட்சரி குண்டலியே. 56

பிரதி பேதம்: 1. சாரண, 2. மவ்வு மவ்வு முளதாம். 3 றியல்கொண் 4 யும் வெள் சுழி. 5 பரசிவ, 6. ருகப். 7. பிரணவமா 8. வெம்பிகை 9. சாந்தநவத், 10. யான்றெழில் வாசுகி தானவளே. 11. யம்பர்.

குண்டலி பாரதி லெட்சுமி பார்வதி கோமளைபூ
மண்டலி சாம்பவி தேவி மனோன்மணி வாகினிப்ர
சண்டலி காரிய காரியு காரி சடாட்சரிமா
விண்டலி யாண்பெண் ணிரண்டுரு வாய்நின்ற
[மின்னொளியே. 57

மின்னொளி [1]யண்டபிண் டங்கள் சராசரம் விண்ணுமண்ணுந்
தன்னொளி [2]யாதி சடாட்சரி சாம்ப [3]சதாசிவமென்
றுன்னொளி ருத்திர னீசுரன் மாலய னோதரிதா
மன்னொளி யைவர்க்கு மாதாவுந் [4]தையலு மானவளே. 58

மாதா(ப்) பிதாகுரு(த்) தெய்வம் பெறுதவ மற்றுமுள்ள
தாதா [5]வழியிட்ட காமிய மோதுஞ் சடாட்சரமென்
றுதார மென்த னுடல்பொரு ளாவி யருள்பலநீ
பாதார விந்தமுந் தந்தென்னைக் காக்கும் பராசத்தியே. 59

பராசத்தி யுத்தமி பாசாங்கு சத்தி பரஞ்சுடராம்
நிராசத்தி நீறணி பூரணி காரணி நிர்மலி[6]யாம்
வராசத்தி யாதி வடுகாயி யட்ட வயிரவியாந்
தராசத்தி ருத்திரி சடாட்சரி நிட்கள தாண்டவியே. 60

தாண்டவி[7] கௌரி மயிடா சுரன்சிரந் தட்டழியத்
தீண்டவி [8]பாசுப ராக்கிரம சூலினி சீறரவு
பூண்டபி ராமி [9]நிராகபொன் னம்மையென் புன்மையறுத்
தாண்டவி பஞ்ச[10]ம வல்லியொ ராறெழுத் தானந்தியே. 61

[11]ஆனந்தி யம்மைவ ரேபுவ னாயி [12]யரகரச
தானந்திக் கால [13]வடவாக் கினிசிவ சம்புபர
மானந்தி பேதன மாமாயை ரூபி[14]வ ராகிகமழ்
தேனந்தி பூங்குழல் வாலை புவனை திரிபுரையே. 62

திரிபுரை யாறெழுத் தாங்காரி நங்கலி சிந்தவறுத்
தெறிபறை[15]நம்பகை யென்பாரை வேல்கொண் டெறிந்துயிரைப்
பறிபறை யென்னுள மேகோயி [16]லன்பொரு பாயினுமா
மறிபறை யென்னகம் நின்னக மாய்க்கொண்ட மாதங்கியே. 63

பிரதி பேதம்: 1 யாயண்ட பிண்டஞ் சராசர. 2. யான. 3 சதாசிவமே. 4. தந்தையு, 5. வலியிட்ட. 6 யென். 7 யேமயி டாசுரன் றன்சிரந் 8. பாத. 9. நிராகிபொன். 10 பஞ்ச சபை வல்லி யாறெழுத். 11. ஆனந்தி யம்மவ. 12. யவரவர். 13. வடவாகினி தான்சிவ. 14. வாதி மகள். 15. நண்பகை. 16. லன்புறு பாயனுமா.

மாதங்கி யன்பர் பிறவிக் கடலை வடவனலாய்க்
கோதங்கி முன்னை வினையையுங் கூற்றையுங் [1]கோதியுள்ளத்
தேதங்கி நின்று விளையாடும் பெண்பிள்ளை யென்செவிக்கே
போதங் கிலிஐயுஞ் சவ்வுமென் றோதிய பூரணமே. 64

பூரண [2]மாயென்னப் போக்கும் பிறப்பைப் புணர்கிலியின்
காரணம் நின்னருள் காட்டிடுஞ் சவ்வென்னக் கன்னிகைநின்
னூரண [3]தற்சொ ரூபமவ னுக்குவை யாறெழுத்தின்
நாரணன் நான்முக னைமுக மாய்நின்ற நாயகியே. 65

நாயகி நின்னன்பர் நின்பாதத் தர்ச்சிக்கும் [4]நற்கடம்பென்
றோயகி லாரமுஞ் சாந்தமுங் கொன்றை[5]த் தொடையிலும்நின்
சேயகி லாண்டமென் [6]றேற்றிய வய்வர் திருமுடிக்கே
யாயகி லாண்டமுந் தேக்கநின் றாறெழுத் தட்சரியே. 66

அரிஓம் நமோத்து சிந்த[7]ம காரமுத லவ்வுள்வவுந்
[8]திரிவான மந்திர மீரா றெழுத்[9]தும்நின் சிற்றில்பல
விரிவா கியவண்ட பிண்ட சராசரம் பேதமெவ்வுந்
[10]தரியாது கண்ட தவ்வுஞ் சிவாய வசியென்பதே. 67

அவ்வுஞ் சிவாய வசியென்னு மந்திர மஞ்சுடன்மூன்
றெவ்வுஞ் சிவாட்சர மும்மண்ட லத்திலு மோட்ட[11]வுடன்
கவ்வுஞ் சிவசத்தி யைச்சத்தி யாவியைக் காக்குமவ்வுஞ்
[13]சவ்வுஞ் சிவசிவ [14]வென்பா ரிருவினை தாமறுமே. 68

[15]அறுமாம் பசுவன்னை யையன் குருவந் தணரடைந்தோர்
மறுமாதா கெற்பஞ் சிசு[16]ரட்சி யாது வதைபலவுஞ்
செறுமா வகுதி சிவத்துரோகத் தீயையுந் தின்னும்நின்னைப்
பெருமா தவர்க்கெழுத் தாறுங் குடிலப் பெருநெருப்பே. 69

நெருப்பு நெருப்பு பிரணவப் [17]பென்னுந்தன் னெஞ்சுவஞ்சர்க்
கிருப்பு நெருப்புக் கபாடம் நின்னன்பர்க் கிரவிவெண்ணெய்
கருப்பு நெருப்பரை காணார்மெய் கண்ட கனிகயிலைப்
பொருப்பு நெருப்பு[18]க் கிருளறு மஞ்ஞானப்
[பொறிக்கொழுந்தே. 70

பிரதி பேதம்: 1. கோரி யுள்ளத். 2. மய்யெனப் 3. மானசொ ரூபம தாக்குவை. 4. நற்கடிமன். 5. யந் தொடையலுஞ் 6. றேற்றிய யையவர். 7. மகர முத லவ்வளவுந். 8. தெரிவான. 9. தினிற் சித்துபல. 10 மறியாது கண்கண்ட. 11. வுனக் 12. சிவஞ் சத்தி யாவையுங் காக்குங் கருணைகுரு. 13. மவ்வுஞ். 14. வென்பார்க் கிரு வினை 15. அறுமாப். 16. ரட்சித் தோர்கள். 17. பெண்ணுந். 18. விருப்புறு ஞானப்.

கொழுந்தே மரகதக் குன்றே யிரத்தினக் கொடுமுடிபூத்
தெழுந்தே பிரகாசிப்ப வீரே மூலகெண் டிசைபுவனந்
[1]தொழுந்தே வறுதொழில் வேதம் பலவெழு தோற்றமெம்மை
யழுந்தார்முன் பெற்றெடுத் தாள்திற லாறெழுத் தட்சரியே. 71

அரிஓம் மரகர அவ்வுஞ் சிவாய அஅங்கிஷஆ
கிரியோம்ஐ யுங்கிலியுஞ் சவ்வுஞ் சவ்வுங் கிலியுமையு
மரியோஞ் சுரும்ப வாஉச்சு மிரியும் ரீயூஞ்சிரியுந்
திரியோங் கிலியுஞ் சரவண பவாயி சிவகுருவே. 72

குருவாந் திரிபுர பவமாயி யான குமரிமகா
திருவாந் திகழொளி பவ்அவ்வு மான சிவக்கடலே
மருவாம் பரிபுர பவமான வானந்த வாரிபெருங்
கருவாஞ் சயிலொளி பவஆயி யென்னுங் கயல்கண்ணியே. 73

கண்ணி [2]யென்னுஞ் சரவண பவதேவி கமலனரி
நண்ணூர் புரமெரித் தோன்மூவ ரைப்பெற்ற நாயகியே
பண்ணூர் [3]பவமொளி பவஞான மான பராபரையே
பெண்ணி [4]ரவற்கு அஆவென்று நின்ற பெருஞ்சுடரே. 74

அஆஇஈ உஊ எஏஓஓ வென்னு மஞ்செழுத்தி
இஈ [5]உஊ எஏ ஓஓம் நமோ நாராய ணயவென் றெட்டெழுத்தி
உஊ எஏ ஓஓ அவ்வுமதா மன்பத் தோரெழுத்தி
எஏ ஓஓ சரவண பவ [6]அவ்வு மதாய்நின்றதே. 75

அவ்வும் உவ்வுமவ்வும் [7]ரீங்கோ ணடையுங் கிலியும்
சவ்[8]வும் பரைசிவம் அங்உங் [9]சங்கென்ற சத்தமிரண்டும்
ஒவ்வுஞ் சரவண பவ[10]மான தென்ற வொருவனரு
ளெவ்வு [11]மரிகுஃ ரெண்டுந் தாண்டிநின் [12]றேதெழுத்தே. 76

கிரி(கை)[யை] முற்றும்.

(இப்பால் யோகத்தைச் சொல்லுவது)

சிவமயம்.

பிரதி பேதம்: 1. தொழுந்தே வுறுதொழில் 2 சரவண பவவாயி தேவி. 3. பவனொளி. 4 ரிவர்க்கு. 5, ஓ ஓ நம நாராயணவென். 6. அவ்வுந் தானின்றதே. 7. ரீயுங்கோ ணடையு, 8. வுஞ்சவ் வும்பரை. 9. ஒங்ரீங்கென்ற. 10. வென்ற. 11. மரிக்ஷ. 12. றேற யேகெழுத்தே.

3. யோகம்.

அரிக்கு முதற்பொரு ளெப்பொரு ளண்ட பிண்[1]டமுமங்
குரிக்குஞ் சடாட்சரத் தோசையைப் பற்றுங்
குணமறிந்து(ட்)[ச்]
சரிக்குந் தொழும்பர்க்கு ளாதார மாறுந் [2]தமக்குமருள்
மரிக்கும் பரவெளி [3]யாகும்நின் பாதம் வழிபடுமே. 77

வழிபடும் [4]வாசியை வர்சியுள் வாசலில் வாங்கியப்பால்
சுழிபடு மாறெழுத் தங்கியைக் கோ(ற்)த்துச் சுழ(ட்ட)[ற்ற]
[வல்லார்க்
கழிபடுந் தன்றலை மேலயன் கையெழுத் தஞ்செழுத்துங்
கழிபடும் பின்பு யமனோலை யில்லை கனவிலுமே. 78

கனவான மாயையிக் காயம்விட் டாவி [5]கடக்குமுன்னே
மனமான பாவியைத் தன்வச மாக்கி வசியெனுமுற்
பனமான [6]யேணியிவ் வாறெழுத் தேற்றிநின் பாததெரி
சனமான யோகி யழியானெக் காலமுஞ் சத்தியமே. 79

சத்திய மூலத் திரவியை யூன்றிச் சரநிரைமேற்
பற்றிய தீயிலஞ் சத்திரத் தெல்லையும் பாழ்படுத்தி
முற்றிய சந்திரக் கலையூ டுருவி [7]முடிவிலென்னை
யத்திய சீவன் சிவமாகக் காட்டும்நின் னாறெழுத்தே. 80

ஆறெழுத் தானநின் னானந்த மன்பத்தோ ரட்சரத்துக்
கீரெழுத் தோரெழுத் தஞ்செழுத் [8]தெட்டெழுத் தேத்திவல
மாறெழுத் தங்கி வடிவாய்க் கடாசல [9]வாசல்புகுந்
[10]தூரெழுத் துண்ணமிர் தஞ்சிவ [11]யோகியி துற்பனமே. 81

உற்பன மாகிய வோங்கார [12]வட்டத்தை யூடுருவி
யற்பெனு மாக்கையி னுள்ளே சிவாவெனு மட்சரத்தைச்
சற்பன பாஷைக்குந் தாயா றெழுத்தினுட் டாக்கியன்பால்
நிற்பன யோகி தவச்சை யாதிது நிச்சயமே. 82

[13]நிச்சி நிலாக்கொழுந் தாறெழுத் தங்கியை நிர்மலமா
யுச்சியு மூலமும் [14]நோக்கிரண் டாலமைத் தோரெழுத்தவ்
வச்சினை நாட்டி சிவாக்கினி மூட்டிநெஞ் சண்டபிண்டம்
[15]வச்சிர யோகி யவனே வயிரி மகாசித்தனே. 83

பிரதி பேதம்: 1 டங்களுக்குங், 2 தகருமிருள். 3. யாதார மாறும் 4. வாசலில் வாசியை வாசலுள் 5 கடரு முன்னே, 6. வேணியி லாறெழுத் தேத்தி 7 முடிவில் வின்னை. 8 ஈரெழுத். 9. வாசல்புகு. 10. மூறெழுத். 11. யோகிக்கி. 12. வட்டத்தி னூடுருவி 13. நிச்செய நீலக் கொழுந்தா றெழுத்தங்கி நிர்மலமா. 14. பார்வைரண். 15. வச்சிரு.

சித்தனுஞ் சீவனுந் தேகமும் வாசியுஞ் சே(ர்)வைசெய்யும்
பத்தனும் பாசமும் [1]பார்வையும் பாத்துப் பதனமதாய்க்
கத்தனுங் கப்பலுங் காற்றுங் கடலுங் கயறுங்கள்ள
எத்தனும் பாதையும் பார்த்தோடு வார்கரை யேறுவரே. 84

ஏறுவ துன்கண் செவிமூக்கு நாக்குநெஞ் சத்தைரெண்டு
கூறுசெய் தந்தரங் கத்தே மனது குருவெனவே
தேறுவ தாதியு மந்தமுந் தாக்கிச் [2]சிவனடுவா
வாறுத [3]லம்வறை ஆறையும் பார்ப்பதிவ் வாறெழுத்தே. 85

ஆறெழுத் தோரெழுத் தால்பொர வாசிவ்யை யச்சமன்றி
யாறெழுத் தோரெழுத் [4]தால்கடி வாளமிட் டந்தரங்கத்
தாரெழுத் தோரெழுத் தாற்கல் [5]லனைவைத் தங்க[6]வடி
யாறெழுத் தீரெழுத் தோரெழுத் தேத்திட வானந்தமே. 86

அந்தத்திற் பிங்கலை யாதியி லேயிடை யாக்கியர
விந்தத்திற் பாய்ந்து சுழிமுனை போய்ப்பெரு
[வெள்ளத்துள்ளாய்ப்
பந்தத்த னற்கதிர் பான்மதி நாதப் பரப்புமுப்பா
ழிந்தக்கண் காட்சிக் கப்பாலென் னையாண்ட விறையிருப்பே. 87

யோக முற்றும்.

(இப்பால் ஞானத்தைச் சொல்லுவது.)

சிவமயம்.

4. ஞானம்.

இறை[7]யிருக்கு மிடமெய்தி னுங்காந்த னிடம்புகுந்தாள்
மறையிருக்குங் கயிலைக்கோப் பெறுமட்டு மருவலன்றிச்
சிறையிருக்கும் படியித் தலங்[8]கொஞ்சச் சிணுக்கைவிட்டோர்
துறையிருக்கத் துறைசென்று டக்கன்னி தொடக்கறுமோ. 88

தொடக்கறு மின்பமுந் துன்பமுங் கட்டிச் சுமந்தலையும்
விடக்கறு மெய்பொய் விருப்பு[9]ம் வெறுப்பினும் வெட்டவெளி
நடக்கிற பாதை நடக்கறி யாமல் நடக்குமிந்தச்
